www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 14 | மார்ச்- ஏப்ரல் 2007 | பக்கம் 20 | விலை 20/- | சுழற்சி 101

# அரசியல் தீர்வுத் திட்டம் நேர்மையாக முன்வைக்கப்படுமா?

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை விரைவில் முன் வைக்க இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். தெற்கில் உள்ள கட்சிகளின் இணக்கப் பாட்டுடன் பெரும்பான்மையான சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதில் தான் கவனமெடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். தமது சொந்தக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வுத் திட்ட யோசனைகள் ஒருவார காலத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.


இதனை அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் ரிச்சேட் பௌச்சருக்கு புது டெல்லியில் இடம் பெற்ற சார்க் மாநாட்டுச் சந்திப்பின் போது ஜனாதிபதி ஒருவகை உறுதியளிப்பு போன்று கூறியுள்ளார். அதேநேரம் இலங்கையில் சமாதானம் ஏற்பட அமெரிக்கா முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என அமெரிக்க உதவிச் செயலாளர் கூறி இருக்கிறார். மேலும் ஜனாதிபதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து உரையாடிய வேளையில் ராணுவத் தீர்வின் மூலமாக அன்றி பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வையே இந்தியப் பிரதமரும் வற்புறுத்தியிருக்கிறார். இவ்வாறு அமெரிக்கா இந்தியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் புதுடெல்கிச் சந்திப்பில் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வ என்பனவற்றை மீண்டுமொரு முறை வற்புறுத்தியிருக்கிறார்கள். இவ் இரு நாடுகளும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை இன்றைய நிலை வரை மிக மோசமாக வளர்வதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆற்றிய பங்கும் பணியும் எவ்வகையிலும் மறைக்கப்படவோ அன்றி மறுக்கப்படவோ கூடியவை அல்ல. இருப்பினும் இன்று தாங்கள் வளர்த்து விட்ட யுத்தம் என்ற பிசாசை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் வந்துள்ளமை கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். தமது சுயதேவைகளுக்காக முரண்பாடுகளை பயன்படுத்தி மோதல்களை உருவாக்கி வளர்த்து உச்சத்திற்கு கொண்டு வருவதும் பின்பு தமது தேவைகள் முடிவுற்று தமக்குரிய சமாதான சூழல் தேவைப்படும் போது சமாதான தேவதைகளாகவும் தூதுவர்களாகவும்

2ம் பக்.














## 2 லட்சம் அகதிகள்

## கிழக்கின் அவலம்

## என்று முடிவுக்கு வரும் எங்கள் இடப்பெயர்வு யார் பதில் கூறுவர்?

### தடுத்து வைக்கப்பட்டுள்ள

## புதிய – ஜனநாயக கட்சி உறுப்பினர்களை விசாரணைக்கு நிறுத்து ! அல்லது விடுதலை செய் !

கடந்த பெப்ரவரி 14ம் 15ம் திகதிகளில் எமது கட்சியின் மலையகப் பிரதேச முக்கிய தோழர்களான வி. மகேந்திரன் (வயது 32, ஆசிரியர்) ஆர். ஜெயசீலன் (வயது 30, ஆசிரியர்) எஸ். சுகேசனன் (வயது 30, ஆசிரியர்) எஸ். மோகன்ராஜ் (வயது 26, மாணவன்) என். கிருஷ்ணப்பிரியன் (வயது 23, திறந்த பல்கலைக்கழக மாணவன்) ஆகியோர் பயங்கரவாத தடுப்புத் திணைக்களப் பொலிசாரினால் (TID) கைது செய்யப்பட்டனர். "சிங்களப் புலிகள்" என வர்ணிக்கப்படும் மூன்று பத்திரிகையாளர்களில் ஒருவருடன் தொடர்பு இருந்ததாகக் கூறியே நமது தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்களாகியும் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தாமல் அவசரகால சட்ட விதிகளின் கீழான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மலையகத்தின் சமூகச் சூழலில் மாற்று அரசியலாக மாக்சிச லெனினிசப் பாதையில் எமது கட்சி புரட்சிகர கொள்கைகளை முன்னெடுத்து வருகின்றது. பாட்டாளி வர்க்க புதிய- ஜனநாயக சங்கத்தை தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகர மாற்று தொழிற்சங்க இயக்கமாக வளர்த்தெடுத்தும் வருகின்றது. வாலிபர் இயக்கத்தை இளைஞர் யுவதிகளிடையே வர்க்க உணர்வுடன் முன்னெடுத்து வந்துள்ளது. மேலும் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் போன்ற வெகுஜன

2ம் பக்.

2 புதிய பூமி
மார்ச் - ஏப்ரல் 2007

# புதிய- ஜனநாயக கட்சி வேண்டுகோள்


## கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது கட்சித் தோழர்களை விடுவிக்க நிதி உதவி தாரீர்!

**அன்புடையீர்!**

**எமது கட்சியின் மலையகப் பிரதேச முக்கிய உறுப்பினர்களான தோழர்கள் வி. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன், என். கிருஷ்ணப்பிரியன், எஸ். மோகன்ராஜ் ஆகியோர் பெப்ரவரி 14ம், 15ம் திகதிகளில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் "பயங்கரவாதத்துடன்" தொடர்புபடுத்தி அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அரசியல் உள்நோக்கத்துடன் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு வரும் எமது தோழர்களை வெகுஜன அழுத்தங்கள் மூலமும் சட்ட நடவடிக்கைகள் ஊடாகவும் விடுவிப்பதற்கு அதிகளவில் நிதி தேவைப்படுகின்றது. எனவே இந் நிதி சேர்க்கும் இயக்கத்தில் தாங்களும் ஏனைய தோழர்கள் நண்பர்கள் பங்குகொண்டு தங்களாலான பங்களிப்பை வழங்கி மக்கள் மத்தியில் நிதி சேர்த்து உதவும்படி வேண்டுகின்றோம். மத்திய குழு**

**அனுப்பவேண்டிய முகவரி S. Thevarajah A/C Number 452868 Bank of Ceylon Central Super Market Branch Colombo - 11**

வெளிவந்து விட்டது




# நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## ஒரு அரசியல் அனாதையின் மௌனம்

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் சிங்களப் பத்திரிகையாளர்களும் மலையகத் தமிழ் வாலிபர்களும் பிடித்துச் செல்லப்பட்டுள் ளனர். எனினும் விடுதலைப்புலிகளுடனான தனது செல்வாக்கைக் காட்டி மலையகத்தில் தனது வாக்காளர் தளத்தைக் கட்டியெழுப்பிக் காப்பாற்றி வந்த தலைவர் இப்போது அமைச்சராகிவிட்டார். இப்போது அவரது பேச்சுக்கள் மிகவும் குழப்பமாக உள்ளன. அமைச்சர் பதவிக்காக ஆட்சியில் இணைந்தாரா அல்லது அவர் அரசியல் ஆட்கடத்தலுக்கு உள்ளானாரா என்பது இன்னமும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனாலும் இப்போது அவர் ஒரு அரசியல் அனாதையாகி விட்டார். போதிய நியாயமில்லாமல் பொலிசாரால் பிடித்துச் செல்லப்படுகிற மலையகத் தமிழர் பற்றிப் பேசுவதற்கே அவர் அஞ்சுகிறாரா அல்லது அவர் அரசியல் அனாதையாகக் காரணமான புதிய தலைமுறையினர் சிலர் உள்ளே போனதையிட்டு ஆறுதல் அடைக்கிறாரா தெரியவில்லை.

## மக்கள் எழுச்சியும் போலி மாக்ஸியத் தலைமையும்

மேற்கு வங்காளத்தில் உலகமயமாதலை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக உள்ள சி.பி.எம். தலைமையிலான ஆட்சி இந்தியப் பெருமுதலாளிய கம்பனியான டாட்டா நிறுவனத்தின் மோட்டார் வாகன உற்பத்திசாலை ஒன்றை சிங்கூரில் நிறுவுவதற்காக ஆயிரக்கணக்கான விவசாயிகளின் பத்தாஆயிரத்திற்கு மேலான ஏக்கர் பரப்புக் காணிகளைப் பறிக்கத் திட்டமிட்டது. சிங்கூர் இந்திய ஆட்சியாளர்களால் அறிவிக்க ப்பட்டுள்ள நூறு சிறப்புப் பொருளாதார வலயங்களில் ஒன்றாகும். இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்துடன் ஒப்பிடத்தக்க இவ் வலயங்களில் அந்நிய முதலாளிமாருக்கும் பெரு முதலாளிமாருக்கும் வரிவிலக்கு உட்பட்ட பல வேறு சலுகை கள் உள்ள அதே வேளை தொழிலாளரது அடிப்படை உரிமை கள் பல மறுக்கப்படுகின்றன. சிங்கூரில் மேற்குவங்க அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்படுகிற இந்த நிலப்பறிப்பை எதிர்த்து மக்கள் போர்க் கொடி உயர்த்தியுள்ளனர். சிங்கூரை அடுத்து நந்திகிராமம் என்கிற ஊரில் 10000 ஏக்கர் நிலத்தை இந்தோனீசியாவின் ∴பாஸிஸ ஆட்சிக்கு நெருக் கமாக இருந்த சலீம் கம்பனிகளின் குழுமத்திற்குத் தாரை வார்க்க எடுத்த முயற்சியும் கடுமையான வெகுசன எதிர்ப்பைச் சந்தித்தது.

அந்த எதிர்ப்பையெல்லாம் கணக்கிலெடுக்காது பொலிஸ் வன்முறையை மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட மேற்கு வங்க முதல்வர் புத்ததேப் பட்டாச்சார்யாவால் அதன் விளைவாக ஆளுங்கட்சிக் கூட்டணியில் ஏற்பட்ட பிளவைப் புறக்கணிக்க முடியவில்லை. எனவே இடதுசாரிக் கட்சிகள் ஏற்காத எந்த சிறப்புப் பொருளாதார வலயத்தையும் அவர்கள் மீது திணிக்கப் போவதில்லை என்று பணிந்து போயி ருக்கிறார்.

## அறுவடைப் பருவம்

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனக்கு எதிரான கொலை மிரட்டல்கள் பற்றியும் அதிகாரத்தில் உள்ள ஒரு மா∴பியா கும்பலின் அடாவடித்தனங்களைப் பற்றியுத் தனது அறிக்கைகளிலும் நேர்காணல்களிலும் நிறையச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே பல காலமாகவே இம் மாதிரியான விடயங்களைக் கண்டுங் கேட்டும் உள்ளவர்கட்கு மங்கள சொன்னவை வியப்பை ஏற்படுத்தியிரா.

எனினும் மங்கள அதிகாரத்தில் இருந்த காலத்தில் இம் மாதிரியான விடயங்கள் நடக்கவில்லையா? அது போக இன்று இந்த விதமான அடாவடித்தனங்களை நியாயப்படுத்துகிற போர்ச் சூழலும் தேசிய இனப் பிரச்சனையிலும் மங்களவின் நிலைப்பாடு ஜே. வி. பியின் கடும் போக்கினின்று அதிகம் வேறுபட்டதால் அதிலும் முக்கியமாக இன்யை சூழல் ஒரே நாளில் உருவானதல்ல. அதன் உருவாக்கத்திற்கு குறிப்பாக ஊடகத்துறை மீதான தனது நெருக்குவாரங்கள் மூலம் பங்களித்தவர் தான் அமைச்சர் மங்கள.

இது அவர் வினை அறுக்கும் காலம். அவர் அனுபவிக்கிறவை பற்றி யாரும் ஆத்ம திருப்தி அடைவதிற் பயனில்லை. நிலைமைகள் மோசமாகி வருகின்றன என்பதற்கு அவர் அளிக்கிற சாட்சியங்கள் எதிர்வரவுள்ள பயங்கரச் சூழல் பற்றிய கடும் எச்சரிக்கைகள் என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

## சனநாயகக் காவலர் ஜெயலலிதா!

இப்போதெல்லாம் ஜெயலலிதா இந்திய அரசாங்கத்தின் சனநாயக விரோதமான நடவடிக்கைகளைப் பற்றித் துணிவாகவும் கடுமையாகவும் விமர்சித்து வருகின்றார். சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தினால் ஏற்படக்கூடிய கெடுதல்கள் பற்றியும் நிறையப் பேசியிருக்கிறார். இந்திய ஆட்சியார்களது முறைகேடான நடவடிக்கைகளையும் அவர் சுட்டிக்காட்டுவது பற்றி அவரைப் பாராட்டலாம்.

ஜெயலலிதா மாறிவிட்டாரா? அவரது அரசியல் நிலைப்பாடு குறிப்பிடத்தக்க முறையில் மாறவில்லை. ஆனாலும் சனநாயகம் பற்றிய அக்கறை புதியது. அது எப்படி ஏற்பட்டது என்று விளங்கிக் கொள்வது கடினமானதல்ல. அது நாளை எப்போது இல்லாமற் போகும் என்று விளங்கிக் கொள்ளுவதும் கடினமானதல்ல.

நாளை டில்லியில் அதிகாரத்திற்கு வருகிறவர்களுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளும் நிலைமை வரும் போது அவரது கூரிய பார்வையில் கோளாறுகள் ஏற்படும் என்பது உறுதி.

**தடுத்துவைக்கபட்ட புதிய ஜனநாயக கட்சி**

1ம் தொடர்ச்சி .......

இயக்கங்களையும் போராட்டங்களையும் நடாத்தி வந்துள்ளது. புதியபூமி **New Democracy** ஆகியவற்றை மலையகத்தில் பரந்தளவில் விற்பனை செய்யப்படுகின்றது,

இவற்றில் எல்லாம் மேற்படி ஐந்து தோழர்களும் தமது நேரம் காலத்தை மிகுந்த அர்ப்பணிப்புடன் செலவிட்டு சுயநலம் கருதாது வேலை செய்து வந்து தோழர்களாவர். மலையக மக்களினதும் முழு நாட்டு மக்களினதும் சமூக மாற்றத்திற்கான கொள்கை வழி நின்று விடாப்பிடியாக தியாக சிந்தையுடன் வேலை செய்து வந்த எமது தோழர்கள் இன்று பூசா சிறையில் விசாரணைக்கு நிறுத்தாது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே அத் தோழர்களை விடுவிப்பதற்கு வெகுஜன அழுத்தங்களையும் சட்டரீதியான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே அரசியல் மற்றும் பொது அமைப்புகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்தும் எமது தோழர்களை விடுவிக்க குரல் கொடுக்க வேண்டும். விசாரணைக்கு நீதிமன்றத்தில் நிறுத்து அல்லது விடுதலை செய் என்ற கோரிக்கையையே எமது கட்சி முன்வைக்கிறது. இது பற்றி ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளர் பொலீஸ் மா அதிபர் ஆகியோருக்கும் அரசியல் கட்சி தலைமைகள், ஊடகங் கள், மனித உரிமை அமைப்புகளுக்கும் கட்சி தெரியப்படுத்தி தனது கோரிக்கையை வற்புறுத்தி நிற்கின்றது.

**அரசியல் தீர்வுத் திட்டம்**

1ம் பக்க தொடர்ச்சி

உருவெடுத்து நிற்பது எதுவும் புதுமை அல்ல.

எவ்வாறாயினும் இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் உடனடியான யுத்த நிறுத்தமும் சமாதான சூழலும் தேவைப்படுகின்றது. மனிதப்பேரவலம் வரலாறு காணாத உச்சத்தை அடைந்து நிற்கிறது, கிழக்கில் மட்டும் இரண்டு லட்சம் மக்கள் நிர்க்கதியாகி வாழ முடியாது தவித்து நிற்கின்றனர். யுத்த நிறுத்தமும் அதற்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கையும் இன்னமும் செல்லுபடி நிலையில் இருப்பதாகவே கூறப்படுகின்றது, ஆனால் வடக்கு கிழக்கில் யுத்தம் நடைபெறுகிறது, அதற்குப் பெயர் "தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான ராணுவ நடவடிக்கை" என்பதாகும்.

அதேவேளை அரசியல் தீர்வுக்கான தீர்வுத்திட்ட யோசனைகளுக்கு சர்வகட்சி மாநாடு நீண்டு கொண்டே போகிறது. ஜனாதிபதி பதவி ஏற்று ஒன்றரை வருடம் சென்ற நிலையிலும் கௌரவமான அரசியல் தீர்வு என்ற அவரது முன்னைய வாக்குறுதியை ஆக்கபூர்வமான வழிகளில் முன்னெடுக்க முடியவில்லை. அதற்குக் காரணம் அரசியல் தீர்வை விட ராணுவத் தீர்விலேயே அதிக அக்கறையும் முனைப்பும் காட்டி நின்றமையாகும். விடுதலைப் புலிகள் இயக்கத்தை ராணுவரீதியில் தோற்கடித்து அல்லது கடுமையாகப் பலவீனப்படுத்தி விட்டால் தாம் விரும்பிய அரசியல் தீர்வுத்திட்டத்தை பெயரளவில் முன்வைக்கலாம் என்பது அரசாங்க கொள்கை வகுப்பாளர்களின் உள் நோக்கமாகும். அதன் அடிப்படையிலேயே கிழக்கில் "தமிழ் மக்களை விடுவிக்கும்" தாக்குதல்கள் தொடங்கப்பட்டன. கிழக்கின் பெரும் பகுதியை மீட்டெடுத்துக் கொண்டிருப்பதாக அரசாங்கம் கூறிக் கொண்டிருந்த நிலையிலேயே புலிகள் இயக்கத்தின் விமானத் தாக்குதல் மார்ச் 26ம் திகதி கட்டுநாயக்கா தளத்தின் மீது இடம் பெற்றது. இக் கட்டுநாயக்கா தளத்தின் மீதானு தாக்குதல் இரண்டாவது தடவையானதாகும். 2001ம் ஆண்டு இடம் பெற்ற முதலாவது தாக்குதலுக்குப் பின்பே புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தம் தோற்றுவிக்கப்பட்டது. இன்றும் முக்கியமான ஒரு தருணத்தில் இடம் பெற்றுள்ள இரண்டாவது தாக்குதல் அதுவும் புலிகள் இயக்கம் தனது வான் வழித்தாக்குதலாக நிகழ்த்தியிருக்கிறது. எனவே இத் தாக்குதல் இலங்கையின் யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினையில் ஒரு திருப்பு முனையைத் திறக்குமா? என்ற விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அதன் பிரதிபலிப்பு வெளிப்படையாக இல்லாது விடினும் உள்ளுர ஏப்பிரல் 3ம் 4ம் திகதிகளில் இடம் பெற்ற தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்புச் சங்க (SAARC) மாநாட்டில் எதிரொலிக்கவே செய்தது. இலங்கை ஜனாதிபதி மகிந்த இச் சம்பவத்தை பயங்கரவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டிற்கு வலுச் சேர்க்க பயன்படுத்திக் கொண்ட போதிலும் அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் வாக்குறுதியளிக்க வைத்திருக்கிறது.

எவ்வாறாயினும் மேலும் ராணுவத் தீர்வில் நம்பிக்கை வைத்து வடக்கு கிழக்கு மக்களை யுத்தத்திற்குள் அமுக்காது அதே வேளை நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மோசமடையச் செய்யாது அரசியல் தீர்வுக்கான வழிகளில் ஜனாதிபதியும் அரசாங்கமும் செயலாற்ற வேண்டும். ஒன்றரை வருடகால நிறைவேற்று அதிகார ஆட்சி அனுபவம் ஜனாதிபதிக்கு அதிகளவான பட்டறிவைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைத்து பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுவது இன்றைய அவசியத்தேவையாகும். வடக்குகிழக்கு மக்களினதும் முழு இலங்கை மக்களினதும் சமாதான அபிலாஷைகளுக்கு செவி மடுக்க வேண்டிய காலமும் சூழலும் வந்துள்ள யதார்த்தத்தை ஆட்சியதிகாரத்திலுள்ள அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தத்தமது அரசியல் இருப்பிற்காக நாட்டையும் மக்களையும் பலியிட முன்நிற்கும் எதிர்த்தரப்பினரும் உருவாகியுள்ள அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து செயல்பட வேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கமும் தமது பொறுப்பை உணர்ந்து அரசியல் ரீதியில் செயல்பட முன்வரல் வேண்டும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில் கைதுகளும் தேடுதல்களும் இன அடிப்படையில் இடம் பெறுகின்றன.

பெருந்தோட்டப்பகுதிகளில அடிக்கடி தேடுதல்கள் கைதுகள் போன்றவற்றை மேற்கொள்ள புதிய நடைமுறைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுபற்றி தொழிற்சங்கத் தலைமைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக மலையகத்தின் உயர்பொலிஸ் அதிகாரிகள் சிலர் தெரிவிக்கின்றனர். இது பற்றி தொழிற்சங்கத் தலைமைகளிடம் கேட்டபோது தங்களுடன் தோட்டப்புறங்களில் தேடுதல்கள் கைதுகள் செய்யப்படுவது தொடர்பாக எவ்வித பேச்சுவார்த்தைகளையும பொலிஸார் நடத்தவில்லை என்று தெரிவிக்கின்றன.

தற்போது பெருந்தோட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஊடுருவி இருப்பதாகக் கூறிக் கொண்டு தேடுதல்கள் நடத்தப்படுவதும் பெரும் எண்ணிக்கையில் மலையகத்தவர்கள் கைது செய்யப்படுவதும் நாளாந்த நிகழ்வுகளாகியுள்ளன.

மலையகத்தின் - தோட்டப்புறங்களில் இருக்கும் போராட்டக் குணத்தையும் சமூக உணர்வையும் ஒடுக்குவதற்கான நிகழ்ச்சி நிரலாகவே தேடுதல்கள், கைதுகள் மேற் கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைகள் மலையகத்தின் அரசியல் சமூக எழுச்சியை தடுத்துநிறுத்தும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பேரில் பயப்பீதியை ஏற்படுத்தும் திட்டமிட்ட நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுகின்றன என்றே அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது.

பெருந்தோட்டங்களுக்குள் யாரும் போகமுடியாத ஒருதோட்டத்திலிருந்து இன்னொரு தோட்டத்திற்குள் செல்ல முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி பெருந்தோட்டப்பகுதிகளை ஏனையப் பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்ட அடைக்கப்பட்ட பகுதியாக வைத்திருக்க வேண்டும் என்ற உள்நோக்கம் இருப்பதை அறியமுடிகிறது. பிரித்தானியர் காலித்திலிருந்து 1970 கள் 80 கள் வரை பெருந் தோட்டங்கள் அடைக்கப்பட்ட பகு தியாகவே இருந்தன.

தற்போதைய யுத்த சூழ்நிலைக் கும், ஜனநாயக விரோத மனிதஉரிமைகள் மீறல் நிலைமைகளுக்கும் எதிராக பெருந்தோட்ட ங்களிலிருந்து எழுச்சிகள் தோன்றினால் ஆளும் வர்க்கத்தினருக்கு தாக்குப்பிடிக்க முடியாது. அதிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களும், கிராமப்புற மக்களும் ஐக்கியப்படும் சாத்தியங்கள் அதிகமாக இருக்கின்றன. அதனால் பெருந்தோட்டங்களை ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டப் பகுதியாக வைத்திருப்பதற்கும் பெரும்பான்மை சிங்கள கிராமிய மக்களுடன் தோட்டத் தொழிலளர்கள் ஐக்கியப்படுவதற்கு தடைகளை ஏற்படுத்தவும் ஆளும் வர்க்கங்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன. அத்திட்டமிட்ட செயற்பாடுகளில் ஒன்றே தற்போதைய கைதுகள், தேடுதல்கள் போன்ற அச்சுறுத்தல் நடவடிக் கைகளாகும்.

இந்த நடவடிக்கைகள் குறிப்பாக தோட்டத்தொழிலாளர்களுக்கு பாதிப்பாகவும் மலையகத்தமிழர்களுக்கு எதிராகவும் இருப்பதுடன் பொதுவாக உழைக்கும் சிங்கள, மலையகத்தமிழ் மக்களின் ஒற்றுமைக்குப் பெரும் பாதகமாகவும் இருக்கின்றன.

கைதுகள், தேடுதல்கள் போன்றவற்றால் மேற்கொள்ளப்படும் இக்கெடுபிடிகள் அடிப்படையில் ஜனநாயக மனித உரிமைகளுக்கு மாறானவையாகும். எனவே ஜனநாயக, மனிதஉரிமைகளை மதிப்போர் இது குறித்து மௌனமாக இருக்கமுடியாது. அதற்கான அக்கறைகளையும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் முன்னெடுக்க நேர்மையான அரசியல் சமூக அக்கறை கொண்ட சக்திகள் முன்வரல் வேண்டும்.

# பத்திரிகையாளர் பரமேஸ்வரியின் கைதும் தடுப்புக்காவலும் விடுதலையும்

மௌவ்பிம என்ற சிங்களப் பத்திரிகையில் பணிபுரிந்த ஊடகவியலாளர் முனு சாமி பரமேஸ்வரி என்ற தமிழ் இளம் பெண் அவசரகால சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு 129 நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார். புலிகள் இயக்கத்துடன் தொடர்பு உடையவர் என்ற பெயரில் பயங்கரவாத தடுப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டமையை உள் நாட்டு வெளி நாட்டு ஊடக அமைப்புகள்கடுமையாகக் கண்டிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரப்பட்டது. ஆனால் சிங்கள ஆங்கில நாளே டுகள் பரமேஸ்வரியை ஒரு பயங்கரப் புலியாகச் சித்தரித்து செய்திகள் அடிக் கடி வெளியிட்டும் வந்தன.

ஆனால் அவரது உயர்நீதிமன்றத்திற்கான அடிப்படை உரிமை மீறல் மனு ஏற்றுக்கொள்ளப்பட்ட சூழலில் சட்டமா அதிபர் திணைக்களம் அவர் மீது குற்றம் சுமத்த போதிய ஆதாரங்கள் இல்லையென தெரிவித்த காரணத்தால் உயர் நீதிமன்றம் அவரை விடுதலை செய்ய பரிந்துரை செய்து கொண்டது. இப் பொழுது பரமேஸ்வரி விடுதலை செய்யப்பட்டுள்ளார். இது நீதி நியாயத்தையும் அடிப்படை உரிமைகளை வற்புறுத்தி நின்ற ஊடகவியலாளர் அமைப்புகளும் ஏனைய அரசியல் மற்றும் பொது அமைப்புகளும் எடுத்த முயற்சிகளுக்கு உரிய பலன் கிடைத்தது என்றே கூறவேண்டும்.

ஆனால் இவ்வாறு உரிய குற்றச் சாட்டுக்கள் சுமத்த முடியாத நிலையில் பலநூறு இளைஞர் யுவதிகள் மற்றும் வயது வந்தோர் விசாரணைக்கு நீதிமன்றங்களில் நிறுத்தப்படாது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறைச்சாலைகளிலும் பூசா தடுப்பு முகாம்களிலும் மற்றும் பொலீஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வடபுலம் மந்துவில் என்ற கிராமத்தில் ஏழு மாதங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்ட ஒரு இளைஞன் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டான். அண்மையில் அவ் இளைஞன் உயர் நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்த பின் இடம் பெற்ற விசாரணையில் போதிய ஆதாரங்கள் இல்லையென சட்டமா அதிபர் சார்பில் தெரிவிக்கப்பட்டது, அதனைத் தொடர்ந்து இ. சிவகாந்தன் என்ற அந்த இளைஞன் விடுதலை செய்யப்பட்டான்.

ஆனால் எழும் கேள்வி யாதெனில் இன்று அவசரகாலச் சட்டத்தின் கீழான பயங்கரவாத ஒழிப்பு விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை பெற முடியுமா என்பதேயாகும். பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் ஒரு வருட காலத்திற்கு விசாரணைக்கு நிறுத்தாது தடுத்து வைத்திருக்க முடியும். அதற்குமப்பால் அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க எல்லோராலும் முடியாது. அதற்கான பெரும் தொகைப் பணமோ கொழும்பிற்கு வந்த செயலாற்றும் சூழலோ எல்லோருக்கும் இருக்க முடியாது. இன்று தடுப்புக் காவலில் இருந்து வரும் எத்தனையோ பேரை தாய் தந்தையரோ உறவினரோ பல மாதங்களாகப் பார்க்க முடியாது உள்ளனர். வடக்கு கிழக்கு மலையகத்தைச் சேர்ந்தோர் போக்குவரத்து பணச் செலவு பாதுகாப்பு அற்ற சூழல் போன்றவற்றால் தம் உறவுகளைப் பார்க்க முடியாத துயரச் சூழலில் இருந்து வருகிறார்கள். இந்நிலையிலே தான் அவசரகால சட்டத்தின் கீழ் பயங்கரவாதத் தடைச்சட்ட விதிகள் மிகவும் கடுமையானதாகவும் கொடுமையானதாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனை தனிநபர்களாக நின்று சட்டரீதியான வழி முறைகளின் மூலமாக மட்டும் எதிர் கொள்ளவியலாது. ஒரு உறுதியான அரசியல் வெகுஜன இயக்கம் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்கான முயற்சிகளை இடதுசாரி ஜனநாயக சக்திகள் முன்னெடுப்பது அவசியம். அதன் மூலமே சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விசாரணைக்கு நிறுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும் என்பதற்கான மக்கள் இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும்.

# மலையக ஆசிரியர் நியமனங்களை வழங்குவதில் தாமதம் ஏன்?

3179 மலையக ஆசிரியர் நியமனங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் வைத்து அந்நியமனங்களை வழங்குவார் என்று திகதிகள் குறிக்கப்பட்டன. ஆனால் இரண்டு முறைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இம்மாத முடிவிற்குள் வழங்கப்படுமென மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று 2500 மலையகத்தவர்களுக்கு அரசாங்கசேவையில் முகாமைத்துவ உத்தியோகங்கள் வழங்கப்படுமென கூறப்பட்ட போதும் அதுவும் இன்னும் வழங்கப்படவில்லை.

மலையக ஆசிரியர் நியமனங்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டதை அடுத்தே இந் நியமனங்கள் வழங்குவது தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் விண்ணப்பங்கள் கோரப்பட்ட விதம். தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகள் போன்றவற்றில் குளறுபடிகள் இருந்ததனாலும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுவந்தது. குறித்த குளறுபடிகள் நீக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

தற்போது அந்நியமனங்களை வழங்குவதில் ஏற்பட்டுவருகின்ற தாமதத்திற்கு "மலையக அரசியலே" காரணம். அந்நியமனங்களுக்கு யார் அரசியல் உரிமை கோருவது என்பது பிரச்சினையாக இருக்கிறது.

நிலைமைகள் எவ்வாறிருப்பினும் அந்நியமனங்களை ஆரம்பத்திலிருந்து இ. தொ. கா. வே அரசியல் உரிமை கோரி வருகிறது, அத்துடன் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் ஏனைய தொழிற்சங்கங்களும் ஆசிரியர் நியமனங்களுக்கு "அரசியல் உரிமை" கோருவதில் பங்குபோடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

2500 பேருக்கு அரசசேவையில் முகாமைத்துவ உத்தியோகங்கள் வழங்கப்படுமென கூறப்பட்டபோதும் ஒரு சிலருக்கே சமூக ஒருங்கிணைப்பாளர் என்ற பேரில் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நியம னங்களை வழங்குவதற்கு அர சாங்க சேவையில் இருக்கும் பேரி னவாத அதிகாரங்கள் பல்வேறுவிதங்களில் தடையாக இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நியமனங்கள் எப்போது வழங்கப்படும் என்பது மலையகத்தவர்களின் கேள்வி? இன்று வழங்கப்படும் நாளை வழங்கப்படும் என்று இழுத்தடிக்காமல் உடனடியாக வழங்கப்படுவது அவசியம். நான் தான் பெற்றுக்கொடுத்தேன் என்று மார் தட்டுவதற்கு இன்று மலையகத் தலைமைகள் எனப்படுவோர் எண்ணிக்கையில் கூடியயவர்களாக இருக்கின்றனர். அவர்களிடையேயான போட்டிகளால் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டு அதற்கு மலையக இளைஞர் யுவதிகள் பலியாகி வருகின்றனர்.

# மீண்டும் தோட்டங்களில் பேரினவாதக் குடியேற்றங்கள்

ஹங்குராங்கெத்த, வலப்பனை ஆகிய இடங்களில் ஏற்பட்ட மண் சரிவுகளால் பாதிக்கப்பட்டவர்கள் அல்மார், ஹைபோரஸ்ட், டெல்மார், நடுக்கணுக்கு ஆகிய தோட்டக் காணிகளில் குடியேற்றப்படவுள்ளனர். அதனால் அத்தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும், நீண்ட காலத்தில் அத்தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் வெளியேற வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எந்தவொரு இயற்கை அனர்த்தம் ஏற்பட்டாலும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். அத்துடன் அரசாங்கம் அபிவிருத்தி என்ற பேரில் சூழலுக்கும் இயற்கைக்கும் அழிவை ஏற்படுத்தக்கூடிய நீர்த்தேக்கத்திட்டங்களை மேற்கொண்டதன் விளைவாக இந்த மண்சரிவுகள் ஏற்பட்டதால் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். அவர்களுக்கு புதிதாக காணிகள் வழங்கப்பட்டு வாழ்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அவர்களை தேயிலை தோட்டக் காணிகளில் குடியேற்றுவது என்பது அரசாங்கத்தினதும் பேரினவாதிக ளினதும் பேரினவாத நிகழ்ச்சி நிரலாகும். மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாண்மை சிங்கள மக்களாகையால் அவர்களை தோட்டக்காணிகளில் குடியேற்றி தமிழர்களான தொழிலாளர்களை வெளியேற்றும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பேரினவாத நடவடிக்கைகளே. இங்கு வலப்பனை தேர்தல் தொகுதியில் சிங்களவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் தமிழர்களின் எண்ணிக்கையை குறைக்கும் உள்நோக்கமும் இருக்கிறது.

மலையகத் தலைமைகள் எனப்படுபவை இந்த குடியேற்ற நடவடிக்கைகளை எதிர்ப்பதாக இல்லை. அவைகள் யாவும் பதவிகளுக்காக அரசாங்கத்திடம் சரணடைந்திருக்கின்றன. அதனால் அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்க்க முடியாதிருக்கின்றன.

இந்த் குடியேற்றத்தால் பிரதேசத்தில் இன ஒடுக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்பதால் அப்பிரதேசத்தில் சிங்கள, தமிழ் மக்களிடையே விரிசல்களும், குரோதங்களும் அதிகரிக்கும்.

1970 தொடக்கம் பெருந்தோட்டக் காணிகளில் இடம்பெற்ற பேரினவாத குடியேற்றங்களினால் தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியாகவும் இனத்துவர்தியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அம்மாதிரியான குடியேற்றங்கள் இப்போது வேறு வேறு விதங்களில் தொடர் கின்றன.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மாற்றங்களை நோக்கி பயணிக்க வேண்டிய மலையகப் பெண்கள் !

மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினம்

இன்றைய இலங்கையின சனத்தொகை விபரம் முழுமையான ஒன்றாக இல்லை. இருப்பினும் இச் சனத்தொகையில் சரி அரைப்பங்கினர் அல்லது அதற்கும் சற்று கூடுதலானவர்களாகப் பெண் பாலினர் இருந்து வருகின்றனர். அத்தகைய பெண்களில் ஆகக் கூடியவர்கள் உழைக்கும் பெண்களாகவே உள்ளனர்.

இவ் உழைக்கும் பெண்களில் மலையகப் பெருந்தோட்டத்துறையின் தேயிலை ரப்பர் உற்பத்திகளில் ஈடுபடும் பெண்கள் எண்ணிக்கையில் சுமார் மூன்று லட்சமாவர். தொழிலாளர்களான இப் பெருந்தொகைப் பெண் கள் தமது அன்றாட வாழ்வில் மோசமான பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்த வண்ணமே வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு அடிப்படைகளில் இருந்து எழுவனவாகவே உள்ளன. அவை இன்றைய சமூக அமைப்பினதும் அதன் கீழான குடும்ப அமைப்புச் சூழலினதும் விளைவுகளாகும். பொருளாதாரச் சுரண்டலின் கொடூரமே மலையகப் பெண்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது. நீண்டகாலமாக பொருந்தோட்டத்துறையில் உழைக்கும் பெண்களுக்கு சம



சம்பளம் வழங்கப்படவில்லை. ஒரே வேலைக்கு ஆண்களுக்கு சற்று கூடுதலாகவும் பெண்களுக்கு குறைந்த சம்பளமுமே வழங்கப்பட்டு வந்தது. இந்நிலை எண்பதுகளில் தான் மாற்றமடைந்தது. சம சம்பளம் இருபாலாருக்கும் கிடைத்த போதிலும் ஒட்டு மொத்தத்தில் இலங்கையிலேயே குறைந்த நாட் சம்பளம் பெறும் தொழிலாளர்களாக மலையகத் தொழிலளார்களே இருந்து வருகின்றனர் என்பது யாவ ரும் அறிந்ததே.

மலையகப் பெண்கள் தேயிலை ரப்பர் உற்பத்தியில் கடுமையான உழைப்பைக் கொடுத்து குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வேலை வாங்கப்படும் முறைமைகள் பழைய கொலனிய சுரண்டலாளர்களின் வழிமுறைகளைப் பின்பற்றிய தாகவே இருந்து வருகின்றது. கடும் குளிர். கடும்வெயில் அதிக மழை. அட்டைக்கடி, பெரு மலைகளில் கொழுந்து எடுத்தல் போன்ற கடுமையான சூழல்களின் கீழேயே வேலை வாங்கப்படுகின்றனர். குறிப்பிட்டளவுக்கு மேல் கொழுந்து எடுக்கவேண்டும் என்பது கட்டாயமானதாகும். அப்பொழுது தான் (உழைப்புக்கு உரியதாகஇல்லாத) முழுச் சம்பளம் பெற முடியும். இவ்வாறு குறைந்த சம்பளம் பெறுவதன் காரணமாக குறைந்த வயதினில் உள்ள பெண்களை குடும்பத்தினர் பாடசாலை செல்வதை நிறுத்தி வேலையில் சேர்த்துக் கொள்கின்றனர். தோட்டங்களுக்கு அப்பாலும் வெளி யிடங்களுக்கு வீட்டுவேலைகளுக்கும் கடைகள், தொழிற்சாலைகளுக்கும் இளம் பெண்கள் அனுப்பப்படுகின்றனர். எட்டுப்பத்து வயது முதல் வீட்டு வேலைக் கென அனுப்பப்படும் மலையகச் சிறுவர்களில் பெண் சிறாவர்களின் எண்ணிக்கை அரைவாசிப் பங்காகும்.

இவ்வாறான வருவாய் மிகக் குறைந்த பெருந்தோட்டச் சூழலில் வர்க்க ரீதியான சுரண்டலுக்கு முதலாளியக் கம்பனிகளின் கீழ் பெண்கள் பலியாகிக் கொண்டேவருகின்றனர். அதேவேளை அதற்கும் அப்பாலான சமூக பண்பாட்டு நிலைகளின் ஊடாகவும் மலையகப் பெண்கள் ஒடுக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். ஆனால் அத்தகைய ஒடுக்குதல் தம் மீதான அடிமைத்தனச் சங்கிலி என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. நிலவுடைமைக்காலத்தின் கருத்தியல் சிந்தனைகளின் தொடர்ச்சி ஆணாதிக்கத்தின் வாயிலாகவும் சமூக சமய நடைமுறைகளின் ஊடாகவும் பெண்களிடையே முன்னெடுக்கப்படுகின்றன. மரபு பழைமை பாரம்பரியம் போன்றவற்றின் ஊடாக பண்பாட்டம்சங்கள் பெண்களை ஒடுக்குகின்றன. இவை தனியே மலையகப் பெண்களுக்குரியவை மட்டுமல்ல. அனைத்துப் பெண்களும் வெவ்வேறு நிலைகளில் அளவுகளில் எதிர் கொள்ளும் ஒடுக்குதல்களாகும். இவற்றை பெண் அடிமைத்தனம் என்றோ ஒடுக்குதல் என்றோ பெரும்பாலான பெண்கள் அறிவதுமில்லை ஏற்றுக்கொள்வதுமில்லை. ஏனெனில் அவை சமூக மத பண்பாட்டுத் திரைகளால் மரபுஇ பாரம்பரியம். தனித்துவம் என்ற பெயர்களில் முன்னெடுக்கப்படுவதை பெரும்பாலான பெண்கள் தமக்குரிய விதி கடமை ஒழுக்கம் எனக் கூறி ஏற்றுக்கொள்கின்றனர்.

மலையகப் பெண்கள் தொழிலாளர்களாக உழைப்பில் நாளாந்தம் ஈடு பட்டுவருவதன் காரணமாக உழைப்பை மையமாகக் கொண்ட ஆணா திக்கம் தாக்கம் மிக்கதாக செயற்படுவதாகக் காணமுடியாது. ஆனால் சமூக பண்பாட்டுத்தளங்களிலும் அரசியல் தொழிற்சங்க நிலைகளிலும் ஆண்ணாதிக்கம் என் பது மலையகப் பெண்கள் மீது தனது ஒடுக்குதல்களை புரி ந்தே வருகின்றது. இது முதலாளிய கூலி அடிமை முறையின் கீழும் பெண்கள் நிலவுடைக் கருத்திய லின் நடை முறைகளால் சிறைப் படுத்தப்பட்டு அதனுள் அடைக்கப்பட்டுள்ள நிலையை எடுத்துக் காட்டுகின் றது.

இவ்வாறான சூழலில் மலையகப் பெண் களின் அடிமைத்தனங்களை உடைத்து முன்செல்வதற்கு அவர்களிடையேயான விழிப்புணர்வு பெற்ற இளம் யுவதிகள் முன்வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவ்வாறு முன்வருவதற்கு கல்வி பெற்ற பெண்கள் மட்டுமன்றி சமூக அக்கறை மிக்க தொழிலாளர்களான பெண்களும் முன் நிலைக்கு வரல் வேண்டும். வெறுமனே தொழிற்சங்க தலைமைகளுக்கும் பாராளுமன்ற அரசியல் வாதிகளுக்கும் பின்னால் தலையாட்டிச் செல்லுபவர்களாகப் பெண்களில் சிலர் வழி நடந்து அதன் மூலம் பெண்களுக்கு விமோசனம் வந்து விடும் எனக் கொள்ளப்படுவது உரிய வழி முறையல்ல. அவ்வாறே அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களில் பதவிகள் பெற்று அவற்றின் நிகழ்ச்சி நிரல்களைப் பெண்கள் மத்தியில் முன்னெடுப்பதாலும் பெண்களின் பிரச்சினைகளை எதிர் கொள்ளவோ தீர்வுகளைப் பெறவோ முடியாது.

அவ்வாறே இன்றைய சினிமா, சின்னத்திரை போன்றவற்றின் பரம்பல் தொலைக்காட்சிகள் வழியாக பெண்களைச் சென்றடைகின்றன. அவற்றில் வரும் பாத்திரங்கள். காட்சிகள். பாடல்கள் மற்றும் நடையுடைபாவனை என்பனவும் மலையகப் பெண்கள் மத்தியில் ஊடுருவுகின்றன. அவற்றில் வரும் நிலவுடைமைக் கருத்தியல் சார்ந்த அனைதும் பெண்கள் மீது ஏற்றப்படுகின்றன. அவை பண்பாட்டு வளர்ச்சி அல்லது நவீனப் போக்கு என்பதாகக் கூறி உள்வா ங்கப்படுகின்றன. அதன் மூலம் பெண்கள் கல்வி. பொது அறிவு, சமூகச் சார்பு விடயங்கள் போன்றவற்றிலிருந்து திசை திருப்பப்படுகின்றனர். இதனால் இளம் பெண்கள் பல்வேறு பாதிப்புகளையும் பெறுவதுடன் சில சந்தர்ப்பங்களில் மோசமான சீரழிவுகளையும் சந்திக்கின்றனர்.

இன்றைய சமூக அமைப்பையும் அதன் கீழான குடும்ப அமைப்பையும் அவற்றை வழிநடாத்தி வரும் கருத்தியல் சிந்தனை நடைமுறைகளையும் கேள்விகளுக்கு உள்ளாக்கும் இளந்தலைமுறைப் பெண்கள், உருவாக வேண்டும். ஏன் எப்படி, எதற்காக, எனக்கேள் விகள் எழுப்பி கடந்த காலத்தினதும் நிகழ்காலத்தினதும் நடைமுறைகள் மீது கணைகள் தொடுப்பதற்கான பெண்கள் உருவாக வேண்டும். அப்பொழுது தான் பெண்களின் விடுதலைக்கான பயணம் பயன்தரும் பாதையில் அடியெடுத்துச் செல்லமுடியும்.

இத்தகைய பயணமும் பாதையும் மலையகப் பெண்களுக்கு மட்டுமன்றி அனைத்துப் பெண்களுக்கும் உரியதாகும். இதனை அமைப்பு வாயிலாக முன்னெடுப்பதன் மூலமே பெண்விடுதலைக்குரிய சமூக செயற்பாடுகள் முன்செல்ல முடியும். பெண்களின் வாழ்நிலை பற்றியும் அதற்கான அடிப்படைக் காரணங்கள் பற்றியும் அறிவூட்டப்படல் வேண்டும். அவர்களின் சமூகத் தேவைகளின் அடிப்படை யில் விழிப்புற வைத்தல் அவசியம். குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இடம் பெற்று வரும் சமூக நடைமுறைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் அவற்றின் விளைவுகளையும் அறிவியல் பூர்வ மாக அணுகவும் சிந்திக்கவும் செயற்படவும் பெண்கள் முன்வரல் வேண்டும். சமூகச் சுமைகளை குடும்பச் சுமைகளாகச் சுமந்து அவற்றைத் தமது தலை விதியென நொந்து நொத்து காலமெல்லாம் கண்ணீரும் கம்பலை யுமாகப் பெண்கள் வாழும் வாழ்வு க்கு முடிவுகட்டப்படுவதற்கு மலைய கப் பெண்கள் புதிய பாதையில் பயணிக்க முன்வரல் வேண்டும். அத் தகைய பயணம் முழுமையான சமூக மாற்றத்தோடு இணைந்து வழி நட க்கும் பயணமாக முன் செல்லல் வேண்டும். அதற்கான முன்ன ணிப் பெண்களாக மலையகத்தின் இளைய தலைமுறைப் பெண்கள் துணிச்சலோடு களம் இறங்க வேண் டும்.

## புதிய படிமங்கள்

பல ஆயிரம் வருஷப்
படிமங்கள் பொடிபடட்டும்.
வார்த்துஞ் செதுக்கியும்
கடைந்தும் குடைந்தும்
கல்லிற் பொழிந்தெடுத்தும்
வார்த்தை பல வரைந்தும்
வர்ணங்கள் தீட்டியும்
மந்தைகள் போற் பெண்குலத்தை
மேய்த்த பரம்பரையோர்
காத்துக் கவனமுடன்
பேணிப் பராமரித்த
கல்லும் உலோகமும்
களிமண்ணும் காகிதமும்
ஓலைகளும் சீலைகளும்
வேய்ந்த சிறைக்கூடம்
வீழ்ந்து நொறுங்கட்டும்.
பெண்ணடிமைப் பெருங்கோட்டை
மதில்கள் பொடிபடட்டும்.

அச்சம் அணிகலனோ?
மடமை மணிமுடியோ?
நாணுதலே பெண்மையோ?
தளர்நடையும் மருள்விழியும்
துடியிடையும் கொடியுடலும்
ஆண்குலத்தின் வேட்கைக்காய்
அமைந்தது தான் பெண்குலமோ?
பரம்பரையின் பண்பாடும்
தன்மானம் பேணுவதும்
கற்பு நெறி நிற்பதுவும்
கைம்மையிலே கருகுவதும்
மாதர் குலச்சுமையோ?

கற்பும் அறநெறியும்
எல்லார்க்கும் பொதுவென்போம்.
அஞ்சுதலும் நாணுதலும்
ஏய்த்துப் பிழைப்போர்க்கும்
எத்திப் பறிப்போர்க்கும்
மானுடரைத் தாழ்த்திக்
கொடுமை பல செய்வோர்க்கும்
தீயோர்க்கும் உரித்தென்போம்.
அஞ்சாமை மனத்துணிவு
அறிவு எமதுரிமை.
மானுடரை மானுடரே
அழித்தல் அடிமை செயல்
இன்றே ஒழியட்டும்.

பெண்காள் திரள்மின்!
சூழுகின்ற வேலிச்
சுவர்களெலாம் சாயட்டும்!
மூடி மறைத்திருக்கும்
கூரை பெயரட்டும்!
தலைகள் நிமிரட்டும்,
கைகள் உயரட்டும்-
வானத்தில் ஒரு பாதி
அங்கே அமரட்டும்.

சிவசேகரம்

நன்றி
தாயகம் -17
மார்ச் 1978

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 14 மார்ச்சி- ஏப்ரல் 2007 பக்கம் 20 விலை 20/- சுழற்சி 101
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# ‘குற்றம் அற்றவர்கள்’ என்ற உரிமைக்கான அரசியல் போர்

‘மௌவ்பிம’ என்ற சிங்களப் பத்திரிகையில் ஊட கவி யலா ளராக வேலைசெய்த தமிழ் யுவதியான முனுசாமி பரமேஸ்வரி பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவி னார் என்ற குற்றச்சாட்டில் அவசரகாலச்சட்டத்தின் கீழ் 129 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் கைது செய்யப்படவில்லை. கடத்தப்பட்டார். நீண்டநாட்களுக்கு பின்னரே அவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர் கடத்தப்பட்டவுடனேயே அவர் ‘ஒரு புலிப்பயங்கரவாதி’ என்று தீர்ப்பளிக்கும் வகையில் சிங்களப் பத்திரிகைகள் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டன. அவர் கடத்தல்கள், காணாமல் போதல்கள், கப்பம் வசூலித்தல், கொலைகள், கைதுகள் பற்றிய உண்மைகளை தேடி அறிந்தும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம் பெறும் இராத்ணுவ தாக்குதல்களினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றியும் தொடர்ந்து செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதிவந்து ள்ளார்.

யுத்தத்திற்கு எதிராகவும் சமாதானத் தீர்வை வலியுறுத்தியும் செயற்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு ஊடகப் புலிகள் என்ற பட்டம் சூட்டி அவர்களை “பயங்கரவாதிகளாக்கி” அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பேரினவாத இன ஒடுக்கல் நிகழ்ச்சிகளின் பகுதியாகவே பரமேஸ்வரி கைது செய்யப்பட்டார். இவ்வாறு கடந்த காலத்தில் சில ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கொலை செய்யப்பட்டனர். பலர் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். சூரியன் வானொலி ஊடகவியலாளர் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார். பெப்ரவரி 5ஆம் திகதி ‘அக்குண’ பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் மூவர் கடத்தப்பட்டனர். எதிர்ப்புகள் வலுவடைந்ததால் மூன்று நாட்களுக்குப் பிறகு அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டதுடன் அவர்கள் தமிழீழ விடுதலை புலிகளிடம் ஆயுதப் பயிற்சிப்பெற்ற ‘சிங்களப்புலிகள்’ என அறிவிக்கப்பட்டது,

அவர்களின் கைதை அடுத்து அவர்களுடன் தொடர்பு இருந்ததாக புதிய- ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச தோழர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மாக்சிச லெனினிஸ கட்சியான புதிய- ஜனநாயக கட்சியின் அரசியலை முன்னெடுத்து வந்த வர்கள். பாட்டாளி வர்க்க புதிய- ஜனநாயக சங்கம் என்ற மாற் றுத் தொழிற்சங்க இயக்கத்தை கட்டுவதற்காகவும் இவர்கள் மலையகத்தில் பல வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்ததுடன் இதேபோன்று சிங்கள திரைப்பட இயக்குனர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் தொழிற்சங்கத்தலைவர்கள் எனப் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவ ர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்திருந்த தேசத்துரோகிகளாவர் என்று சிங்கள ஊடகங்களில் பிரசாரம் செய்யபட்டுள்ளது. அவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டதாகவும் சிங்கள ஊடகங்கள் செய்திகளை பரபரப்புடன் வெளி யிட்டுவருகின்றன.

‘ஊடகப்புலிகள்’ “சமாதானப்புலிகள்” “இடதுசாரிப் புலிகள்” “தொழிற்சங்கப்புலிகள்” என்று முத்திரை குத்தி குற்றச்சாட்டுகள் சுமத்தி பலர் மீது அடக்குமுறை நடவடிக்கைள் கட்டவீழ்த்து விடப்பட்டுள்ளன. இவை அரசியல் ரீதியில் ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்யதாகும்.

சந்தேகம் என்று கைதுசெய்யப்பட்டு நீண்ட நாட்கள் தடுத்துவைக்கப்படுவது வழமையாகிவிட்டது. அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள் எதுவித வெளியுலகத் தொடர்புமின்றி தடுத்து வைக்கப்படுகின்றனர். அவ்வாறே நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு எதுவித குற்றச்சாட்டுமின்றி பரமேஸ்வரி விடுவிக்கப்பட்டார். ஆனால் நீதிமன்றம் குற்றவாளி என தீர்ப்பளிப்பதற்கு முன்னர். ஒருவர் ‘குற்றமற்றவர்’ என்ற அடிப்படை உரிமைக்கு மாறாக தனியார் சிங்கள ஊடகங்கள் அரசாங்க ஊடகங்கள் மூலம் பொலிஸாரும் பாதுகாப்பு பிரிவினரும் அவரை குற் றவாளியாகவே காட்டியிருந்தனர். அவரின் சார்பில் ஊட கவியலாளர் அமைப்புகள் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்தன. சர்வதேச அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் குரல் எழு ப்பிவந்தன. உயர்நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவும் தாக்கல் செய்யப்பட் டது. அம்மனு பற்றி உயர்நீதிமன்றத்தி ற்கு பதிலளித்த சட்டமா அதிபர் திணைக்களம் பரமேஸ்வரி க்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டும் இல்லை என்று தெரிவித்தது. அதையடுத்தே அவரை விடுவிக்கும்படி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அவரது விடயத்தில் அவரின் விடுதலைக்காக மேற் கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் போன்று முன்னெடுக்கும் நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் இல்லை. சிலர் ஒரு வருடத்திற்கு மேலும் எவ்வித நீதிமன்ற விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதற்கு வசதியாக இருப்பது அவசரகாலச்சட்ட விதிகளாகும். அதன்படி பொலி ஸாருக்கும் பாதுகாப்பு படையினருக்கும் அளவுகடந்த அதி காரங்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

இந்நிலை தொடருமாயின் இந்நாட்டு மக்கள் அனைவரினதும் சாதாரண ஜனநாயக மனித உரிமைகளும் கூட தொடர்ந்து மறுக்கப்படும். அரசாங்கத்தின் ஏதேச்சதிகாரங்களும் நிலைநாட்டப்படும். பாதுகாப்பு பிரிவினரின் அத்துமீறல்களும் பாசிச நடவடிக்கைகளும் அதிகரிக்கும். வடக்கு கிழக்கில் இடம்பெறும் இராணுவ தாக்குதல்களும் தொடரும். போர் நிறுத்தப்பட்டு சமாதானம் நிலைநாட்டப்படுவதற்கான வாய்ப்புகள் அற்ற நிலையே தொடரும்.

இந்நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதிகளை நீக்க வேண்டும். அதற்கான குரல்களை எழுப்பவும் நடவடிக்கைகளை எடுக்கவும் பல நிலை முயற்சிகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்கான நேர்மைமிக்க வெகுஜன இயக்கங்கள் மக்களிடையே கட்டியெழுப்பப்பட வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களின் போலித்தனமான வரையறைகளுக்குள் நின்று மட்டும் இவற்றை முன்னெடுக்க முடியாது. ஏனெனில் இன்றைய மோசமான சூழல் பாரிய அரசியல் பிரச்சினையாகும்.

எனவே அர்த்தமுள்ள நேர்மையான அரசியல் வெகுஜன நடவடிக்கைகள் தேவை. இல்லாவிட்டால்

அரசாங்கத்தின் நீடிப்பிற்கும் அதிகாரத்தின் இருப்புக்கும் இந்நாட்டு மக்களின் அடிப்படை ஜனநாய மனித உரிமைகள் பலியிட ப்படும் நிலை நீடித்துச் செல்வதைத் தடுக்க முடியாது.

ஆசிரியர் குழு


# நிறைவேற்று அதிகார அரசியலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளும்

வெகுஜனன்

இருபத்தி ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையைக் கொண்டு வந்தார். அப்போது அதன் எதிர்கால அபாயம் பற்றி மக்கள் சார்பு அரசியல் சக்திகள் சுட்டிக் காட்டிய போது பலர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஆனால் இன்று வரை இந்த முறைமையினால் இந்த நாடும் மக்களும் தேசிய இனங்களும் அனுபவித்த கொடுமைகள் போதும் போதும் என்றாகி விட்டது. இருப்பினும் இன்றும் கூட பிரச்சினைகளை அந்த முறைமையுடன் இணைத்துப் பார்க்கப் பலருக்கு முடிவதில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி மூன்று ஜனாதிபதிகளின் கீழ் பதினேழு வருடகால தொடர் ஆட்சி நடாத்தியது. அக் காலம் ஒரு இருண்ட ஆட்சிக் காலமாகவே அடையாளப்படுத்தப்பட்டது. அதனை மக்களுக்கு காட்டியே சந்திரிகா அம்மையார் பதவிக்கு வந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் அதே நிறைவேற்று அதிகார அரசியல் நடாத்தினார். ஆனால் முன்னைய ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்ச்சியாகத்தான் அவரது ஆட்சியும் அமைந்தது. அதன் பின் அந்த இடத்தை இப்போது மகிந்த ராஜபக்ஷ தெற்கு மண்ணின் மைந்தராக அலங்கரித்து பதவியில் இருந்து வருகிறார்.

இவர்கள் எல்லோரும் ஆட்கள் வேறானவர்களாக இருந்த போதிலும் சொல்லிலும் செயலிலும் ஆளும் வர்க்க அதிகாரத்துவ அரசியலைப் பாதுகாத்து வந்தவர்களேயாவர். ஜே. ஆர். ஆரம்பித்து வைத்த முதலாளித்துவ பேரினவாத ஏகாதிபத்திய அரவணைப்புப் பெற்ற ஆட்சி அதிகாரப் பயணத்தை கச்சிதமாக முன்னெடுத்து வந்தனர். தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இதிலிருந்து விலகியவரல்லர். அதனை அவரது அண்மைய உரை நன்கு வெளிப்படுத்தியது. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கருத்துக்களில் தான் சில முரண்பாடுகள் கொண்டிருந்த போதிலும் அவரது அரசியலமைப்பும் தாராள தனியார்மயக் கொள்கைகளும் நாட்டிற்கு பயன் உள்ளவையாக அமைந்து கொண்டதை பாராட்டாமல் இருக்க முடியாது என்ற சாராம்சத்தில் பேசியிருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் கலந்து கொண்டு ஜே. ஆரின் ஜனநாயகப் பண்புகளை வானளாவப் புகழ்ந்து கொண்ட நிகழ்விலேயே ஜனாதிபதியும் ஜே.ஆர். மீது தனது பற்றையும் பாசத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறார். ஜே. ஆர். தனது காலத்தில் யப்பானிய உதவியின் ஊடாகப் பெற்றுக் கொண்ட இன்றைய பாரளுமன்ற கட்டிடத்தில் ஜே. ஆரின் உருவ ஒவியத்தை திரை நீக்கம் செய்து வைத்த ஜனாதிபதி மகிந்த விரைவில் பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரங்களைப் பெற்றுத்தரப்போவதாகவும் கூறி இருந்தார். சந்திரிகா பத்து வருடங்களாகக் கூறி வந்து செய்யாது விட்டதை அடுத்த பன்னிரண்டுவருடத்தை குறி வைத்திருக்கும் மகிந்த செய்யப் போவதாகக் கூறுவது வெறும் பேச்சு என்றே எடுத்துக் கொள்ள முடியும். ஏனெனில் நிறைவேற்று அதிகார ஜனாதி



பதி என்பதும் அதனைச் சுற்றியுள்ள ஆளும் வர்க்க அரசியலும் சொல்வது போல் செய்வதற்கு சாதாரண விடயங்கள் அல்ல. இத்தகைய ஒரு அரசியலமைப்பு முறைமையின் கீழ் தான் இந்த நாட்டை அவர்கள் விரும்பிய ஒரே திசையில் செல்ல இயலுமாயிற்று. 1977ல் இருந்து 2007 வரை பட்டியில் இட்டுப் பார்த்தால் அதன் சாராம்சத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

இனவன்முறைகளைத் திட்டமிட்டு நடாத்தி இனக்குரோதம் வளர்த்து இனவெறியத் தூண்டி இனப் பிளவை நிரந்தரப்படுத்தினர். தொழிலாளி வர்க்கத்தையும் உழைக்கும் மக்களையும் அடக்கி ஒடுக்கி அவர்களது ஜனநாயக தொழிற்சங்க உரிமைகளை மறுத்து நிராகரித்தனர். இன்றைய ஜனாதிபதி அன்று கொண்டு வர இருந்த “தொழிலாளர் சாசனம்” காற்றில் பறக்க விடப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டது. தமிழர்களுக்கு எதிராக வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் இன ஒடுக்கு முறைகள் ஏவப்பட்டன. அவற்றுக்கு எதிரான மக்களது போராட்டங்கள் ராணுவ முனைப்புடன் ஒடுக்கப்பட்டன. பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையும் அதனை எதிர்த்த தமிழ் இளைஞர்களின் போராட்டங்களும் ஒன்றுக் கொன்று ஊட்டம் பெற்று வளர்ந்தன. அதே வேளை அவை யுத்தம் என்ற நிலைக்கு ஆளும் வர்க்கத்தால் முன் தள்ளப்பட்டது.

இவ் யுத்தத்தின் மறைவில் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலான தாராளமயம் தனியார் மயம் உலகமயமாதல் முழு வீச்சில் முன்னெழுந்து சென்றது. இதனை ஜே. ஆர். முதல் மகிந்த வரை வழி பிசகாது முன்னெடுத்தனர். நாட்டின் பொருளாதாரம் உலகமயமாதலின் பல்தேசியப் பொருளாதாரத் தேர்த் சில்லுகளுடன் பிணைக்கப்பட்டது. உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வழி காட்டும் எசமானர்களாயினர். உலக மேலாதிக்க அமெரிக்காவும் பிராந்திய மேலாதிக்க இந்தியாவும் இலங்கைக்குள் உட்புகுந்து தத்தமது நிலைகளை வலுப்படுத்திக் கொண்டன. தேசிய பொருளதாரம் சீரழிந்து சின்னாபின்னமடைந்து கொண்டது. தேசிய அபிலாஷைகள் என்பன யாவும் உலகமயமாதலின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுக் கொடிய கரங்களுள் சிக்க வைக்கப்பட்டது.

இவற்றினிடையேயான யுத்தம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது, அதனால் வடக்கு கிழக்கும் அங்கு வாழும் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களும் வரலாறு காணாத கொடுமைகள் வேதனைகள் துன்ப துயரங்களுக்குள் அமுக்கப்பட்டனர். இன்று அந் நிலை வடக்கு கிழக்கின் மனிதப் பேரவலமாக மாற்றமடைந்து உச்ச நிலையில் இருந்து வருகின்றது. இடப்பெயர்வு கொலைகள் ஆட்கடத்தல்கள் ராணுவத் தாக்குதல்கள் எதிர்த்தாக்குதல்கள் என விரிந்து பரந்து காணப்படுகின்றன. இச் சூழலை சர்வதேச சமூகம் எனக் கூறப்படும் அமெரிக்க மேற்குலக யப்பானிய ஏகாதிபத்திய சக்திகள் எவ்வாறு பயன் படுத்தலாம் என ஆழச் சிந்தித்து திட்டமிட்டும் வருகின்றன. அதேவேளை இந்தியா தனது பாதுகாப்பு பிராந்திய ஆதிக்கம் என்பனவற்றின் அடிப்படையில் இலங்கையின் இன்றைய நிலையை எவ்வாறு கையாளலாம் என புருவத்தை நெரித்து வியூகம் அமைக்க நிற்கின்றது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஊதியம் பெறுகிறவராகப் ‘பெண் எனும் ஆள்’

“இத் தொழிற்சாலையில் ஏறத்தாழப் பெண்களே உள்ளனர். அது ஏனென்றால் வேலை சலிப்பூட்டுமாறு ஒரே மாதிரியாக, சோர்வடையச் செய்கிற விதமாயும் இயந்திரங்கள் மிகவும் உழைப்பைக் குறைத்து உற்பத்தித்திறனை உயர்த்துவனவாகவும் அதன் காரணமாக அவற்றுக்கு ஈடுகொடுக்க நம்ப இயலாதளவு துரிதமாகச் செயற்படவேண்டியும் இருப்பது தான்.”

“எனவே அங்கே கீழே ஆண்களாற் தாக்குப்பிடிக்க இயலாது என்றும் அலுவலகத்தில் முடிவுக்கு வந்தார்கள்.”

“இவ்வளவு கடுமையாக உழைக்க ஒரு ஆண் கூடிய ஊதியங் கேட்பான். அப்படியும், அந்த வேலை அவனைப் பைத்தியமாக்கி விடும்.”

“பெண்கள் கூட விடாமுயற்சியுடையவர்கள். அவர்கள் இயல்பாகத் தொழில்நுட்பத் திறமையுடையவர்களல்ல. எனவே அவர்கட்கு வேலை விதவிதமாக இருக்கத் தேவையில்லை.”

“வருடக் கணக்காக அச்சொட்டாக ஒரே அசைவை அதிவேகமாகச் செய்வதற்குப் பெண்களின் கைகள் மெய்யாகவே அதி அற்புதமானவை.”

“ஏனென்றாற் பெண்கள் அதி பொறுமைசாலிகள்.”

இப்பகுதி தொழிற்சாலைப் பெண்தொழிலாளி ஒருவரது வேலைநாள் பற்றி ‘நீ, ஆள்?’ என்ற நூலில் மாரிற் போல்ஸென் எழுதியதிலிருந்து பெறப்பட்டது. ‘பெண்கட்கான தொழில்கட்கு’ எடுத்துக்காட்டான பலவற்றையும் அது கொண்டுள்ளது; குறைந்த ஊதியம்; கடுமையான சலிப்பூட்டும் வேலை; ஒரு வேலையைச் செய்வதற்குப் பெண்களுக்குள்ள தகுதிகள்; அவர்கள் பெண்பாலினர் என்பதால் அவர்கட்கு ‘இயல்பாயமைந்த குணாதிசங்கள்’ எனும் எண்ணம். இதனால் அவை தகுதியல்லாதனவாகின்றன.

‘பெண் எனும் ஆள்’ ஊதியம் பெறுகிறவராகக் கூறி உழைப்புச் சந்தைக்குள் நுழைகையில் என்ன நடக்கிறது?

ஸிரி யென்ஸென் உழைக்கும் பெண்களின் குறிப்பான நிலைமை பற்றியும் வர்க்கப் போராட்டத்தில் அவர்கள் வகிக்கும் பங்கிற்கு அது என்ன செய்கிறது என்பது பற்றியும் எடுத்துரைத்துள்ளார். பெண் தொழிலாளர் “வேலைக்கும் குடும்பத்துக்குமிடையே நசிபடுகின்றனர்.” அவர்களது வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் அவர்கள் தொழிலாளர் மட்டுமல்ல ஒடுக்கப்பட்ட பாலினரைச் சார்ந்தவர்கள் எனும் உண்மையால் அடையாளப்படுத்தப் பெறுகிறது.

மாரிற் போல்ஸென் விவரிக்கும் நிலைக்குப் பெண்கள் பெரும்பாலும் போய்ச் சேர்வது ஏன்? நான் பின்வருனவற்றை வற்புறுத்துவேன். ‘பெண் எனும் ஆளின்’ (பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள சமூகப் பாத்திரத்தின்) தனித்துவமான பண்புகள் இயன்றளவு அதிக லாபத்தைப் பெறுவதற்கான மூலதனத்தின் தேடலில் குறிப்பான முறைகளில் சுரண்டலுக்குட்படுகின்றன. இது வேண்டுமென்றே திட்டமிட்ட முறையில் (நிகழலாம் எனினும்) நிகழ அவசியமில்லை. அடிப்படையில் ‘பெண் எனும் ஆளின்’ சமூகப் பண்புகள் அவரை ஆண்களினின்றும் வேறுபட்ட முறைகளிற் சுரண்டுவதற்கு இயலுமாக்குகின்றன என்பது பற்றிய பிரச்சனையே இது.

நான் சிறப்பாக மூன்று விடயங்களை இங்கு கவனத்திற் கொள்கிறேன்.

* பெண்ணின் உழைப்புச் சக்தியின் பெறுமதி




* பெண்ணின் வாழ்க்கைக்கோலமும் (‘வேலைக்கும் குடும்பத்துக்குமிடையிலான நெரிதலால்’ தீர்மானிக்கப்படுவது) அது எவ்வாறு சுரண்டப்படக்கூடும் என்பதும்
* உற்பத்தித் துறையிலுள்ள பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் சிறப்பான ஒழுங்குமுறை ஏற்பாடுகள்.

பெண்களின் உழைப்புச் சக்தியின் பெறுமதி

பெண்கள் ஆண்களை விடக் குறைவான ஊதியம் பெறுகின்றனர். முன்னைக் காலங்களில் இது வெளிவெளியாக நடந்தது. அதே வேலைக்குப் பெண்கட்கான ஊதியமும் ஆண்கட்கான ஊதியமும் இருந்தன. உதாரணமாகஇ 1914ல் டேல் மனநோயாளர் மனையில் ஒரு ஆண் பணியாளின் தொடக்க ஊதியம் ஆண்டுக்கு 600 நோர்வீஜிய குறோணர். அதே வேலைக்குப் பெண்ணின் ஊதியம் 350 குறோணர் (ஆதாரம்: 1976ல் எரிக்ஸன் எழுதிய நூல்).

வெளிவெளியான ஊதியப் பாகுபாடு பெரும்பாலும் மறைந்துவிட்டது. எனினும் ஆண்களின் சம்பளத்துக்கும் பெண்களின் சம்பளத்துக்குமிடையிலான வேறுபாடு மறையவில்லை. உழைப்புச் சந்தை பால் அடிப்படையிற் பிரிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் ஆதிக்கத்திலுள்ள துறைகளைவிடப் பெண்கள் ஆதிக்கத்திலுள்ள தொழில்களில் ஊதியம் குறைவாக உள்ளது. அநேகமாக, விலக்கின்றி, உலகெங்கும் இவ்வாறே உள்ளது. 1982ல் சர்வதேச தொழில் நிறுவனம் 25 நாடுகளில் நடத்திய ஆய்வில் தொழிற்துறையில் பெண்களின் ஒரு மணி நேர ஊதியம் ஏறத்தாழ ஆண்களினதின் முக்காற்பங்கு எனக் காட்டியது. ஆய்விற்குட்பட்ட விருத்தி பெறும் நாடுகள் சிலவற்றில் பெண்களின் ஊதியமட்டம் தொழிர்வளர்ச்சி பெற்ற நாடுகளினதை விடக் கொஞ்சம் தாழ்வாக இருந்தது. எனினும் நாட்டுக்கு நாடு பெரும் வேறுபாடுகள் உள்ளன. அனைத்திற்கும் பொதுவானது ஏதெனின் எல்லாவிடத்தும் பெண்களின் ஊதியம் ஆண்களின் ஊதியத்தினும் குறைவாக இருந்தமைதான். சர்வதேச தொழில் நிறுவனத்தின்படி இதன் காரணம் ஒரே வேலைக்கு ஆண்களை விடப் பெண்களுக்குக் குறைவான ஊதியம் வழங்கப்படுவதன்றி, குறைவான ஊதியந் தரும் தொழில்களில் பெண்கள் செறிவாகக் காணப்படுவது தான்.




(ஆதாரம்: 1986ல் ரூத் லேகர் ஸெவாட் எழுதிய நூல்)

குறைவான ஊதியந் தருந் தொழில்களிற் பெண்கள் செறிவாகக் காணப்படுவது ஏன்? தொழிற்சந்தை தன்னளவிற் பால்வேறுபாட்டைக் கணிப்பிற் கொள்வதில்லை என்றே பெரும்பாலான விளக்கங்களின் திட்டமுறைகள் ஊகிப்பதாக ஜோன் ஹம்ப்றி 1984ல் எழுதிய நூலிற் சுட்டிக்காட்டுகிறார். தொழிற் சந்தை தொடக்கநிலையில் ‘பால் நடுநிலையானது’. எவ்வாறாயினுந் தொழிற் சந்தைக்கு வெளியேயுள்ள நிலைமைகள் காரணமாக, தகுதி பெறாதோருக்கான அல்லது முன்னேறும் வாய்ப்பேயற்ற தகுதிபெற இடமளியாத வேலைகள் போன்றனவற்றிற் போய்ச் சேருகின்றனர். குடும்பத்துக்கே முதற் பொறுப்பைக் கொண்டிருப்பதுடன் இணைத்துக்கொள்ளக் கூடியனவாக பளுவற்ற தொழில்களையே ‘தெரிவு செய்கின்றனர்.’ அவர்கட்குக் கல்வியும் இல்லை. உயரும் ஆவலும் இல்லை. இவையாவும் இணைந்து குறைந்த ஊதியத் தொழில்கட்குச்செல்லும்மாறுபெண்களை நெருக்குகின்றன.

தொடர்ச்சி 7ம் பக்கம்

# பாலியல் நிந்தனைச் சொற்களும் ஆணாதிக்கமும்

மனிதர் மனிதரை நிந்திக்கப் பயன்படுத்தும் சொற்கள் பலவகையின. ஒருவரை இழிவாகப் பேச அவரைத் தாழ்த்தும் வகையிலான சொற்களும் சொற்தொடர்களும் பாவிக்கப்படுவது வழமை. எனவே நிந்தனைச் சொற்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ அவற்றுக்குரிய சமுதாய விழுமியங்களைப் பிரதிபலிப்பன. பல்வேறு மனித சமுதாயங்களிலும் பயன்படும் நிந்தனைச் சொற்களில் கணிசமான ஒற்றுமை உள்ளது. இது சமுதாய விழுமியங்களிடையே உள்ள பரவலான ஒருமையின் காரணமானது.

அதேவேளை சமுதாய வேறுபாடுகளும் மொழிவிருத்தியின் வேறுபாடும் நிந்தனைச் சொற்களிலும் வேறுபாட்டுக்குக் காரணமாகின்றன. நமக்குப் பரிச்சயமான மொழிகளில் உள்ள நிந்தனைச் சொற்கள் பற்றியும் குறிப்பாக பாலியல் தொடர்பான சொற்கள் பற்றியும் கவனிப்போமாயின் பல ஆயிரம் வருடப் பெண்ணடிமை நடைமுறை இழிசொற்களிலும் ஆழமாக வேரூன்றி இருப்பதைக் காணலாம். ஒருவரது தோற்றம். உடல்வலிமை, செயற்திறமை, அறிவு, பண்பாடு, ஒழுக்கம், ஆடைஅலங்காரம் தொடர்பான நிந்தனைச் சொற்கள் பல உண்டு. இவற்றுக்கு உதாரணம் தந்து விளக்க வேண்டிய அவசியமில்லை. எனினும் பெரும்பாலும் இவ்வாறான நிந்தனைச் சொற்கள் ஒருவரது குறைபாடுகளை மிகைப்படுத்தும் முறையிற் பயன்படுவதுண்டு. சிலசமயம் ஒருவரது செயல்களின் மதிப்பீடாகவும் இவை பயன்படுவதுண்டு. சாதிப் பேராலும் பகையானதாகக் கருதும் ஒரு சமுதாயத்தின் பேராலும் ஒருவரை அயலார் என்று குறிப்பிடுவதாலும் மனிதரை இழிவு படுத்தலாம். குறிப்பிட்ட ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேராதவரை அச்சாதிப் பெயரால் அழைத்து நிந்திப்பதை அறிவோம். இவ்வாறே சில அயல் நாட்டுப் பெயர்க் குறிப்புக்கள் பயன்படுவதை அறிவோம். இதைவிட மிலேச்சன், பரதேசி, (சிங்களத்தில் பரதெமலா அதாவது அந்நியத் தமிழன்) போன்ற சொற்கள் அயலார் மீது நமது சமுதாயங்கள் காட்டும் தயவின்மையையும் வெளிப்படுத்துவன. இவ்வாறே பெண்மையைச் சார்ந்த சொற்களும் (முக்கியமாக பேடி) ஒரு ஆணைப் பெண்மையுடையவன் எனக் குறிக்கும் சொற்பிரயோகங்களும் நிந்தனையாகப் பயன்படுவன. கடுமையான நிந்தனை பெருமளவும் பேய் பிசாசுகள், துர்த்தேவதைகள், விலங்குகள் போன்றவற்றின் பெயரால் மனிதரை அழைப்பதாகவோ அல்லது பாலுறுப்புக்களையும் பாலுறவையும் குறிக்கும் சொற்களாகவோ அல்லது இவற்றினதும் பிற நிந்தனைச் சொற்களதும் சேர்க்கையாகவோ அமைவதைப் பலரும் அறிவார்கள். எருமை, கழுதை, பன்றி, நாய் தேவாங்கு போன்றவை சனியன். மூதேவி, பிடாரி போன்று துரதிர்ஷ்டம் அல்லது துர்க் குணங்களுடன் இணைத்துக் காணப்படும் தேவகளுடன் ஒப்பிடக் கூடிய அளவுக்கு மனிதரை நிந்திக்கும் குறியீடுகளாகின்றன. யானை, குதிரை, பசு, பூனை எனும் சொற்கள் பொதுவாக நிந்தனைக்குப் பயன்படுவதில்லை. அவ்வாறு பயன்படும் போது அடைமொழியுடன் (கள்ளப்பூனை என்பது போல) வருவதையே அறிவோம். இவையாவும் குறிப்பிட்ட விலங்குகளையும் தேவகளையும் பெண்களையும் பற்றி நமது சமுதாய வழக்கில் இருந்து வரும் கருத்துக்களையும் அவை தொடர்பான சமுதாய விழுமியங்களையும் குறிப்பன. எவ்வாறாயினும் மிகுந்த சினமும் மிகையான அவமதிக்கும் நோக்கமும் கொண்ட சொற்கள் பாலியற் தன்மையுடையன. அது மட்டுமன்றி நடத்தை பிறப்பு தொடர்பான சில சொற்களை விட்டால் மற்றவை ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிவழக்கிற்குப் புறம்பான சொற்களே. பாலுறுப்புகளை பாலுறவையும் குறிக்கும் நிந்தனைச் சொற்கள் தமிழ் எழுத்து வழக்கில் ஏற்கப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே, சிங்களஇ ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் எழுத்து வழக்கும் விஞ்ஞான மருத்துவ நடைமுறையும் பயன்படுத்தும் சொற்கள் நிந்தனையாகப் பயன்படும் சொற்களினின்றும் வித்தியாசமானவையாக இருப்பதைக் காணலாம். ஒருவரை விபச்சாரியின் பிள்ளை என்றோ திருமணமாகாத பெற்றோருக்குப் பிறந்தவர் என்றோ ஏசுவதற்குப் பாவிக்குஞ் சொற்கள் எல்லா முக்கிய மொழிகளிலும் உள்ளன என்றே கூறலாம். வழமையாக இவ்வாறு ஒருவரை ஏசும் போது அது அவரைத் திருடர், ஒழுக்கங்கெட்டவர் என்று ஏசுவது போலில்லாமல் வெறும் அவதூறான நிந்தனையாகவே இருக்கும்.

இவ்வாறே ஒரு பெண்ணை ஒழுக்கங் கெட்டவள் என்று பொருட்படுமாறு சொல்லும் வார்த்தைகள் அவரது ஒழுக்கத்தைக் கேள்விக்குட் படுத்துவதைவிட அவரை அவமதிப்பதையே நோக்கமாகக் கொண்டவை. எவ்வாறு நோக்கினும் இவ்வாறான வசைச் சொற்கள் ஒரு ஆணை அவமதிக்கும் போதுகூட அவரது தாயை விபச்சாரி அல்லது ஒழுக்கங் கெட்டவர் என்று அழைப்பதாகவே அமைகின்றன. அனைத்தினும் மோசமாகத் தாயுடன் பாலுறவு கொண்டவன் என்ற சொல்லால் அதிகம் அவமதிக்கப்படுவதும் அவமதிப்புக்கு உட்பட்டவனுடைய தாயேதான். ஒருவனைக் காமுகன் என்றோ ஸ்திரிலோலன் என்றோ குறிப்பிடுவோம் ஆயின் அது வெறும் வசையாக இல்லாது குற்றச்சாட்டான முறையிலேயே சொன்னதாகக் கருதுவதற்கு இடமுண்டு. இந்த நிந்தனைக்குரிய சொற்கள் ஆணின் ஒழுக்கத்தைவிட பெண்ணின் ஒழுக்கத்தையே கேள்விக்குட்படுத்தும் நியாயம் என்ன? இதற்கு விரிவான விளக்கம் இங்கு அவசியம் இல்லையென்று நினைக்கிறேன். ஒருவரைப் பாலுறுப்புகளின் பேர்களால் அல்லது அவற்றை

தொடர்ச்சி 7ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 11

பேராசிரியர் சி. சிவசேகரம்

## பண்டிகைகளின் சமூகப்பரிமாணம்

எல்லாச சமூகங்களிலும் மக்கள் தமது சமூக அடையாளத்தை யும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தவும் உறவுகளை மீளஉறுதிப்படுத்தவும் பண்டிகைகளைப் பயன்படுத்துகின்றனர். பண்டிகைகள் வீடுகளிற் கொண்டாடப்பட்டாலும் பொது இடங்களிற் கொண்டப்பட்டாலும் எவ்விடத்தும் அவற்றின் சமூகப்பண்பு நடைமுறையில் வெளிப்படுகிறது. பண்டிகைகட்கும் கோயிற் திருவிழா, கும்பாபிஷேகம், நோன்புகள் போன்றவற்றுக்கும் அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. சமய அடிப்படையிலான சிறப்பு நாட்களிலும் விழாக்களிலும் வழிபாட்டுக்கு முதன்மையான இடமும், கொண்டாட்டம் ஏதேன் இருப்பின், அதற்குக் குறைவான இடமுமே வழங்கப்படுகின்றன. பண்டிகைகளிற் பெரும்பாலானவற்றின் மீது மத அடையாளம் ஏற்பட்டிருப்பினும், அவற்றில் ஒரு சில போக மற்றவை அனைத்தும் சமூக அடிப்படையிலானவை.

சிலகாலம் முன்பு தைப் பொங்கல் பற்றிப் பேராசிரியர் நா. வானமாமலை எழுதிய கட்டுரையொன்று அண்மையில் தாயகம் சஞ்சிகையில் மீள் பிரசுரமாகியிருந்தது. அதில் அவர் பொங்கலுக்கும் சூரிய வழிபாட்டுக்கும் எதுவிதமான தொடர்புமிருக்கவில்லை என்றும் அது பெண்கள் முக்கியமான பங்குவகித்த ஒரு பண்டிகை என்பதற்கான சான்றுகளை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களினின்று எடுத்துக்காட்டியும் எழுதியிருந்தார். மார்கழி முடியத் தைப்பிறக்க நடக்கின்ற இப்பண்டிகை ஒரு காலத்தில் தனது சமூக அடையாளத்தை இழந்து மகர சங்கராந்தி என்று அதன் நாளின் பேரால் அழைக்கப்பட்டு ஒரு சமயச்சார்பான அடையாளம் பெற்றது. கேரளத்தில் அது இன்னமும் அவ்வாறே அழைக்கப்பட்டுக் கொண்டாடப்படுவது கவனத்திற்குரியது. தமிழ்நாட்டில் அது தமிழியக்கத்தின் தொடர்ச்சியாகத் திராவிட இயக்கத்தின் பிரசாரத்தின் மூலம் தனது தமிழ் அடையாளத்தைப் பெற்றது.

**பண்டிகைகளுக்கு மத அடையாளம் ஏற்றுவது தவறானது. மனித உறவுகளுக்கு பண்டிகைகள் பயன்படவேண்டும்**

பொங்கற் பண்டிகைகள் கிராமங்களில் ஒவ்வொரு விதமாக வெவ்வேறு நாட்களிற் கொண்டாடப்பட்டு வந்துள்ளன. பொங்குவதும் கிராமத் தெய்வத்திற்குப் படைப்பதும் அனைத்தினும் முக்கியமாக ஊரோடு சேர்ந்து உண்ணுவதுமே பொங்கற் பண்டிகைகளின் முக்கிய அம்சங்கள். இது போன்ற பண்டிகைகள் இந்தியத் துணைக்கண்டத்திலும் அதற்கு வெளியிலும் கொண்டாடப்பட்டு வந்துள்ளன. அவை பொங்குவதற்கும் மேலாகப் பிற வீட்டுப் பணிகளையும் சமூகப்பணிகளையும் நிறைவேற்றவும் அச்சந்தர்ப்பம் பயன்படுகிறது. சிறுதெய்வ வழிபாட்டுச் சூழலில் ஒரு பொங்கற் பண்டிகையில் தெய்வம் பெறுகிற முக்கியத்துவம் தெய்வத்திற்கும் சமூகத்திற்கும் இருந்து வரும் நேரடியான உறவுடன் நெருங்கிய தொடர்புடையது. அந்த உறவு, இந்து மதம் என்று பொதுப்பட அழைக்கப்படும் பிராமணிய மதங்களின் தெய்வங்களுடனான உறவினின்றும் வேறுபட்டதும் மனிதருக்கும் தமது தெய்வங்கட்கும் நெருக்கமானதும் ஆகும்.

தீபாவளி பற்றிய புராணக் கதை என்னவாக இருந்தாலும் தீபாவளி வெவ்வேறு இந்திய மாநிலங்களில் வெவ்வேறு விதமாகக் கொண்டாடப்படுகிறது. தீபங்களின் பண்டிகை என்ற மதச் சார்பற்ற விளக்கமும் தமிழகமும் இலங்கையும் உட்பட்ட பல இடங்களில் தீபாவளிக் கொண்டாட்டத்துடன் தொடர்புடையவையல்ல, தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு வணிகப்பரிமாணமும் உருவாகி விருத்தி பெற்றுள்ளதை நாம் காணலாம்.

நத்தார் (கிறிஸ்துமஸ்) கிறிஸ்துவின் பிறப்பின் கொண்டாட்டமென்று கொள்ளப்படுகிறது. எனினும் அப்பண்டிகையின் தோற்றுவாய் வேறு எனவுங் கருதப்படுகிறது. கிரேக்க, ரஷ்ய, கிறிஸ்துவ சமயத்தினருக்கும் அவற்றையொத்த பழமை வாய்ந்த கிறிஸ்துவ மதப்பிரிவினருக்கும் உரிய நத்தார் நாள் டிசெம்பர் 25 அல்ல என்பதும் இன்று நத்தார் படிப்படியாக மாற்றம் பெற்று மத எல்லைகளையுங் கடந்த ஒரு கொண்டாட்டமாகவும் மத நம்பிக்கையும் மதச் சடங்குகளுங் கடந்த ஒரு பண்டிகையாகி விட்டது.

எனினும் நத்தார் கொண்டாட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறிப்பாகச் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஏற்பட்ட மாற்றங்கள், முதலாளியத்தின் புதிய ஏற்பாட்டைத் தெளிவாக அடையாளப்படுத்துகின்றன. ஒரு ஊரினரோ ஒரு உறவுஞ் சுற்றமுமோ கூடிக் கொண்டாடுகிற நாளாகவும் மனிதரை மனிதர் நேரிற் சந்தித்து உரையாடிப் பகை மறந்து ஒன்றாக உண்டு தமது நட்பையும் உறவையும் வலுப்படுத்திக் கொள்ளக் கூடிய ஒரு நாள். இன்று எண்ணிலடங்காத வாழ்த்து அட்டைகளாலும் பெரும் பகுதி நத்தார் நாளுக்கு முன்னரே வழங்கப்படுகிற அல்லது அஞ்சல் மூலம் அனுப்பக்கூடிய பரிசுப் பொருட்களாலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூர்வதை விட தேவதாரு இன மரமொன்றின் கிளைகொண்டு அல்லது அது போன்று செயற்கையான செடிகொண்டு அமைந்த நத்தார் மரமும் அதிற்தொங்கும் அலங்காரப் பொருட்களும் சிறு மின் விளக்குகளும் மரத்திலும் அடியிலும் வைக்கப்பட்டுள்ள பரிசுப் பொருட்களும் நத்தாரின் அடையாளமாகிவிட்டன. ஐரோப்பிய நகரங்களிற் தனித்து வாழ்கிற வசதி குறைந்த மனிதருக்கு நத்தார் போன்ற அவலமான நாள் இல்லாதளவுக்கு நத்தார் அடையாளம் மாறி விட்டது,

நத்தாரின் வணிகமாதல் பிற சமயப் பண்டிகைகளையும் பாதித்துள்ளது. இன்று புத்தாண்டு, பொங்கல், தீபாவளி, வெசாக் அதைவிடக் குறைந்தளவில் பொசொன் வாழ்த்து அட்டைகள் ஒரு பெரிய வணிகச் செயற்பாடாக வளர்ந்து வருகின்றன. மனிதரை மனிதர் சந்திப்பதற்கு மாற்றீடான ஒரு நடவடிக்கையாக வாழ்த்து அட்டைகளை அனுப்புவது அமைந்துள்ளது. இவற்றுக்கான அடிப்படைக் காரணிகள் நகரமயமாதலின் விளைவாக வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றமும் பொதுப்பட நிலவுடைமைச் சமூக முறையிலிருந்து முதலாளியம் நோக்கிய நகர்வின் விளைவான பாதிப்புக்களும் எனலாம்.

நகரத்தில் பொங்கற் பண்டிகையை 'மரபு வழியில்' கொண்டாடுவதற்கு ஓரளவு பொருள், இட வசதி படைத்த மனிதருக்கே இயலும். அவ்வாறு கொண்டாடப்படும் பண்டிகைக்கு "உழவன் திருநாள்" போன்ற பேர்களைச் சூட்டிப் பெருமைப்படுவதும் வெறும் சடங்கு மட்டுமே. எனினும் புலப்பெயர்வு உட்பட்ட பலவேறு காரணங்களால் தமது இயல்புச் சூழலிலிருந்து அந்நியப்பட்டுப்போன தமிழ் மக்களும் அவர்களைச் சார்ந்தோரும் புதிய சூழலுடன் தம்மை இணைத்துக் கொள்ளவும் அதற்குப் பழக்கப்படவும் நீண்டகாலம் எடுக்கிறது. எனவே அவர்கள் மத்தியில் ஒரு அடையாளப் பிரச்சனை ஏற்படுகிறது. எனவே புதிய அடையாளத்தை முற்றாக ஏற்க இயலாத நிலை தொடரும் வரை பழைய அடையாளத்திற் கடைப்பிடிக்கக் கூடியவற்றைக் கடைப்பிடிக்கின்றனர். இங்கு சடங்குகள் போன்று பண்டிகைகளும் ஒரு முக்கியமான பங்கை ஆற்றுகின்றன. எவ்வாறாயினும் பண்டிகைகளை அவற்றுக்குரிய கிராமச் சூழலில் இருந்தவாறோ அதற்கு நெருக்கமான முறையில் எவ்வாறோ கொண்டாட முயல்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் அவர்கள் புலம் பெயர்ந்த சூழலுக்குள் முற்றாக உள்வாங்கப்பட்ட பின்னரும் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் உண்டென்று நம்புவதற்கு ஆதாரமாகப் பிற புலம்பெயர்ந்த நகரமயமாதலுக்குட்பட்ட சமூகங்களின் நடத்தை அமைந்துள்ளது.

வெளிவெளியாகவே மத அடையாளங் கொண்ட பெரிய வெள்ளிக்கிழமை, நோன்புப் பெருநாள் போன்றவையும் நவீனத்துவத்தினதும் முதலாளியப் பொருள் முதல்வாதத்தினதும் ஊடுருவலதும் தாக்கத்திற்கு உட்பட்டு வருகின்றன. புனிதமான மதச் சடங்குகள் எனப்படுவன வணிக நோக்கங்கட்கு மேலும் மேலும் விட்டுக்கொடுக்க நேருகிறது.

மத அடிப்படைவாதத்தின் எழுச்சியை நியாயப்படுத்துகிற விதமாகவே மத அடையாளங்கொண்ட சடங்குகள் வணிகமயமாகின்றன. எனினும் மத அடிப்படைவாதம் முன்பின்னாக்க இயலாத சமூக மாற்றங்களையும் குறுகிய லாப நோக்கையும் வேறுபடுத்திப் பார்க்க இயலாதுள்ளது. எனவே அவை சமூகத்தைப் பின்னோக்கித் தள்ளுகிற நோக்கிற் செயற்படுவதோடு பண்டிகைகளின் சமூகப் பரிமாணத்தையும் நிராகரிக்கின்றனர்.

முற்போக்கான சமூகச் சிந்தனையுடையோர் சடங்குகளதும் பண்டிகைகளதும் சமூகப் பங்கை மறுக்காத அதேவேளை அவற்றுட் பொதிந்திருக்கும் சமூகக் கேடான பண்புகள் விரிவுபடுத்தப்பட்டு சமூகம் பின்னோக்கிய திசையில் தள்ளப்படுவதை மறிக்கும் பொறுப்புடன் செயற்பட வேண்டியவர்களாவர்.

எனினும் ஒரு புதிய சமூகமும் புதிய பண்பாடும் மலரும் வரை மரபு சார்ந்த முறையில் விழாக்களுங் கொண்டாட்டங்களும் தொடரும். மனிதரை மனிதரிடமிருந்து பிரித்துவைக்கிற முதலாளியச் சிந்தனை முறியடிக்கப்படும் வரை புதிய சமூகத்திற்கான விழாக்களும் கொண்டாட்டங்களும் உருவாக்கப்பட்டாலும் வெற்றி பெறப் போவதில்லை. எனவே சமூகத்தில் வழக்கிலுள்ள விழாக்களிலும் பண்டிகைகளிலும் உள்ள முற்போக்கான சமூக நலன் சார்ந்த விடயங்களை வற்புறுத்தி மனிதரின் ஒன்றிணைந்த சமூகச் செயற்பாட்டுக்கான பரந்துபட்ட தளங்களை நிறுவ இயலும்.

பண்டிகைகளும் விழாக்களும் பின்னோக்கிய சறுக்குப்பாதையாக விருத்தி செய்யப்பட வேண்டுமா அல்லது புதிய சமுதாயத்திற்கான ஒரு பாதையாக விருத்தி செய்யப்பட வேண்டுமா என்பது நம் முன் உள்ள முக்கியமான ஒரு தெரிவாகும்.

---

**பாலியல் நிந்தனைச் சொற்களும்**

6ம் பக்க தொடர்ச்சி

அடிப்படையாகக் கொண்ட சொற்களால் இழிவுபடுத்தும் போதும் பாலுறவைக் குறிக்கும் சொற்களால் இழிவுபடுத்தும் போதும் ஒருவரை விலங்குகளின் பெயரால் நிந்திப்பதைவிடக் கடுமையான உணர்வே தென்படுகிறது. மலம், அழுகல், துர்நாற்றம் போன்றவற்றுக்கு ஈடானவையாகவே பாலுறுப்புகளை குறிக்குஞ் சொற்கள் பயன்படுகின்றன. இங்கும் பெண்களின் பாலுறுப்புகளைக் குறிக்கும் சொற்களே நிந்தனைச் சொற்களில் அதிகமாக இருப்பதும் அவை ஆணுறுப்புகளைக் குறிக்கும் சொற்களை விட அதிகமாகப் பாவிக்கப்படுவதும் தற்செயலானதல்ல.

பாலுறவைக் குறிக்கும் நிந்தனைச் சொல் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிவழக்கில் உள்ள புணர்ச்சி என்ற சொல்லைப் போலன்றி ஆணாற் பெண்ணுக்குச் செய்யப்படும் காரியமாக இருப்பதும் நம் கவனத்திற்குரியது.

இவை வெறுமனே ஆணாதிக்கத்தின் வெளிப்பாடுகள் மட்டுமா அல்லது நமது சமுதாயங்களுட் பாலுறவு பற்றியும் பாலுணர்வு பற்றியும் இருக்கின்ற வக்கிர உணர்வுகள், போலி அருவருப்பு, பாசாங்குகள் என்பவற்றின் வெளிப்பாடுகளுமா என்பது சிந்தனைக்குரியது. ஆபாசமான எழுத்து, பேச்சு, படங்கள் என்பவற்றை எதிர்ப்போர் கூட ஆத்திரம் வரும்போது பாலியல் நிந்தனைச் சொற்களைக் கூசாது பாவிப்பதுண்டு. மொழிவழக்கில் உள்ள பல துர்ப் பிரயோகங்கள் போல நிந்தனைச் சொற்கள் அதிகம் சிந்தனையில்லாமலே பாவிக்கப்படுகின்றன.

சாதிப்பெயராலோ, பிரதேச, இனப்பெயராலோ எவரையும் நிந்திப்பதை இன்று உலகின் சமுதாயங்கள் தவறென்று ஏற்கின்றன. அடிப்படையிலான மனித உணர்வான பாலுணர்வையும் அதைவிட முக்கியமாக மனித இனத்தின் ஒரு பாதியினரை அவமதிக்கும் சொற்பிரயோகங்கள் பற்றி நாம் கூடிய கவனம் காட்ட வேண்டாமா?

சிவசேகரம் (நன்றி- சக்தி. மார்ச் 92 பக். 51-55)

---

**ஊதியம் பெறுகின்ற**

6ம் பக்க தொடர்ச்சி

பெண்களின் ஊதியத்திற்கும் ஆண்களின் ஊதியத்திற்குமிடையிலான வேறுபாடு, தொழிற்சந்தையிற் பெண்ணின் வாய்ப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் புறக் காரணிகளின் விளைவான தாகும்.

இவையாவும் அனேகமாகப் பெருமளவும் உண்மையாயிருக்கலாம். ஆயினும் இது முழுமையானதல்ல. இது அனேகமாக முழுமையின் அதி முக்கியமான பகுதியுமல்ல. ஹம்ப்றி 1980ல் எழுதிய நூலில் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்:

"சந்தை, ஆணையும் பெண்ணையும் பால் வேறுபாடு கடந்து மதிப்பிடுவதில்லை. பாலும் ஆற்றலும் தொடர்பான ஆய்வுகளில் இது வற்புறுத்தப்பட்டுள்ளது. தொழிற்சந்தைகள், பெண்களைத் திறமைத் தொழில்களிலிருந்து விலக்கிவைக்க மட்டுமன்றிப் பெண்கள் அத் தொழில்களைச் செய்யும் போது அவற்றைத் தரந் தாழ்த்தும் படியும் செயற்படுகின்றன."

இதன் பொருள் ஏதெனின் பெண்ணின் உழைப்பினதும் ஆணின் உழைப்பினதும் பெறுமதியிலேயே வேறுபாடு உண்டு என்பதாகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இன ஒடுக்கலும் போராட்டமும் அமெரிக்க அக்கறையும்

ஏகாதிபத்தியத்துக்குத் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக என்ன நிலைப்பாடு இருக்கிறது என்ற கேள்விக்குத் தேசங்களதும் தேசிய இனங்களதும் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான ஒரு விடை தேடுவது கடினம். ஏகாதிபத்தியம் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்கிறதா என்ற கேள்விக்கும் திட்டவட்டமான ஒரு விடை கிடையாது. கொலனிய யுகத்திலிருந்தே தேசங்கள் மீதான ஒடுக்குமுறை பற்றிய கேள்விக்கான திட்டவட்டமான ஒரு விடையை ஒடுக்கப்படுகிற தேசத்தின் நோக்கிலோ ஒடுக்குகிற தேசத்தின் நோக்கிலோ கூடப் பெற இயலாமலே இருந்தது,

ஒவ்வொரு ஏகாதிபத்திய நாட்டினதும், அந்த நாட்டின் உண்மையான எசமானர்களான ஏகபோக முதலாளிய நிறுவனங்களதும் நலன்களை முன்வைத்தே அந்த நாட்டின் ஆட்சியாளர்கள் தமது உள்நாட்டு, அயல்நாட்டுக் கொள்கைகளை வகுக்கின்றனர்.

கொலனிய யுகத்தில் ஒரு கொலனிய வல்லரசு இன்னொரு கொலனிய வல்லரசின் கீழுள்ள நாட்டின் விடுதலைப் போராட்டங்களை ஆதரித்திருக்கிறது. ஆனால் அந்த ஆதரவக்கு இரண்டு நோக்கங்கள் இருந்தன. ஒன்று தனக்குப் போட்டியாயிருக்கிற வல்லரசைப் பலவீ னப்படுத்துவது. மற்றது கொலனி ஆட்சிக்குக் கீழ்ப்பட்ட நாட்டைத் தன்வசமாக்குவது. இவ் வாறான உலக ஆதிக்கத்திற்கான போட்டியே இரண்டு உலகப் போர்கட்குக் காரண மாயிருந்தது. இன்று ஏகாதிபத்தியங்களிடையே மேலாதிக்கத்திற்கான அப்படிப்பட்ட வெளிவெளியான மோதல் ஒன்றைக் காண முடியாது. ஏனெனில் அமெரிக்காவே உலகின் மிக வலிய மேலாதிக்க வல்லரசாக உள் ளது. நேரடியான கொலனி ஆட்சியின் இட த்தை நவகொலனியம் என்னும் பொருளியல் வழியிலான ஆதிக்கம் பிடித்துக் கொண்டுள்ளது. கொலனிய ஆட்சியாளரின் படைகள் செய்த காரியத்தை உள்ளூர் அரசின் படைகள் செய்கின்றன. நிலைமைகள் கட்டுக்கடங்காமற் போகும் போது அதாவது ஏகாதிபத்திய மேலாதிக் கத்திற்கு எதிரான சவால்கள் வலுப்படும் போது மட்டுமே ஏகாதிபத்தியம் தனது படைகளைப் பயன்படுத்துகிறது. முடிந்தால் அதை யுங் கூட ஐ. நா பாதுகாப்புச் சபையின் பேரில் செய்து கொள்கிறது.

இரண்டாம் உலகப் போரின் பின்பு மாறி மாறி எங்காவது பேரழிவு மிக்க போர்கள் நடைபெற்றுக் கொண்டே இருந்து வந்துள்ளன. கொலனிய மேலாதிக்கத்திற்கு எதிரான போர்களும் அந்நிய ஆக்கிரமிப்புக்கும் மேலாதிக்கத்திற்கும் எதிரான போர்களும் அவற்றில் முக்கியமான ஒரு பகுதியாவன. உள்நாட்டு யுத்தங்கள் அதேயளவுக்கு முக்கியமானவையாக இருந்து வந்துள்ளன. இவற்றியெல்லாம் ஏகாதிபத்தியம் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏதோ வகையில் ஒரு முக்கியமான பங்கு வகித்துள்ளது. சோவியத் யூனியன் வலிமையும் பின்னைக்காலத்தில் அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிரான ஒரு உலக வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்தும் முனைப்பில் சோவியத் யூனியன் மூன்றாம் உலகில் மேலாதிக்கப் போக்கில் நடந்து கொண்டதும் சோவியத் யூனியனுக்கு எதிரான அமெரிக்கக் குழிபறிப்பு வேலைகளைத் தீவிரப்படுத்தியது. அந்த நோக்கத்திற்காகவும் பொதுவாகவே சோஷலிஸ ஆட்சிகள் நிலவிய நாடுகளிலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஆட்சிகள் இருந்த நாடுகளிலும் பலவாறான குறுக்கீடுகள் நிகழ்ந்தன. இவற்றுட் பல தேசிய இனங்களினதும் தேசங்களதும் விடுதலைக்கான போராட்டங்கட்கு ஆதரவு என்ற தோற்றத்தைப் பெற்றன. விடுதலைப் போராட்டங்கட்குக் குழிபறிப்பதற்குக் கூடத் தேசிய சிறுபான்மையினங்கள் தூண்டிவிடப்பட்டுள்ளன.

அமெரிக்க சோவியத் யூனியனின் ஆதிக்கத்திற்கு எதிராக நேரடியாகவோ மறைமுகமாகவோ குறுக்கிட்ட மூன்று நிகழ்வுகளைப் பார்ப்போம். ஒன்று அங்கோலா. அங்கே விடுதலை இயக்கங்களாகத் தொடங்கிய இரண்டு அமைப்புக்களிடையிலான மோதல் விடுதலையின் பின்பு உள்நாட்டுப் போராக இருபது ஆண்டுகட்கு மேலாகத் தொடர்ந்தது. சோவியத் சார்பான அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்காவினதும் நிறவாத தென்னாபிரிக்காவினதும் நேரடி ஆதரவுடன் யோனாஸ் சவிம்பியின் தலைமையில் தொடர்ந்த கிளர்ச்சியில் சோவியத் யூனியனுக்கு ஆதரவாகக் கியூபாவின் குறுக்கீடு அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவை வென்றெடுத்ததால் அமெரிக்க நோக்கங்கள் நிறைவேறவில்லை.

எதியோப்பியாவின் கொடுங்கோலாட்சியான மன்னன் ஹெய்லே சலாசியைத் தூக்கி எறிந்த பிரியம் மெங்கிற்சு தலைமையிலான ராணுவ ஆட்சி வெளியே இடதுசாரித் தோற்றங்காட்டினாலும் வேகமாகவே ஒரு அடக்குமுறை ஆட்சியாக மாறி கொலனிய ஆட்சியாளரால் எதியோப்பியாவுக்குள் சேர்க்கப்பட்ட எரித்திரியாவை கொடிய தேசிய இன ஒடுக்கலுக்கு உட்படுத்தியது. எரித்திரிய மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அமெரிக்கா வழங்கியது அந்த ஆதரவின் நோக்கம் எதியோப்பியாவில் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு



நடக்க வேண்டும் என்பதே அவ்வாறு இடம் பெற்ற பின்பு எரித்திய மக்களுக்கு ஆதரவு வழங்கிய அதே அமெரிக்கா எரித்தியா மீது குண்டு வீசுவதற்கு எதி யோப்பியாவுக்கு உதவியது. அமெரிக்காவின் ஆதரவுபெற்ற ஒரு விடுதலை இயக்கம் ஒரே நாளில் ஒரு பயங்கர வாதப் பிரிவினை இயக்கமாக

## அமெரிக்காவின் இறுதி இலக்கு முழு இலங்கை மீதான ஆதிக்கமே!

அமெரிக்காவால் காட்டப்பட்டது.

ஆ∴ப்கானிஸ்தானில் இருந்த நிலப்பிரபுத்துவக் கொடுங்கோலாட்சியைத் தூக்கி எறிந்து உருவான ஆட்சிக்கு அண்டை நாடான சோவியத் யூனியனின் ஆதரவு இருந்தது. ஆ∴ப்கானிஸ்தானின் பிற்போக்குச் சக்திகளைக் கொண்டு ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்த அமெரிக்கா இஸ்லாமிய மதவாத அரசியலை நாடியது. ஆ∴ப்கானிஸ்தானின் கேந்திர முக்கியத்துவங் காரணமாக அதன் மீது தனது செல்வாக்கைக் கைவிட விரும்பாத சோவியத் யூனியன் முதலில் ஆ∴ப்கானிய அரசாங்கத்திற்கு இராணுவ உதவி வழங்கியது. பின்பு நேரடியாகவே தனது படைகளை அங்கு அனுப்பியதன் மூலம் அமெரிக்காவும் இஸ்லாமிய தீவிரவாதிகளும் வைத்த பொறியிற் சிக்கிக் கொண்டது. ஆ∴ப்கானிஸ்தானில் சோவியத் குறுக்கீட்டின் விளைவாக ஏற்பட்ட ராணுவத் தோல்வி உள்நாட்டிலும் வெளியிலும் சோவியத் ஆட்சியாளர்கட்குக் கிடைத்த ஒரு பெரிய அடியாக அமைந்தது. சோவியத் யூனியனின் உடைவைத் துரிதப்படுத்திய ஒரு முக்கிய நிகழ்ச்சி ஆ∴ப்கானிஸ்தானின் உள்நாட்டுப் போர் எனலாம். அங்கு தான் ஆட்சிக்கு வர உதவிய மதவாத ஆட்சியைத் தன்னாற் கட்டுப்படுத்த இயலாத நிலையில் அமெரிக்கா தான் ஊட்டி வளர்ந்த தலிபானிகளை ஆட்சியிலிருந்து விரட்ட எடுத்த முயற்சிகள் இன்று ஒரு போராகி அமெரிக்காவை அல்லற்படுத்துகிறது.

இவை அமெரிக்கா விடுதலைப் போராட்டங்களுக்கு வழங்குகிற 'ஆதரவின்' உண்மையான வடிவத்தை விளக்கப் பொதுமானவையல்ல என்று யாரும் நினைத்தால் யூகோஸ்லாவியாவைப் பிளவுபடுத்திச் சிதைத்துப் பிரித்துப் போடுவதில் அமெரிக்கா தேசியவாதத்தை எவ்வாறு பயன்படுத்தியது என்பதைக் கவனிக்கலாம். அங்கு அமெரிக்கா விரும்பாத ஆட்சி எஞ்சியிருந்த சேர்பியாவினுள் அல்பானிய தேசிய இனத்தவர் செறிவாக வாழும் கொசொவோவினுள் பிரிவினைவாதச் சக்திகளை சி.ஐ.ஏ மூலம் அமெரிக்கா ஆயுதபாணிகளாக்கி ஒரு இனமோதலுக்கும் இனப்படுகொலைகட்கும் வழி செய்தது. சேர்பியாவில் மிலொஷொவிச் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்பு அமெரிக்கா கொசொவோ பிரிவினைவாதிகளைக் கைவிட்டுவிட்டது.

தேசிய இன ஒடுக்கலை மிகக் கொடிய முறையில் அனுபவிப்பவர்கள் குர்திய இனத்தவர். துருக்கியின் தெற்கிலும் ஈராக்கின் வடக்கிலும் ஈரானின் வட மேற்கிலும் மூன்று நாடுகளிடையே குர்திய பிரதேசம் பிரிவுண்டுள்ளது. ஒரு சிறு பகுதியினர் சிரியாவின் வடகிழக்கில் வாழுகின்றனர். சதாம் ஹுஸேன் குர்திய மக்களைக் கொடுமைப்படுத்தியது பற்றி நமக்கு நிறையவே சொல்லப்பட்டாலும் அமெரிக்காவின் மிக நெருங்கிய கூட்டாளி நாடான துருக்கியிலேயே குர்திய மக்களின் மீதான ஒடுக்குமுறை மிகக் கொடுமையானது. அங்கு தான் விடுதலைப் போராட்டம் மிக வலிமைபெற்றுக் காணப்பட்டது. துருக்கிய குர்திய விடுதலைப் போராட்டத்தை நசுக்க அமெரிக்காவும் இஸ்ரேலும் மிகவும் உதவியுள்ளன. அதே வேளை சதாம் ஹுஸேன் 1990க்குப் பின்பு அமெரிக்காவின் எதிரியாக உருமாறிய பின்பு அமெரிக்கா சதாம் ஹுசேனுக்கு எதிராக ஈராக்கிய குர்திய தேசியவாதிகளைப் பயன்படுத்தியது. இன்று ஈராக்கில் அமெரிக்காவின் அதி நம்பகமான நட்புச்சக்தியாக குர்திய தேசியவாதிகள் இருக்கின்றனர். எனினும் ஒரு தனியான ஈராக்கிய குர்திஸ்தானோ ஒரு பூரண சுயாட்சியோ உருவாகுமானால் அது துருக்கியினுள் சிக்கல்களை உருவாக்கும். எனவே ஈராக்கில் அமெரிக்காவுக்கு முழு ஆதரவான ஒரு சூழ்நிலை இல்லாதளவில் குர்திய தேசியவாதிகளை அமெரிக்கா அரவணைக்கும். ஆனால் குர்திய அதிகாரம் துருக்கியின் குர்திய இன ஒடுக்கலுக்கு ஒரு சவாலாக அமையுமளவுக்கு வளர அமெரிக்கா அனுமதிக்க மாட்டாது.

இன்னொருபுறம். தனது சர்வதேசக் காய் நகர்த்தல்கட்கு வசதியாகவும் உலகமயமாதல் திட்டத்திற்கு உடன்பாடாகவும் அமைகிற ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேசிய இன ஒடுக்கலுக்கு அமெரிக்காவின் பூரண ஆசிகள் இருந்து வந்துள்ளன. ஆக மிஞ்சினால் மனித உரிமை மீறல்கள் பற்றிய மெலிதான கண்டனங்கள் அல்லது கவலை தெரிவிப்பதற்கு மேலாக எதையும் கேட்க இயலாது. முன்னைய இந்தோனீசிய ராணுவ ஆட்சி கிழக்கு திமோரிலும் அச்சே மாகாணத்திலும் நடத்திய வெறியாட்டங்கள் பற்றிய அமெரிக்க மௌனம் முதல் இலங்கையின் தேசிய இன ஒடுக்கல் வரையும் இதற்கான உதாரணங்கள் பல உள்ளன.

இன்று இலங்கையில் அதிகாரப்பரவலாகத்தையும் அமைதியான தீர்வையும் வற்புறுத்தி இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சில விமர்சனங்கள் வெளிவெளியாக மேலை நாடுகளிலிருந்தும் சாடைமாடையாக அமெரிக்காவிலிருந்தும் வருவதையிட்டுத் தமிழ் மக்களிடையே புதிய எதிர்பார்ப்புக்களை உருவாக்குகிற ஒரு போக்கைத் தமிழ் ஊடகங்களிற் காண்கிறோம். எனினும் தமிழ் மக்கள் மிக மோசமான விமானக் குண்டுவீச்சுக்கும் எறிகணைத்தாக்குதல்கட்கும் உட்பட்ட ஒரு வருடக்காலத்தில் நடந்த இடப்பெயர்வுகளும் உயிரிழப்புக்களும் பற்றி அமெரிக்காவோ ஐரோப்பிய நாடுகளோ இந்தியாவோ ஏன் எதுவுமே செய்யவில்லை என்பதற்கான காரணங்களையும் நாம் ஆராய வேண்டும். ஆனால் மார்ச் 5ல் அமெரிக்க ராஜாங்க திணைக்களம் மனித உரிமை மீறல்கள் பற்றி வெளியிட்ட அறிக்கையில் இலங்கை பற்றி கடுந்தொனியில் குறிப்பிட்டுள்ளமை கூட மக்கள் சார்பு நிலைப்பாடு எனக் கொள்ள முடியாது. அமெரிக்காவின் ஆதிக்க நோக்கமே மனித உரிமை மீறல்களின் மீதான கண்டனத்திற்குப் பின்னால் படிந்து காணப்படுகின்றமை பிரிந்துப் பார்க்கப்பட வேண்டியவையாகும்.

அமெரிக்கா ஈழத் தமிழரின் சுயநிர்ணயத்தை எந்த நிலையிலும் ஆதரிக்கவில்லை. மாறாக 25 ஆண்டுகளாக தமிழ் இன ஒடுக்கலுக்கும் போருக்கும் உதவிய அமெரிக்காவின் இறுதித் தேவை இலங்கை மீதான பூரண ஆதிக்கம் மட்டுமே. அது உடனடியாக இயலாத போது இடைக்காலத்தில் இந்தியாவின் ஒத்துழைப்புடன் கூடிய மேலாதிக்கம் தான். விடுதலைப் புலிகள் ஒரு வலிய ஆயுதப் போராட்டச் சக்தியாகவும் அரசாங்கத்துக்குச் சவாலாகவும் இருப்பது அமெரிக்காவுக்கு உடன்பாடானதல்ல. இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் முரண்டுபிடித்தால் அல்லது அதன் உலகமயமாதல் கொள்கைக்குக் கேடான முறையில் நடந்து கொண்டால் விடுதலைப் புலிகளைப் பற்றிச் சிறிது பரிவுடன் நடந்து கொள்ளுவது போல ஒரு தோற்றங் காட்டப்படும். அவ்வாறே புலிகள் இயக்கம் உலகமயமாதல் போக்குக்கு ஆதரவாக இருக்கும் வரை அவர்களைப் பயன்படுத்துவது பற்றி அமெரிக்க மென்மையாக நடந்து கொள்ளும் அதற்கும் மேலாக அமெரிக்காவிடமிருந்தோ எந்த மேலாதிக்க வல்லரசிடமிருந்தோ தமிழ்த் தேசிய இனமோ அல்லது ஏனைய தேசிய இனங்களோ எதையும் எதிர்பார்க்க நியாயமில்லை.

**~மோகன்~**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# 5வருட போர் நிறுத்தம் அர்த்தமற்றதாகிக் கொண்டது

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும போர் நிறுத்த உடன்படிக்கையில் ஒப்பமிட்டு ஐந்தாண்டுகள் கடந்துள்ளன. வடக்கு- கிழக்கின் மக்களைப் பொறுத்த வரை போர் நிறுத்தத்திற்கும் மேலாக, ஏ-9 பாதை திறப்பை விட்டால் ஒரு குறுகியகால நிம்மதியை விட நன்மை வேறு எதுவுமே பெறப்படவில்லை. போர் நிறுத்தத்திற்கும் மேலாக அரசாங்கத் தரப்பில் வேறு எதிர்பார்ப்பு எதுவும் இருந்ததாகக் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனை என எதுவுமே அரசாங்கத்தால் முன் மொழியப்படவில்லை. அதைவிடவும் போர் நிறுத்தத்தை அடுத்து நடந்த பேச்சுவார்த்தைகளில் ஏற்கப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையோடு தொடர்புடைய காரியங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

வடக்கு- கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகட்கு மட்டுமன்றி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்களில் கணிசமான பகுதியினரதும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்வதிலும் மக்களை இயல்பு வாழ்க்கைக்கு மீட்டெடுப்பதிலும் அரசாங்கமும் அதன் நிருவாக இயந்திரமும் காட்டிய அக்கறையின்மைபோக பாதுகாப்புப் பிரிவினர் வடக்குக் கிழக்கிற்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பலவேறு தடைகளை உருவாக்கிக் கொண்டே இருந்தனர். சமாதான அனுசரணையாளர்களின் குறுக்கீட்டால் இவ்வாறான விடயங்களில் ஓரளவு நெகிழ்வை ஏற்படுத்த முடிந்தாலும் போர் நிறுத்த உடன்படிக்கை என்பது நிலையான சமாதானத்திற்கும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்குமான ஒரு முக்கியமான முதலாவது படி என்ற எண்ணம் ஆட்சியாளர்களிடமோ அதிலும் முக்கியமாக அரச படைகளிடமோ இருக்கவில்லை.

விடுதலைப்புலிகள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட ஆயத்தம் என்று சொன்னதைக் கூட யூ. என். பி அரசாங்கம் சரியான முறையில் பயன்படுத்தி நாட்டிலிருந்த சமாதானத்திற்குச் சாதகமான சூழலை ஒரு நியாயமான தீர்வுக்குச் சாதகமான சூழலாக மாற்ற எதையுமே செய்யவில்லை. இடைக்கால அமைதி வந்துவிட்டது என்பதற்கு அப்பால் வேறு எதுவுமே தென்னிலங்கையின் அரசியலில் முக்கியமாகத் தெரியவில்லை. இந்த அமைதியின் விளைவாகப் பொருளாதாரம் முன்னேறும் மக்களின் வாழ்க்கைச் சுமைகள் குறையும் என்ற எதிர்பார்ப்புக்கள் கட்டியெழுப்பட்டன. ஆனால் அவ்வாறான மாற்றங்கள் சடுதியில் நிகழ முடியாது என்பதோடு போரின் காரணமான பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வு இல்லாமல், அரசாங்கம் கனவு கண்டது போல அந்நிய முதலீடும் ‘உதவிகளும்’ நாட்டிற்குள் வரவில்லை. இந்த நாட்டில் நீண்டகால முதலீட்டுக்கான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்பது போக குறுகியகாலத்தில் போட்ட முதலுக்கும் மேலாக லாபத்தையும் வருமானத்தையும் அள்ளிக் கொண்டு போகிற அந்நிய முதலீட்டாளரும் என். ஜி. ஓக்களுமே செயற்பட்டு வந்தனர். இவ்விதமான அரசியல் தேக்க நிலையில் வேறு சமாதான முன்னெடுப்புக்களோ தீர்வுக்கான முன் நகர்



வுகளோ இல்லாத சூழ்நிலையிலேயே விடுதலைப்புலிகள் பேச்சுக்களிலிருந்து விலகினர். அதேவேளை போர் நிறுத்தத்தையே விரும்பாத சக்திகளும் யூ. என். பி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குத் தருணம் பார்த்திருந்த சந்திரிகா குமாரதுங்கவும் அவரது நெருங்கிய கூட்டாளிகளும் துரிதமாகச் செயற்பட்டனர். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுசன முன்னணியும் ஜே. வி. பியும் இணைந்த ஒரு கூட்டரசாங்கம் பதவிக்கு வந்த பின்பு அமைதிக்குக் குழிபறிக்கிற வேலைகளும் துரிதமடைந்தன.

சுனாமி அனர்த்தத்திற்கு முன்பாகவே அரச சார்பான முன்னாள் விடுதலை இயக்கங்களும் யூ. என். பியின் துண்டுதலின் பேரில் அமெரிக்க அனுசரணையுடன் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட உடைவும் போர் நிறுத்தத்திற்கு மேலும் இடையூறுகளை ஏற்படுத்தின. தொடர்ச்சி 10ம் பக்கம்

# 90வது வயதில் தோழர் எஸ்.டி



முன்னாள் கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா கடந்த டிசம்பர் மாதத்தில் தனது தொண்ணூறாவது வயதினுள் பிரவேசித்தார். உடல் நிலை சற்று தளர்ந்திருந்தாலும் நல்ல ஆரோக்கியத்தோடும் நினைவாற்றலோடும் இருக்கின்றார். இச் சந்தர்ப்பத்தில் எஸ். டி. பற்றிய பழைய அரசியல் நினைவுகளை மீட்டுரைப்பது புதிய தலைமுறையினருக்கு பயன் தருவதாகும்.

எஸ். டி. பண்டாரநாயக்கா வர்க்க ரீதியில் சிங்கள வளவுகார மேட்டுக்குடி குடும்பத்திலிருந்து வந்தவர். அவரிடம் இளமைக்காலம் முதல் அந்நிய கொலனிய எதிர்ப்பும் தேசிய அபிலாஷைகளும் நிறைந்திருந்தன. அதன் காரணமாக அவர் அரசியலில் கொலனிய எதிர்ப்புக் கொண்ட ஒரு தேசிய வாதியாக முன்னுக்கு வந்தார். அவரது தேசியம் பெருந்தேசிய மாக ஒருபோதும் இருக்கவில்லை. ஒரு முற்போக்கு தேசிய வாதியாகவே தன்னை நிலை நிறுத்திக் கொண்டார். நாட்டின் இனப்பிரச்சினை உட்பட பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுப் பிரச்சினைகள் யாவற்றுக்கும் பிரித்தானியர் புகுத்திய வெஸ்ட்மினிஸ்ரர் ஆட்சிமுறையே அடிப்படைக் காரணம் என்றே எடுத்துரைத்து வந்தார். அவர் ஒரு போதும் ஐக்கிய தேசியக் கட்சி அரசியலில் ஈடுபாடு கொள்ளவில்லை. அதனால் அவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையில் தோற்றம் பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து செயற்பட்டார். கம்பஹா தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் ஐம்பதுகளின் நடுக்கூறிலே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் செயலபட்டார்.

மக்கள் மத்தியில் குறிப்பாக விவசாயி தொழிலாளர்கள் சிங்கள தாழ்த்தப்பட்டோர் மத்தியில் மிக நெருக்கமாக இருந்து சேவையும் செயலும் ஆற்றி வந்த ஒருவர் எஸ். டி. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து வந்த முற்போக்கு ஜன



நாயக தேசிய சக்திகளின் குரலாக இருந்து வந்தவர். அதனால் இனப்பிரச்சினையின் ஒவ்வொரு கட்டத்திலும் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அதற்காக குரல்கொடுத்தும் வந்தவர். 1957ல் பண்டா- செல்வா ஒப்பந்தம் உருவாக்கப்படவும் அதன் ஊடாக இனப்பிரச்சினை குறைந்த பட்சமாவது தீர்க்கப்படல் வேண்டும் என்பதிலும் முன்னின்று உழைத்தவர்களில் எஸ்.டி.ஒருவராக இரு ந்தார்.

பண்டா- செல்வா ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் அன்றைய தலைவர்களில் ஒருவருமான ஜே.ஆர். ஜெயவர்த்தன எதிர்த்துஇ இது நாட்டைப் பிரிக்கும் ஒப்பந்தம் எனக் கூறி தலதா மாளிகை நோக்கி கண்டிக்கு பாதயாத் திரையைத் தொடக்கினார். இக் கண்டி யாத்திரையானது சிங்கள இனவெறிக்கு தீனி போடுவதாக அமைந்திருந்தது. ஆதலால் மேற்படி கண்டி யாத்திரையை தடுத்து நிறுத்த முடிவு செய்யப்பட்டது, தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்கா தனது கம்பஹா தொகுதியின் இம் புல் கொட என்ற இடத்தில் வேறு பாதைகளால் மீறிச் செல்ல முடியாத (வீதியின் ஒரு பக்கம் மலைச்சாரல் போன்ற உயரமான பகுதி மறுபக்கம் ஆழம் மிக்கதும் வயல் பிரதேசமாகவும் இருந்தது) அமைப்பைக் கொண்ட வீதியின் குறுக்கே எஸ்.டி.படுத்துக் கொண்டார். அவரைத் தொடர்ந்து பலர் வீதியின் குறுக்கே படுத் தனர். இச் சம்பவம் அத் தொகுதி முழுவதும் பரவியதும் மக்கள் குறிப்பாக வயல்களில் தோட்டங்களில் வேலை செய்து கொண்ட விவசாயிகள் வீதியில் அணிதிரண்டனர். அவர்களை மீறி, கண்டி யாத்திரைக்கு வந்தவர்களால் நகர முடிய வில்லை. மக்கள் எதிர்ப்பு அதிகரித்து ஜே.ஆர். தலைமையிலான பாத யாத்திரையினரை நோக்கி வயல் வெளிகளில் இருந்தும் மலைச் சாரல் போன்ற உயரப் பகுதிகளிலிருந்தும் கற்கள் தடிகள் சரமாரியாக வீசப்பட்டன. அவற்றை எதிர்கொள்ள முடியாது இன வாத யாத்திரைக்கு வந்த யூ. என். பியினர் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. அத்தகைய யூ.என்.பியினரே பௌத்த பிக்குகளை உசிப்பி விட்டு பண்டா- செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியக் காரணமாகவும் இருந்தனர். மேற்படி கண்டி யாத்திரையை தடுத்து நிறுத்தி விரட்டியமையின் காரணமாகவே எஸ். டி. “இம்புல் கொட வீரன்” எனவும் புகழப்பட்டார்.

எஸ்.டி.பாராளுமன்ற உறுப்பினராகவும் சுதந்திரக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகவும் இருந்து வந்த நிலையிலும் அமைச்சர் பதவி வகித்தவரல்ல. அதேவேளை மக்கள் சார்பாக எப்பொழுதும் குரல் கொடுத்து வந்ததுடன் போராடியும் சேவை செய்தும் வந்த ஒருவராவார். முற்போக்கு ஜனநாயக நிலைப்பாட்டிலிருந்து இடதுசாரி நிலைப்பாட்டிற்கும் வளர்ச்சி கண்டவர். எஸ்.டி. அறுபதுகளின் நடுக் கூறிலே தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தோற்றம் பெற்றதும் அதன் கொள்கை போராட்டங்களால் எஸ்.டி.கவரப்பட்டார். அத்துடன் சீனாவில் தோழர் மாஓ வின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சோஷலிசத்தின் மீதும் நம்பிக்கையுடையவராக மாறிக் கொண்டார். சீனக்கம்யூனிஸ்ட் கட்சியினதும் சீன மக்களினதும் நண்பராகியும் முன் சென்றார். பல தடவைகள் சீனாவிற்கு பயணம் செய்தது டன் அன்றைய சீன மக்களின் சோஷலிச வெற்றிகளையும் வளர்ச்சிகளையும் இங்கு மக்களுக்கு எடுத்துக் கூறியும் வந்தார்.

தோழர் சண் தலைமையிலான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்த போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்ததுடன் பாராளுமன்றத்தில் அவ்வப்போது புரட்சிகரமான உரைகளையும் நிகழ்த்தும் ஒருவரானார். ஒரு சந்தர்ப்பத்தில் “இந்தப் பாராளுமன்றம் கள்வர்களின் குகை” என இடித்துரைத்தார். அதனால் சபாயநாயகரின் ஆணைப்படி பாராளுமன்றக் காவலர்கள் அவரை அல்லாக்காகத் தூக்கி வந்து பாராளுமன்றத்திற்கு வெளியே விட்ட சம்பவம் இடம் பெற்றது. அத்துடன் இரண்டு வாரங்கள் பாராளுமன்றத்திற்குள் செல்லத் தடையும் விதிக்கப்பட்டது.


மேலும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு உறுப்பினராக இணைந்து அன்றைய கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கத்தின் தலைமைப் பதவிக்கும் தேர் தெடுக்கப்பட்டார். எங்கு அநீதி இடம் பெற்றாலும் அதனை


தொடர்ச்சி 10ம் பக்க....

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறையை அம்பலப்படுத்துவதில் முன்னின்றர் தோழர் சண்


பேராசிரியர் சுத்தரித்த கமலத்


தோழர் செந்தில்


தோழர் தேவராஜா



பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருப்பதாலோ அன்றி அதிகாரத்தை தமது குடும்பத்திற்குள் இறுக்கி வைத்திருப்பதாலோ யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினைக்கோ ஏனைய பொருளாதார நெருக்கடிக்கோ தீர்வு கண்டு கொள்ள முடியாது. இன்றைய நிலையை விட 1977ல் ஜே. ஆர். பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்தவர். அத்தகைய மிகைப் பெரும்பான்மையினாலோ அல்லது அவர் அறிமுகப்படுத்தி அதிகாரத்தைத் தனது கைகளில் குவித்து வைத்திருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினாலோ நாட்டின் எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட யுத்தமும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலும் ஒன்றை ஒன்று பாதுகாத் தபடி சமாந்தரப் பாதையில் பயணித்து வந்திருக்கிறது. ஜே.ஆரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஒவ்வொருவரும் இந்தப் பாதையை விட்டு விலகிச் செல்லவில்லை. அதனால் இந்த நாடு இரத்தம் பாய்ந் தோடும் நாடா கப்பட்டு வடக்கு கிழக்கு மக்கள் உட்பட அனைத்து மக்களும் விபரி க்க முடியாத துன்ப துயரங்களுக்குள் மூழ்க வைக்கப்பட்டனர். இந் நிலை தற்செயலானதோ அன்றி சில மனிதர்களது தனிப்பட்ட விருப்பு வெறுப்பு சார்ந்ததோ அல்ல. இந் நாட்டின் நிலவு டைமை வழிவந்த முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறையின் கீழ் சுரண்டலும் ஏற்றத் தாழ்வும் மிக்க சமூக அமைப்பு பாதுகாக்கப்பட்டு வருவதன் விளைவுகளேயாகும். இத்தகைய விளைவுகளுக்கு எதிராக மட்டுமன்றி அவற்றுக்குரிய காரணங்களுக்காகவும் பரந்துபட்ட போராட்டங்கள் மக்களை அணிதிரட்டி முன்னெடுக்கப் படல் வேண்டும்.


இவ்வாறு தோழர் நா. சண்முகதாசனின் 14வது நினைவு தின நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய புதிய- ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல் கூறினார். பேராசிரியர் சி. சிவசேகரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நினைவு நிகழ்வில் பேராசிரியர் சுத்ரித கம்லத் "தமிழ் சிங்கள உறவுகள் அன்றிலிருந்து இன்று வரை" என்னும் தலைப்பில் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்தினார். வரவேற்புரையை புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் சோ. தேவராஜா வழங்கினார்.

கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் 25- 02- 2007ல் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தோழர் செந்தில் தொடர்ந்தும் தனது சிறப்புரையில், இன்று வடக்கு கிழக்கு மக்கள் உட்பட அனைத்து மக்களும் இரண்டு தோழ்களிலும் தாங்கிக் கொள்ள முடியாது யுத்தம் பொருளாதார நெருக்கடிகள் என்ற இரண்டு பாரிய சுமைகளைத் தாங்கி நிற்கின்றனர். இவற்றால் நாளாந்தம் மக்கள் தமது அன்றாட வாழ்வில் இரத்தம் கண்ணீர் உயிரிழப்பு இடப்பெயர்வு ஒரு புறமாகவும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் அத்தியாவசியப் பொருட்களை ஆனை விலை குதிரை விலை கொடுத்து வாங்க முடியாத நிலையிலும் தத்தழித்து வருகின்றனர். இவைதான் மகிந்த சிந்தனை ஒன்றேகால் வருட ஆட்சியில் மக்களுக்கு வழங்கிய சாதனைப் பரிசுகளாகும்.

இன்று யுத்தத்தின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற அசட்டுத்தன நம்பிக்கையில் ஜனா திபதியும் அவரைச் சூழவுள்ளவர்களும் செயல்படுகிறார்கள். இது "எல்லோரும் ஏறிய குதிரையில் சக்கடத்தாரும் ஏறிச்சறுக்கி விழுந்தாரம்" என்ற கதை போன்றது தான். இனப்பிரச்சினை அடிப்படையில் வர்க்கப் பிரச்சினையேயாகும். ஆளும் வர்க்கம் ஆளப்படும் வர்க்கம். ஒடுக்கும் வர்க்கம் ஒடுக்கப்படும் வர்க்கம். இவற்றின் உண்மைகளை மறைத்து சொத்து சுக முடைய உயர் மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்தினர் மக்களை திசை திருப்பவே பெரும் தேசிய அகங்காரத்தை முன்னு றுத்திக் கொண்டனர். தாமே சிங்கள மக்களின் இன மத மொழி பண்பாட்டுப் பாதுகாவலர்கள் எனச் சிங்கள மக்களை ஏமாற்றி நம்பவைத்தனர். தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களை ஒடுக்குவதன் மூலம் சிங்கள மக்களை ஏமாற்றி பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தில் இருந்து வருகின்றனர்.

இப் பாராளுமன்ற ஆட்சி முறை முதலாளித்துவத்தின் அரணே அன்றி மக்களுக்குரிய ஒன்றல்ல. இப்பாராளுமன்ற ஆட்சி முறையின் முதலாளித்துவ அடிப்படைகளை வர்க்கப் போராட்ட நிலை நின்று மாக்சிச லெனினிசத்தின் மூலமாக அம்பலப்படுத்திய ஒருவராகவே தோழர் நா. சண்முகதாசன் இலங்கையின் இடதுசாரி அரசியல் பரப்பில் தன்னை அடையாளப்படுத்தி நின்றார். தோழர் சண் தனது வாழ் நாளின் ஐம்பத்து நான்கு ஆண்டு காலத்தை முற்று முழுதாக பொதுவுடை இயக்கத்திற்கும் தொழிளாளி வர்க்கத்திற்கும் அர்ப்பணித்த ஒரு புரட்சிவாதியாக வாழ்ந்து மறைந்தவர். அவர் தனது பல்கலைக்கழ கக் கல்வியை முடித்த பின் வேறு உயர் தொழில் பதவி நாடிச் செல்லாது பொதுவுடைமைக் கட்சியின் முழு நேர அரசியல் ஊழியாராகி தொழிலாளி வர்க்கத்தின் உறுதிமிக்க அரசியல்

தொடர்ச்சி 11ம் பக்கம்


25-02-2007 அன்று கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம் பெற்ற தோழர் நா.சண்முகதாசனின் 14வது நினைவுதினக் கூட்டத்தில் கலந்து கொண்டவாகளில் ஒரு பகுதியினர்.

## 5வருட போர் நிறுத்தம்

9ம் பக்க தொடர்ச்சி

ஆட்கடத்தல், கப்பம், தனிமனிதப் படுகொலைகள் போன்றன அரசியற் பிரமுகர்களையும் அரசியற் சார்பற்ற தனிமனிதர்களையும் பாதிக்கத்தொடங்கிய அதேவேளை அரச படைகளையும் விடுதலைப் புலிகளையும் இலக்கு வைத்த தாக்குதல்களும் கெப்பித்திகொல்லாவ பஸ் குண்டுவெடிப்புப் போன்ற கோரமான நிகழ்வுகளும் நடைபெற்றன. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தத்தம் இருப்புக்கும் ஒருவரை ஒருவர் பலவீனப்படுத்துவதற்குமான தந்திரோபாயங்களை முன்னெடுக் கவே முன்னின்றனர். இதனால் ஆங்காங்கே மோதல்கள் மக்களைக் கவனத்தில் கொள்ளாது நிகழ்வது அதிகரித்தது. இவற்றைக் காரணங்காட்டி ஆயுதப் படைகள் குறிப்பாகக் கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளை விரட்டுகிற நோக்கில் மேற்கொண்ட தாக்குதல்களின் விளைவாகக் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ஏற்பட்ட உயிரிழப்பும் இடப்பெயர்வுகளும் சராசரியான போர்க்கால இழப்புகளைக் கூட மீறியுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவும் சகோதரர்களும் அரசாங்கத்தில் தமது அதிகாரத்தை மேலும் இறுக்கியுள்ள கடந்த ஒரு வருடத்தில் போர் நிறுத்தம் என்பது ஒரு கேலிப்பொருளாகி நடைமுறையில் போருக்கு இன்னொரு போராக மட்டுமே உள்ளது. எனினும் அமைதியை விரும்புவோர் போர்நிறுத்தம் என்பது நடைமுறையில் இல்லை என்பதை மனதில் வைத்துக் கொண்டு போர்நிறுத்த உடன்படிக்கை சரிவரப் பேணப்பட வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும். அதன் மூலமே அமைதிக்கான வாய்ப்பை மீட்டெடுக்க இயலும். போர் நிறுத்த உடன் படிக்கையைக் கிழித்தெறிய வேண் டுவோர் அந்த வாய்ப்பை முற்றாகவே இல்லாதொழித்து நாட்டைப் போரில் அமிழ்த்தி அழிக்க வேண்டி நிற்கின்றனர். எனவே போர் நிறுத்தம் என்பது எவ்வளவு பசப்பானதாக இருந்த போதும் அதை மீட் டெடுத்து சரியான முறையழல் அதனை முன்னெடுப்பது மூலமே நாட் டை போரினின்று காத்து நிலையான அமைதியையும் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வையும் நோக்கி நகர்த்த இயலும் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

கடந்த பெப்பவரி 22ம் திகதியுடன் புரிந்துணர்வ யுத்த நிறுத்த ஒப்பந்தத் திற்கு 5 வருடங்கள் ஆகிக்கொண் டன. ஆனால் வடக்கு கிழக்கு மக் கள் எதிர்பார்த்த எதுவுமே இடம் பெறவில்லை. மேன் மேலும் இரத்தமும் கண்ணீரும் பெருகியதையே காண முடிந்தது. கொலைகள் ஆட் கடத்தல்கள் காணாமல் போதல் தடுத்து வைத்தல் போன்றன தலைவிரித்தாடி வரும் சூழல்களே வளர்ந்தன. "புரிந்துணர்வும்" "போர் நிறுத்தமும்" அர்த்தமற் றதாகிக் கொண்டதையே இன்று காண முடிகின்றது.

அவதானி

## 90வயதில் தோழர் எஸ்.டி

9ம் பக்க தொடர்ச்சி.....

மக்கள் சார்பாக நின்று இடித்துரைத்து கேள்வி எழுப்பி பாராளுமன்ற ஜனநாயகத்தை அம் பலப்படுத்தும் ஒருவராக எஸ். டி. இருந்து வந்தார். வடபகு தியில் 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் வழியிலான போராட்டங்களும் இடம் பெற்ற வேளைகளில் தோழர் எஸ்.டி. வடக்கிற்கு அடிக்கடி பயணம் செய்து பாதிக்கபபட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுதாபத்தையும் ஆதரவையும் வழங்கி நின்றதுடன் போராடிய அம் மக்களுக்கு உற்சாகம் ஒத்துழைப்பை வழங்கி வந்தவர். பாராளுமன்றத்தில் அன்றைய சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின் உண்மை நிலையை தமிழ்த் தலைவர்கள் மறைத்தும் திரித்தும் கூறமுற்பட்ட வேளைகளில் எஸ்.டி. உண்மை நிலைகளை எடுத்துக் கூறி சாதிய ஆதிக்கவாதிகளை பாராளுமன்றத்தின் ஊடாக அம்பலப்படுத்தி நின்றார். தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் அறுபதுகளில் வகித்த புரட்சிகரமான பாத்திரமும் பங்களிப்பும் என்றும் நினைவு கூரத்தக்க ஒன்றாகும். அதனால் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் கடும் எதிர்ப்பைப் பெற்று அறுபதுகளின் பிற் கூறில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். 1970ல் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டு தனது முன்னைய கம்பஹாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை மீண்டும் பெற முடியாமல் போனார். எப்பொழுதும் மக்கள் சார்பாகவும் மக்களுக்கு பயன் தரக்கூடிய போராட்டங்களின் பக்கமும் எஸ்.டி நின்று வந்தமை அவருக்குரிய சிறப்பாகும். சிங்கள மக்கள் போன்று தமிழ் மக்களும் வரலாற்று ரீதியில் இலங்கையின் சொந்தக்காரர்கள் என்பதை எஸ். டி எப்பொழுதும் வலியுறுத்தி வந்ததுடன் இனப் பிரச்சினை நியாயமான அரசியல் தீர்வின் ஊடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதை முன்வைத்தும் வந்த ஒருவராவார்.

1971 ஜே. வி. பி. ஏப்ரல் கிளர்ச்சியில் ஈடுபட்ட வேளை தோழர் சண்முகதாசன் மற்றும் புரட்சிகர கம்யூனிஸ்ட் தலைவர்கள் சிலரையும் ஏனைய இடதுசாரிகளையும் அன்றைய ஐக்கிய முன்னணி அரசு சிறையில் அடைத்தது. அவரது உறவினரான சிறிமாவோ அம்மையார் பிரதமராக இருந்தபோதே தோழர் எஸ். டியும் சிறையில் அடைக்கப்பட்டார். இரண்டரை வருடங்கள் வரை சிறையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இலங்கை அரசியலில் முக்கியமான கால கட்டங்களில் தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தன்னாலான பங்களிப்பை பட்டம் பதவி பணம் பவிசு போன்றவற்றுக்கு அப்பால் வழங்கி வந்த ஒரு முற்போக்கு ஜனநாயக வாதியாவார். அத்தகைய ஒருவரை அவரது 90வது வயதில் அவரது சாதனைகளைக் கணித்துக் கொள்வதும் அவருக்குரிய மக்கள் சார்பான கௌரவத்தை வழங்குவதும் நமது கடமையாகிறது.

எஸ்கேஎஸ்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மெக்கா உடன்படிக்கையும் பலஸ்தீன கூட்டு அரசாங்கமும்

எல்லாப் பிரச்சனையும் கடந்த வருடம் மார்ச் மாதம் இடம் பெற்ற பலஸ்தீன பாரளுமன்றத் தேர்தலுடன் தொடங்கியது. அதுவரை காலமும் தனிக்காட்டு இராசாவாகவும் யசீர் அரபாத்தின் சொத்து என்ற பெயரையும் வைத்தக் கொண்டு இஸ்ரேலுக்குப் பிரச்சனையில்லாமல் பராளுமன்றத்தை ஆண்டு வந்த ஃபத்தா '(Fatah) அமைப்பு 2006 தேர்தலில் தோல்வியைத் தழுவ அதுவரை காலமும் மக்கள் மயப்பட்ட ஒரு போராளி இயக்கமாக மட்டும் இயங்கி வந்த ஹமாஸ் (Hamas) அமைப்பு 2006 தேர்தலில் அமோக வெற்றி பெற்று பாராளுமன்றத்தை கைப்பற்றிக் கொண்டது. (இது பற்றிய ஒரு விரிவான கட்டுரை புதிய பூமியில் முன்பு வெளியாகியிருந்தது)

**சம்பந்தப்பட்ட இரு தரப்புகளின் பின்னணி**

பத்தா அமைப்பு யாசிர் அரஃபாத்தினால் உருவாக்கப்பட்டது. பலஸ்தீன மக்களின் பெருமைக்குரிய இயக்கமாக 80களிலும் 90 களிலும் கருதப்பட்ட இவ்வமைப்பு இப்போது மக்களின் ஆதரவை இழந்திருக்கிறது. ஒஸ்லோ உடன்படிக்கையை கைச்சாத்திட்டு இஸ்ரேலை அங்கீகரித்த பெருமையும் இதற்கு உண்டு. தொடக்க காலத்தில் போராட்ட இயக்கமாக இருந்த இவ்வமைப்பு இப்போது சமாதான சகவாழ்வு என்று இஸ்ரேலுடன் உடன்பட்டு செல்லும் ஒன்றாக மாறிவிட்டது. அதன் மூலம் மேற்குலகின் நம்பிக்கைக்குரிய நண்பனாக பலஸ்தீன மக்களின் நம்பிக்கைத் துரோகத்திற்குரிய எதிரியாக இன்று ஃபத்தா உருவெடுத்திருக்கிறது.

மறுபக்கத்தில் ஒரு சமூக நல அமைப்பாக தன்னைக் கட்டமைத்துக் கொண்ட ஹமாஸ் மக்களின் நன்மதிப்பைப் பெற்று இன்று பலஸ்தீன மக்களுக்காக போராடும் முதன்மையான போராட்ட அமைப்பாக உருவெடுத்திருக்கிறது. இன்று வரை இஸ்ரேலின் இருப்பை அங்கீகரிக்க மறுப்பது இதன் முக்கியமான கொள்கைகளில் ஒன்று. இதன் விளைவால் மேற்குலகின் 'பயங்கரவாத அமைப்புக்கள்' பட்டியலில் ஹமாஸ் இடம்பிடித்திருக்கிறது.

**உள்நாட்டுக் குழப்பத்தின் பின்னணி**

2006 தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்த ஹமாஸ் தொடர்ந்தும் இஸ்ரேலை அங்கீகரிக்க மறுத்து வந்தது. இதனால் அமெரிக்காவும் மேற்குலகும் பலஸ்தீனத்திற்கான உதவிகளை நிறுத்தின. பாராளுமன்றத்தைக் கலைத்து புதிதாக தேர்தலை நடத்துமாறு பாலஸ்தீன ஜனாதிபதியான மக்மூட் அப்பாஸை (இவர் ஃபத்தா அமைப்பைச் சேர்ந்தவர்) அமெரிக்கா வற்புறுத்தியது. அதற்கான முயற்சிகளில் அப்பாஸ் இறங்க ஹமாஸ் ஃபத்தாஹ் இயக்கங்களுக்கிடையில் உள்நாட்டு மோதல் உருவானது. ஃபத்தா அமைப்புக்கு அமெரிக்கா 80 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை வழங்கியது என்ற செய்தியும் வெளியானது. அமெரிக்காவும் இஸ்ரேலும் ஹமாஸை ஆட்சியிலிருந்து அகற்றி தங்களுக்கு விரும்பிய பொம்மை அரசை பலஸ்தீனத்தில் நிறுவ பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டன.

**மெக்கா உடன்படிக்கை**

ஹமாஸை ஆட்சியிலிருந்து அகற்றும் முயற்சிகள் தோல்வியடைய இராஜதந்திர வழிமுறைகளில் ஹமாஸை அகற்ற அமெ



ஏகலைவா

ரிக்கா முடிவெடுத்தது. தனது வெளியுறவுச் செயலாளர் கொண்டலீசா றைசை சவுதி அரேபியாவுக்கு அனுப்பி இரு அமைப்புக்களுக்கும் இடையில் ஒரு உடன்படிக்கையை கைச்சாத்திட வைத்து அதன் மூலம் தனக்கு வேண்டியதை சாதித்துக் கொள்ள நினைத்தது. அமெரிக்காவின் கைப்பொம்மையான சவுதி அரேபிய மன்னர் அமெரிக்கா சொன்ன சொல்லைத் தட்டாமல் அவர்கள் நினைத்தபடியே இரு அமைப்புகளையும் மெக்காவுக்கு அழைத்து உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட வைத்தார். அமெரிக்கா மெக்காவை தேர்ந்தெடுத்ததன் காரணம் அது இஸ்லாமியர்களின் புனித நகரம் என்பதால் ஹமாஸ் பிரச்சனை பண்ணாது என்று எதிர்பார்த்தது தான். மெக்கா உடன்படிக்கையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் எதிர்பார்த்தது இஸ்ரேலின் இருப்பை ஹமாஸ் அங்கீகரிக்க வேண்டும் என்பதே. ஆனால் அது தொடர்பில் எவ்வித முடிவுகளும் எட்டப்படாமலேயே கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பது என்ற உடன்பாட்டுடன் மெக்கா பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வந்தன. உண்மையில் இது ஒரு பயனற்ற பேச்சுவார்த்தை. ஏனெனில் பேச்சுவார் த்தைகளைத் தொடர்ந்து பலஸ்தீனத்துக்கு உறுதியளிக்கப் பட்டிருந்த நிதியுதவி வழங்கப்படவில்லை. கூட்டரசாங்கத்தில் முக்கிய பதவிகளான நிதி, வெளிவிவகாரம், உள்த்துறை அமைச்சுக்கள் ஹமாஸின் கைகளிலிருந்து பறிக்கப்பட்டு விட்டன. ஒரு அரசாங்கத்திற்குத் தேவையான மிக முக்கியமான இம் மூன்று அமைச்சுக்களும் இல்லாமல் ஹமாசால் தான் நினைத்த எதையும் செய்ய முடியாது. இது உண்மையில் எதுவித பலன்களையும் பலஸ்தீனர்களுக்கு அளிக்கப்போவதில்லை. எங்களது அரசாங்கங்கள் போல, எங்களது பாரளு மன்றங்கள் போல பாலஸ்தீனமும் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் முடிவும் இல்லாமல் தொடரும் என்பதுதான் உண்மை.

**எமக்கான படிப்பினைகள்**

இவ்வளவு சம்பவங்களிலிருந்தும் நாம் சில படிப்பினைகளை நிச்சயமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

- எந்தொரு போராட்ட அமைப்பும் தனது போராட்டத்தை விட்டுவிட்டு அரசியல் நீரோட்டத்தில் இணைகின்ற போது இவ்வாறான நிகழ்வுகள் சர்வ சாதாரணமாக நிகழக்கூடியவை. அவ்வேளை மக்கள் சார்பு அரசியல் நிலைப்படு அவசியம்
- பாராளுமன்ற அரசியல் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடிவைத் பெற்றுத் தராது.
- மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்கள் தொடர்ச்சியாக மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே வெற்றிபெறுவது சாத்தியம்.

**இறுதியாக...**

இந்த மெக்கா உடன்படிக்கையும் கூட்டரசாங்கமும் பாலஸ்தீன மக்களுக்கு விடிவைப் பெற்றுத்தரும் என்பது இருட்டு வீட்டுக்குள் கறுப்புப் பூனையைத் தேடுவது போன்றதே.





தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 18வது நினைவுதினக் கூட்டத்தில் பு.ஜ.க தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்பையா நினைவுரை ஆற்றுவதையும் தோழர் சோ.தேவராஜா தலைமை வகிப்பதையும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

## முதலாளித்துவ ஆட்சி

10ம் பக்க தொடர்ச்சி

தலைவராகிக் கொண்டவர். அவர் இலங்கையின் தொழிலாளி வர்க்கத்தை தொழிற்சங்க ரீதியில் அணிதிரட்டியதுடன் எச்சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்கா சோதரம் போகாத நிலையில் தொழிலாளர் போராட்டங்களுக்கு தலைமை தாங்கி நின்றவர். பாராளுமன்றப் பாதையிலான முதலாளித்துவ அரசியல் மார்க்கத்தை அம்பலப்படுத்தி மக்களின் புரட்சிகரப் போராட்டத்திற்கான மார்க்கத்தை எடுத்துக் காட்டி நின்றவர் தோழர் சண். அவரது தலைமைத்துவ காலத்திலேயே தெற்கிலும் மலையகத்திலும் தொழிலாளர்கள் புரட்சிகரமான தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுத்தனர். வடக்கில் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் கிளர்ந் தெழுந்து போராடினர்.

அறுபதுகளின் நடுக்கூறிலிருந்து தோழர் சண் தலைமை தாங்கிய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையின் இடது சாரி இயக்கப்பரப்பில் தடம்பதிக்கத்தக்க போராட்டங்களையும் வெகுஜன இயக்கங்களையும் முன்னெடுத்தமை வரலாற்றுப் பதிவுகளாகும். இவ்வாறானசாதக அம்சங்களை தோழர் சண் கொண்டிருந்த போதிலும் சில பாதகமான அம்சங்கள் தவறுகளாக அவரால் இழைக்கப்பட்டமையையும் விமர்சன சுய விமர்சன ரீதியில் பார்க்கப்பட வேண்டிய வைகளும் ஆகும். எவ்வாறாயினும் தோழர் சண் மாக்சிச லெனினிச மாஒசேதுங் சிந்த னை அடிப்படையில் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் பற்றி முன் வைத்த கொள்கைகளும் கருத்துக் களும் இன்றும் செல்லுபடியற்றுப் போய்விடவில்லை. அந்தப் பாராளுமன்ற அரசியல் இன்று நாறி நாற்ற மெடுத்து நிற்பதுடன் நாட்டையும் மக்களையும் அடக்கி ஒடுக்கும் நிலையைத் தெளிவாக்கியும் நிற்கி ன்றது.

முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது பொதுவுடைமை வாதி களிடமும் புரட்சி வாதிகளிடமும் இரத்தத்தில் ஊறிய ஒன்றாகும். அவர்களை அளவிடுவதற்கு அது வே ஒரு சிறந்த அளவு கோலுமாகும். ஆனால் இன்று அதே ஏகாதிபத்திய சக்திகளின் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு முன்னால் தங்களை பொதுவுடைமை வாதிகள் என்று கூறுவோர். சிலர் அடிபணிந்து அதற்கு சேவகம் செய்பவர்களாக உள்ளனர். நமது நாட்டை இனவாத யுத்தத்திற்குள் தள்ளி வர்க்க ரீதியில் ஒன்றுபட வேண்டிய மக்களைப் பிரித்து குறுகிய தேசிய வாதத்தின் ஊடாக தமிழன் சிங்கள வன் முஸ்லீம் மலையகத்தவன் என ஒருவரோடு ஒருவரை மோதவைத்து இரத்தம் பாய்ந்தோட வைத்ததில் ஏகாதிப த்தியம் இன்று வெற்றி பெற்றிருக்கிறது. இதற்கு ஆளும் வர்க்க பேரினவாத சக்திகள் ஏகாதிபத்தியத்தின் கருவிகளாகவும் செயற்பட்டு வந்துள்ளனர். இதனையே இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் காண முடிந்தது. இன்றைய யுத்தம் இந்த வளர்ச்சியின் உச்சக் கட்டமேயாகும்.

இவ் உண்மை நிலையினை இந் நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களும் உணர்ந்து அவற்றுக்கு எதிராகச் செயல்பட முன்வராத வரை ஆளும் வர்க்க பேரினவாத சக்திகளுக்கும் அவர்களோடு கூட் டுச் சேர்ந்திருக்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்குமே வாய்ப்பும் வசதியும் அதிகரித்துச் செல்லவே செய்யும். என்று தோழர் செந்தில் தனது உரையில் கூறினார்.

## அந்நியத் தலையீட்டை

18ம் பக்க தொடர்ச்சி

மேலாதிக்கத்தை நிலை நிறுத்துகிற நோக்கத்திற்காக அல்லாமல் இந்த நாட்டின் மக்களின் நலன் சார்ந்தல்ல. மார்ச் மாதம் மட்டும் நடந்துள்ள இலட்சக்கணக்கான இடப்பெயர்வுகள் இந்தியாவிடமிருந்தோ வேறெந்த நாட்டினிடமிருந்தோ எத்தகைய எதிர்வினையைத் தூண்டியுள்ளன என்று பார்ப்போமாயின் நாம் வீண் எதிர்பார்ப்புக்கட்கு ஆளாகமாட்டோம்.

ஆனால் எப்படியும் இந்தியாவை வரவழைப்பது என்பதில் நமது தமிழ்ப்பாராளுமன்றத் தலைவர்கள் விடாப்பிடியாக உள்ளனர். சீனாவையும் பாக்கிஸ்தானையுங் காட்டி இந்தியாவை வெருட்டி இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக இந்தியா குறுக்கிட வேண்டும் என்று தமிழ் நாட்டிற் போய் உளறிவைத்துள்ளனர். சில தமிழ் பா. உ. க்கள். இலங்கைக்கு அன்றும் இன்றும் ஆயுதம் வழங்குவதிலும் இராணுவப் பயிற்சி வழங்குவதிலும் அமெரிக்காவும் இஸ்ரேலும் முன்னணி யிலிருந்து வந்துள்ளன. அதை விட இன்றும் இந்தியா ஆயுத உபகரணங்களையும் போர்க் கப்பல்களையும் வழங்கி வந்துள் ளது. எனவே சீனாவும் பாக்கிஸ்தானும் உதவுகின்றன என்று சொல்லுவதை இந்தியா நம்பினால் என்ன செய்ய முற் படும் என்பது எங்கள் ஞான சூனியங்களுக்கு விளங்குமா? இந்தியா இலங்கையைத் தனது ஆதிக்கத்துக்கு உட்படுத்த வேண்டுகிறது, அதற்கு அது தமிழ் மக்களைப் பயன்படுத்தக் கூடிய காலம் எப்போதோ மலையேறி விட்டது. ஆனாலும் எல்லாரும் அதே பல்லவியைப் மீண்டும் பாடுவதோடு தமிழ்ப் பத்திரிகைகளும் அதற்கு ஒத்தூதுகின்றன.

இப்போது கொஞ்சக் காலமாக ஐ. நா. பாதுகாப்புச்சபையின் மூலம் ஐ.நா. படைகளை வரவழைக்கின்ற கதை பேசப்படுகிறது. ஐ.நா. என்பது அமெரிக்கா என்பதும் இன்று ஒன்றே தான் என்பதை நாம் அறியாதவர்களல்ல. அமெரிக்காவின் குறுக்கீட்டிற்கான ஒரு கரமாகவே ஐ. நா படைகள் கடந்த பதினைந்தாண்டுகளாக இருந்து வந்துள்ளன. இது தெரிந்த நமக்கு ஐ.நா. படைகள் இங்கு வந்து என்ன செய்ய வேண்டும் என்றோ என்ன செய்யப் போகின்றன என்றோ சொற்ப தெளிவு கூட இருக்கிறதா?

ஐ.நா. படைகள் அண்மைக்காலங்களில் குறுக்கிட்ட எந்த வொரு நாட்டிலாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைத்திருக்கிறதா என்பதை நாங்கள் கவனமாக ஆராய வேண்டும்.

ஐ. நா. இந்தியா, அமெரிக்கா என்று தவமிருக்கிறபோது நாம் செய்வதெல்லாம் நமக்கு அருகில் உள்ள சரியான விடையைத் தவிர்த்து வெகு தொலைவிலுள்ள தவறான விடைகளைத் தேடுவது மட்டுமே.

தேசிய இனங்கட்குச் சம நியாயத்திற்குமான சக்திகள் இந்த நாட்டில் உள்ளன. அவற்றை அணிதிரட்டுவது பற்றி நாம் இதுவரை சிந்திக்கவில்லை. நாட்டை எதிர் நோக்கும் சர்வாதிகாரச் சூழலில் அந்நியருக்கு ஆராத்தி எடுப்பதை விட்டு இனியாவது நம்மத்தியில் உள்ள தீர்வுக்கான வாய்ப்புக்களை விருத்தி செய்ய உரிய தரப்புக்கள் முன்வருமா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# யுத்த எதிர்ப்பும் ஜனாதிபதி முறை ஒழிப்பும்





## சந்திரிகா சொன்னார் மகிந்தவும் கூறுகிறார்

மனித உரிமைகள் மீறப்படுவதும் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதும் நிறைவேற்று அதிகாரங்கள் ஆளும் வர்க்கத்திடம் அதுவும் ஆளும் வர்க்கத்தின் தனிநபரிடம் குவிந்திருப்பதும் தொடர்புபட்ட விடயங்களே. அதாவது நிறைவேற்று அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுவதன் விளைவாக சாதாரண மக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. சாதாரண மக்களின் உரிமைகள் மீறப்படாமல் நிறைவேற்று அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட முடியாது.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகம் செய்ததுடன் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரங்களை வழங்கியது. அந்த அரசியல் அமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது முதல் இன்று வரை அவசரகாலச்சட்டமே (ஒரு சில மாத காலங்களைத் தவிர) நடைமுறையில் இருக்கிறது, அதனால் அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டதாக இருக்கிறது,

1978 இல் ஜே. ஆர். ஜயவர்த்தன திறந்த பொருளாதாரத்தை அறிமுகம் செய்ததன் விளைவாக தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது. 1980 யூலை வேலை நிறுத்தம் உட்பட பல போராட்டங்கள் இடம்பெற்றன. 1980 யூலை வேலைநிறுத்தம் மிக மோசமான வழிகளில் முறியடிக்கப்பட்டது. 1981ம் 1983ம் ஆண்டுகளில் இனவன்முறைகள் கட்டவிழ்த்துச் விடப்பட்டன. மேலும் தமிழ் மக்கள் மீதான இராணுவ அடக்குமுறைகள் யுத்தமாக திட்டமிட்டவகையில் வளர்க்கப்பட்டது. அவசரகாலச்சட்ட ஒழுங்குவிதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அடக்குமுறைச்சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. பாதுகாப்பு படையினருக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு திறந்த பொருளாதாரத்திற்காக நிறவேற்று அதிகாரம் மக்களுக்கு விரோதமாகப் பயன்படுத்தப்பட்டு சாதாரண மக்களின் வாழ்வு சீர்குலைக்கப்பட்டன. பேரினவாதம் மேலும் ஆளும் வர்க்கத்திற்குரிய நிறுவன மயமாக்கப்பட்டு இலங்கை மக்களிடையே இனவாதம் இனப்பிளவு திட்டமிட்டு மேலும் வளர்க்கப்பட்டது, இதனை உள்ளார்ந்த மன மகிழ்வுடன் இந்தியாவும் மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் நன்கு பயன்படுத்திக் கொண்டன. யுத்தம் நிரந்தரமாக்கப்பட்டது. அதற்கு நிறைவேற்று அதிகாரங்கள் உறுதுணையாகின. அதேபோன்று நிறைவேற்று அதிகாரங்களின் பிரயோகத்தை நியாயப்படுத்த யுத்தம் தேவைப்படுகிறது. பயங்கரவாத எதிர்ப்பு அவசியப்படுகிறது,

ஜே. ஆருக்குப் பின்னர் பிரேமதாஸ டி.பி. விஜயதுங்க சந்திரிகா தற்போது மஹிந்த ராஜபக்ச என வேறு வேறு தனிநபர்கள் ஜனாதிபதியாகி நிறைவேற்று அதிகாரங்களுக்குரித்தாகினாலும் அவர்கள் எல்லோருக்கும் நிறைவேற்று அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்ள உரிய கருவிகளாக "யுத்த சூழ்நிலை அல்லது பயங்கரவாத எதிர்ப்பு" தேவைப்பட்டது.

அதுவே இப்போதும் தொடர்கிறது, திறந்த பொருளாதார உலகமயமாதலின் கீழான சந்தைப் பொருளாதாரத்தை தொடர்ந்து முன்னெடுக்க அசாதாரண அதிகாரங்களைக் கொண்ட ஒரு அடக்கு முறை தேவை. எனவே நிறைவேற்று அதிகாரங்களை கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஆளும் வர்க்கத்திற்கு அவசியம் தேவைப் படுகிறது,

ஜனநாயக சூழ்நிலையிலேயே தேர்தல் நடைபெற வேண்டுமென்று கூறப்பட்டாலும் ஜனநாயக சூழ்நிலையில் எந்தவொரு தேர்தலும் நடைபெறுவதில்லை. இலங்கையின் நிறைவேற்று அதிகாரங்களை கொண்ட ஜனாதிபதி பதவிக்கான தேர்தல்கள் அனைத்தும் யுத்த சூழ்நிலையிலேயே நடைபெற்றுள்ளன. அச் சூழ்நிலையே சிலருக்கு தோல்வியையும் கொடுத்துள்ளது. மஹிந்த ராஜபக்சவின் வெற்றிக்கு யுத்த சூழ்நிலையில் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பகிஷ்கரிப்பே காரணமாகியது. இது குறித்து தற்போது கடும் வாதவிவாதங்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்படுவதை நாமறிவோம். அதன் மூலம் பாராளுமன்ற ஜனநாயகத்தின் திரைக்கு பின்னால் எவை எவை எல்லாம் இடம் பெற இயலும் என்பதைக் காணமுடியும்.

எனவே யுத்த எதிர்ப்பு என்பது நியாயமான அரசியல் தீர்வு, நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிப்பு, ஜனாதிபதிமுறையை பாதுகாக்கும் ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிர்ப்பு போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளதாகவே இருத்தல் வேண்டும். தற்போதைய மனித உரிமை மீறல்களுக்கும் ஆட்கடத்தல்களுக்கும் ஜனநாயக மறுப்புகளுக்கும் அடிப்படையாக இருப்பது யுத்தமும் ஜனாதிபதி ஆட்சிமுறையும் தான். இவற்றில் ஒன்றை விட்டு இன்னொன்றை இல்லாமல் செய்ய முடியாது. இதனை நாடு மக்கள் தேசிய இனங்கள் என்பனவற்றின் மீதான அக்கறை உள்ள அனைத்து சக்திகளும் கவனத்தில் கொள்வது இன்றைய அவசியத் தேவையாகும்.

# குடாநாட்டில் கருத்து சுதந்திரத்திற்கு தட்டுப்பாடும் கட்டுப்பாடும்

குடாநாடு கடந்த வருடம் நடுக்கூறுக்குப் பின் திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டது. அங்கு சகலவற்றுக்குமே தட்டுப்பாடும் கட்டுப்பாடும் கொண்டு வரப்பட்டது.

நடமாடும் சுதந்திரம் உயிர்வாழும் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் கூட்டம் கூடும் சுதந்திரம் ஒன்று கூடி அமைப்பு அமைக்கும் சுதந்திரம் உட்பட பல "சுதந்திரங்கள்" பற்றி இந்நாட்டின் அரசியல் யாப்பு விபரிக்கின்றது, அதன் அடிப்படையில சட்டங்களும் சட்ட வியாக்கியானங்களும் இருந்து வருகின்றன.

ஆனால் அவையாவும் இன்று வடக்கு கிழக்கில் செல்லுபடியற்ற நிலையில் சீரழிந்தவையாகவே காணப்படுகின்றன. குறிப்பாக குடாநாட்டில் கருத்து வெளியிடும் சுதந்திரம் மறுக்கப்பட்டு வருவதையே காண முடிகின்றது. இது முன்பிருந்தே படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்த ஒன்றாகும் அரச தரப்பில் இருந்து மட்டுமன்றி போராடுவோர் தரப்புகளில் இருந்து இந்த கருத்துச் சுதந்திர மறுப்பு இருந்து வந்தமை மறைப்பதற்குரிய ஒன்றல்ல. இன்று அங்கு கருத்து வெளியிடுவோர் ஒன்றில் அடக்கி சுருக்கி அர்த்தம் தெளிவில்லாதவாறு வாசிக்க வேண்டும். அல்லது நெழிவு சுழிவுகளுக்குள் புகுந்து ஏதாவது ஒரு மெலிதான கருத்தை வெளியிட வேண்டும். அது கூட ஆபத்தாகலாம். அதற்கு மேலாக ஏதாவது கருத்துக் கூறினால் "தலை தப்புவது தம்பிரான் புண்ணியம்" என்ற நிலைதான். இந்நிலை ஒரு தரப்பால் மட்டுமன்றி பல்வேறு தரப்புகளாலும் குறி வைக்கப்படும் அபாய நிலையாக நீடிக்கிறது.

மேற்கூறிய நிலையின் ஊடாகவே குடாநாட்டிலிருந்து வெளி வரும் பத்திரிகைகள் நெருக்கடிகளையும் ஆபத்துக்களையும் காணவேண்டியுள்ளது. இப்பொழுது உதயன், வலம்புரி, யாழ் தினக்குரல் ஆகிய மூன்று நாளிதழ்கள் குடாநாட்டில் வெளி வந்து கொண்டிருக்கின்றன. 2002ம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்பு நமது ஈழநாடு யாழ்ப்பாணத்திலிரு ந்து வெளிவர ஆரம்பித்தது. ஆனால் அதன் வெளியீட்டாளரும் பொறுப்பாளருமான முன்னாள் பா. உ. சிவமகராசா சில மாதங்களுக்கு முன்பு அடையாளம் காணப்படாதவரின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகி மரணமடைந்த பின் அப்பத்திரிகை நின்றுபோய் விட்டது, இதன் பின் ஏனைய மூன்று பத்திரிகைகளும் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருந்தன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இப் பத்திரிகைகளை வெளியிட்டு வருவதென்பது மரணப் போராட்டம் செய்வது போன்றது தான். எந்நேரம் எந்தப் பத்திரிகையாளர் கொல்லப்பட்டலாம் அல்லது கடத்தப்படலாம் இவற்றுக்கும் மேலாக பத்திரிகைப் பணிமனைகள் தாக்கப்படலாம் என்ற தினசரிப் பயப்பீதியுடனேயே அத்தினசரிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது தினக்குரல்– வலம்புரி பத்திகையாளர் கடத்தப்பட்டுள்ளார். மேலும் பல பத்திரிகை யாளர்கள் மறைமுகமாகவும் நேரடி யாகவும் அடாவடித்தனங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகி வந்துள்ளனர். இவையாவும் குடா நாட்டுப் பத்திரிகையாளர்கள் எதிர் நோக்கி வந்த இன்றும்.எதிர்நோக்கி நிற்கும் உயிர் வாழ்தலுடன் கூடிய பிரச்சினைகளா கும்.

இவற்றுக்கு முகம் கொடுத்துள்ள குடாநாட்டுப் பத்திரிகைகள் ஏ9 பாதை மூடிய பின் அச்சிடும் 'நியூஸ் பிறின்ட்' தாளுக்கான தட்டுப்பாட்டை எதிர்நோக்கின. முன்பும் இப்படி நிலை வந்த போது 'பிறவுண் பேப்பர்' 'புல்ஸ்காப்பேப்பர்' போன்றவற்றில் பத்திரிகைகள் வெளிவந்தன. இப்பொழுது அவையும் இல் லாத நிலையில் நாலு பக்கங்களில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் வந்து கொண்டிருக்கின்றன. சில பொது இடங்களில் பத்திரிகைகள் சுவர்களில் ஒட்டப்பட்டும் தட்டிகளில் ஒட்டி மக்கள் வாசிக்கக் கூடியதாகவும் வைக்கப்படுகிறது, குடா நாடு அனுபவிக்கும் பன்முக நெருக்கடிகள் மத்தியில் மக்கள் செய்தி அறிந்து கொள்ளும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கின்றனர். அதேவேளை பத்திரிகைகளும் பத்திகையாளர்களும் தமக்குரிய கருத்தச் சுதந்திரத்தை துப்பாக்கிகள் முன்னால் கையிழந்து நிற்கின்றனர். கருத்துக்களுக்கு கடும் கட்டுப்பாடும் அச்சுறுத்தாள்களுக்கு பெரும் தட்டுப்பாடும் குடாநாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழலே காணப்படுகின்றது. ஜனநாயகம் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் பற்றி வாய்கிழியப் பேசும் முதலாளித்துவ பாராளுமன்ற வாதிகள் இந் நிலைக்கு என்ன நியாயம் கூறுவார்கள்.

## நிறைவேற்று அதிகாரம்

5ம் பக்க தொடர்ச்சி

இத்தகைய நிலையிலே ஜனாதிபதி தலைமையிலான ஆட்சி யுத்தம் தமது நோக்கம் இல்லை எனக் கூறிக்கொண்டு கிழ க்கை யுத்தத்தின் மூலம் விடுவிக்கும் கைங்கரியத்தில் இறக்கி நிற்கிறது, அதேவேளை விடுதலைப் புலிகள் எதிர்பார்க்காத இலக்குகள் மீதான திடீர் தாக்குதல்களை நடாத்தி தம் மீதான உள்நாட்டு வெளிநாட்டு கவனத்தை திருப்பி வருகின்றனர்.

இவற்றின் மத்தியில் வடக்கு கிழக்கு மக்கள் எதிர்பார்க்கும் யுத்த நிறுத்தம் மீளக்குடியமர்வு ஏ 9 பாதை திறப்பு சமாதானப் பேச்சுவார்த்தை அரசியல் இணக்கப்பாடும் தீர்வும் போன்ற துன்பப்படும் மக்களை மையப்படுத்தி நிற்கும் விடயங்கள் முன்னெடுக்கப்படவோ முக்கியத்துவம் பெறுவதாகவோ இல்லை. அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கள் வெறும் முனகல் சத்தமாகவே இருந்து வருகின்றது. ஜே. வி. பி. ஹெல உறுமயவின் யுத்த வெறிப் பேச்சு சிங்கள மக்களிடையே உரத்துக் கேட்க வைக்கப்படுகின்றது.

அதே வேளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது பதினெட்டு பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தரப்பிடம் இழந்த பின் உருப்படியாக எதனையும் செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றது. மேலும் அரசாங்கத்தரப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் இருப்பதால் உடனடியாகத் தேர்தல் வரக் கூடிய சந்தர்ப்பம் இல்லாதிருக்கிறது. ஆதலால் ஐக்கிய தேசியக் கட்சி பத்திரிகையாளர் மாநாடுகளுடனும் பாராளுமன்றப் பேச் சுக்களுடனும் தம்மை மட்டுப்படுத்தி நகர்த்திச் செல்கிறது. மக்கள் எதிர்நோக்கும் எந்தவொரு பிரச்சினைக்கும் வீதியில் இறங்கத் தயாராகவும் இல்லை. அதற்கான தேவையும் அதற்குக் கிடையாது. அதேவேளை ஜே. வி. பி– ஹெலஉறுமய ஆகிய இரண்டும் தமது அரசியல் உயிர் வாழ்வை பேரினவாதத்தின் ஊடாகத் தக்க வைத்துக் கொள்வதிலேயே முனைப்புக் காட்டி நிற்கின்றன. அவர்கள் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கோ அல்லது தொழிலாளர்கள் விவசாயிகள் எதிர் நோக்கும் நெருக்கடிகளுக்கோ எதிர்ப்பு இயக்கங்களை முன்னெடுக்கத் தயாராக இல்லை.

இந் நிலையில் நிறைவேற்று அதிகாரத்தை வைத்து அரசியல் செய்து வரும் ஜனாதிபதியும் அவரது இரண்டு சகோதரர்களும் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெறுவதில் வெற்றிபெற்றனர். அந்த வெற்றிக்காக 104 அமைச்சுப் பதவிகளை வழங்கி மாதாமாதம் கோடிக் கணக்கான பணத்தை செலவு செய்ய வைத்திருக்கிறார்கள். அத்துடன் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்கள் எழும்புவதைத் தடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர். ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகள் என்பன யாவும் தேசிய பாதுகாப்பின் பேரில் அவசரகால சட்டவிதிகளின் பிடிக்குள் இறுக்கப்பட்டுள்ளன. தூரச் சென்று துள்ளிக்குதிக்க முற்பட்ட சூரியாராச்சியும் மங்களவும் அதற்கு மேல் எழும்பாதவாறு பார்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவற்றின் காரணமாக பொதுவானதொரு உள்ளார்ந்த அச்சமும் பயப்பீதியும் பரவி வரும் சூழலைக் காணமுடிகின்றது. அதனால் மக்கள் மெளமாக்கப்பட்டுள்ளனர். எல்லாவகையான சுமைகளும் அவர்களது தலைகைளில் சுமத்தப்பட்டுள்ள போதும் அவற்றை நொந்து நொந்து சுமக்கும் நிலையிலேயே இருந்து வருகின்றனர். அதேவேளை வாக்குறுதியளிக்கப்பட்டவாறு மக்களின் முன்னால் இருந்துவரும் அடிப்படைப் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. அவை தீர்க்கப்படுவதற்கான திட்டங்கள் என்று எதுவும் இல்லை.

அரசாங்கத்தரப்பை எதிர்த்தரப்பாக்கவும் எதிர்க்கட்சியை அரசாங்கக் கட்சியாக்கவும் புள்ளடி மூலம் மாற்றும் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாய வித்தைக்குள் மக்கள் சிக்குண்டு ஏமாந்து நிற்கும் வரை இந் நாட்டிற்கும் மக்களுக்கும் விமோசனம் ஏற்பட்ட வாய்ப்பு இல்லை என்பதே யதார்த்தம் கற்று த்தரும் பாடமாகும். நாடு மக்கள் தேசிய இனங்கள் சம்மந்தமாகத் தெளிவான தூரநோக்குடைய உறுதியான கொள்கையுடைய மூன்றாவது அரசியல் சக்தி ஒன்று உருவாகி சகல தடைகளையும் தகர்த்து முன் செல்லாதவரை பிரச்சினைகள் எதுவும் தீர்வு காணப் போவதில்லை.

# கார்ல் மார்க்ஸ்

# புது யுகத்தின் வழிகாட்டி

புகழ் பெற்ற வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையை வர்ணிக்கிறபோது பயன்படுத்துகிற சில சொற்கள் உள்ளன - யுகபுருஷன் அதிசயமனிதன் மாமேதை என்றெல்லாம் கூறுவார்கள்.

காரல் மார்க்சைக் கொண்டாடுகிற இந்த சந்தர்ப்பத்தில் இந்த வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தி மார்க்சைக் குறித்து எழுத வேண்டுமென்று நமக்கெல்லாம் தோன்றலாம். ஏனெனில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கி மனித சமுதாயம் முன்னேறுகின்ற ஒரு யுகத்தின் முழுமையான உயிர்த் துடிப்பை உட்கொண்டிருந்த அசாதாரணமான அறிவாற்றல் கொண்ட ஒரு சாதாரண மனிதனைக் காட்டிலும் மிகப் பெரிய அளவுக்கு உயர்ந்து நிற்கின்ற ஒரு மேதையாக இருந்தார் மார்க்ஸ். மார்க்சின் சவ அடக்கத்தின்போது அவரின் வாழ்நாள் நண்பனும் உடன் செயல்பட்டவருமான பிரெடரிக் ஏங்கல்ஸ் கூறியது போல "அவருடைய நாமம் யுக யுகாந்திரங்களுக்கு நிலைத்திருக்கும் - அவரது நூல்களும்"

இருந்த போதிலும் மார்க்ஸ் ஒரு அதிசய மனிதராக இருக்கவில்லை. மனிதனுக்குரிய உணர்வுகளும் தனிப்பட்ட முறையிலான குறைபாடுகளும் கொண்டிருந்த ஒரு மனிதன் தான் காரல் மார்க்ஸ்.

ஆனால் இதற்கு முன் குறிப்பிட்டது போல சாதாரண மனிதனாகப் பிறந்து சாதாரண மனிதனாகவே இறந்த காரல் மார்க்ஸ் அவர் வாழ்ந்த 65 ஆண்டு காலத்திற்குள் வேறு எந்த மனிதனும் செய்ய முடியாத அளவு மகத்தான காரியங்களைச் செய்து முடித்தார். பிரெடரிக் ஏங்கல்சை நான் மீண்டும் ஒரு முறை மேற்கோள் காட்டுகிறேன். "மார்க்சின் பெயர் யுக யுகாந்திரத்திற்கும் நிலைத்திருக்கும் - அவரது நூல்களும்" சாதாரண மனிதர்களைக் காட்டிலும் மிக மிக உயர்ந்திருந்த ஒரு வரலாற்று நாயகன் மார்க்ஸ். இந்த பொருளில் அசாதாரணமானவர்தான் அவர்.


முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கும் அதிலிருந்து கம்யூனிசத்திற்கும் சென்று கொண்டிருக்கிற மனித சமுதாயத்திற்கு அந்தப் பயணம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைத் தெளிவாகச் சுட்டிய ஒரு தீர்க்கதரிசி அவர். ஆகவே அவரது நூல்கள் உருவாகிவரும் புதிய யுகத்தின் தூதர்களுக்கு- தொழிலாளி வர்க்கத்திற்கும் அந்த வர்க்கத்துடன் இணைந்து நிற்கின்ற இதர புரட்சிக்காரர்களுக்கும்- உறுதியாக முன்னேறுவதற்கான வழிகாட்டியாக உள்ளது. அந்த அர்த்தத்தில் அவர் யுகபுஷர் தான்.

ஆனால் சாதாரணமானவர்களைக் காட்டிலும் எத்தனையோ படிகள் உயர்ந்து நிற்கத் தக்க ஆற்றல் மிக்க அவர் சாதாரண மக்களுடன் முழுக்க முழுக்க ஒன்றுசேர்ந்து இணைந்து நின்றார். பெரும்பான்மையினரான சாதாரண மக்களால் தெளிவாக வெளிப்படுத்த முடியாத அவர்களின் சொந்த உணர்வுகளுக்கும் கருத்துக்களுக்கும் விருப்பங்களுக்கும் வடிவம் அளிக்க மார்க்சினால் முடிந்தது என்பது தான் அவரை அசாதரணமான மனிதனாக ஆக்கியது. இவ்வாறு பெரும்பான்மையினரான சாதாரண மக்களின் வெளிப்படுத்தப்படாத உணர்வுகளுக்கும் கருத்துக்களுக்கும் வடிவம் அமைத்து அவர்கள் முன்னோக்கிச் செல்வதற்கான ஊக்கம் அளித்து அவர்களின் அமைப்பு ரீதியான செயல்பாட்டின் மூலமாகவே ஒரு புது யுகத்தைத் தொடங்கி அவர்களுக்கு உதவி செய்தவர் என்ற அர்த்தத்தில் அவர் "யுகபுஷே" னாகிறார்.

மார்க்சியம் என்ற பொதுவான பெயரில் அறியப்படுகிற கருத்துப் பெட்டகம் டாக்டர் காரல் மார்க்ஸ் என்ற ஒரு அறிஞர் அ முதல் ஃ வரை தனது மூளையிலிருந்து உருவாக்கிய ஒரு தத்துவம் அல்ல. தான் பிறந்த காலத்திற்கு முன்னாலேயே வளர்ந்து வந்ததும் ஒரு இளம் அறிவுஜீவி என்ற முறையில் தான் கற்றறிந்ததுமான புரட்சிகர சித்தாந்தங்களிலிருந்து தான் மார்க்ஸ் தொடங்கினார். ஆனால் அவற்றையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அவர் வாழ்ந்த யுகத்தின் முக்கிய முற்போக்குச் சக்திகளுடன் அவற்றைப் பொருத்துவதற்கு மார்க்ஸ் முயற்சித்தார். அவ்வாறு உயிரற்ற இயற்கைக்கும் உயிருள்ளவற்றுக்கும் சிந்தனைக்கும் மனிதனின் சமூக அமைப்புகளுக்கும் ஒன்று போல பொருந்தக் கூடிய ஒருங்கிணைந்தொரு பார்வையையும் விதிகளையும் உருவாக்க மார்க்சினால் முடிந்தது. இதுதான் மார்க்ஸ் மனித சமுதாயத்திற்கு ஆற்றிய அதி முக்கிய பணியாகும்.

எதுவும் என்றும் நிலையாக இருப்பதில்லை. எல்லாம் இடைவிடாமல் இயங்கிக் கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு பொருளிலும் பரஸ்பரம் முரண்பட்ட சக்திகள் உள்ளடங்கியுள்ளன. அவை ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருக்கின்றன. இந்த மோதல்களின் விளைவாக அந்தப் பொருள் அழிகிறது. அதனுடைய அழிவிலிருந்து அதைக் காட்டிலும் வளர்ச்சியடைந்த இன்னொரு பொருள் உருவாகிறது. இவ்வாறு புதிதாகத் தோன்றுகிற பொருளுக்குள்ளும் பரஸ்பரம் முரண்பாடான சக்திகள் இருக்கின்றன. அவற்றுக்கிடையே மோதல் நடைபெறுகிறது. இவ்வாறு நிரந்தரமான மாறுதல்கள். அல்லது ஒன்றின் அழிவும் அதைக் காட்டிலும் வளர்ச்சியடைந்த இன்னொன்றின் தோற்றமும் நடைபெறுவதன் மூலமாகத்தான் பிரபஞ்சம் இயங்கி வருகிறது. இவையெல்லாம் அடங்கிய ஒரு பிரபஞ்சக் கண்ணோட்டம் இளம் தத்துவஞானியான மார்க்சுக்கு பாரம்பரியமாகக் கிடைத்தது. தத்துவஞானத்தின் வரலாற்றில் அன்று வரை உருவானதில் மிகவும் புரட்சிகரமான இந்த சித்தாந்தத்தின்- இயக்கவியலின்- மூலவரான ஹெகலும் அவரின் சீடர்களும்தான் இளைஞரான மார்க்சின் சிந்தனைப் போக்கை உருவாக்கியவர்கள்.

ஹெகலின் கண்ணோட்டத்தின்படியான இயக்கவியல்



**மார்ச் 14 திகதி கார்ல் மாக்சின் நினைவு தினமாகும்**

**"மார்க்சின் பெயர் யுக யுகாந்திரத்திற்கும் நிலைத்திருக்கும் - அவரது நூல்களும்"**

அடிப்படையாகக் கொண்டிருப்பது கருத்தை அல்லது சிந்தனையைத்தான். அந்தத் துறையில் அல்லது சிந்தனைத் துறையில் நிரந்தரமாக நடக்கின்ற மாறுதல்கள் தான் ஹெகலின் விவாதத்திற்கு உட்பட்டவை என்று கூறுகிறபோது சிந்தனைத் துறையில் நிரந்தரமாக நடக்கின்ற மாறுதல்கள்தான் முன்னேற்றத்தின் அடிப்படை என்று அவர் வாதாடினார். இது முற்றிலும் குறைபாடானது என்பதுதான் மார்க்சின் கருத்து. சிந்தனை என்ற செயல்முறை எப்படி நடக்கிறது; கருத்து எவ்வாறு தோன்றுகிறது. இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க ஹெகலின் இயக்கவியல் உதவிகரமாக இல்லை. அது, தானே தோன்றுகிறது. தானே வளருகிறது. தானே மாறுகிறது- இதுதான் ஹெகலிய இயக்கவியலின் கண்ணோட்டம்.

## மார்க்சியத்தை நோக்கி....

இக்குறையைத் தீர்ப்பதற்கு மார்க்ஸ் ஆதாரமாகக் கொண்டது தனக்குப் பாரம்பரியமாகக் கிடைத்த இன்னொரு தத்துவஞானத்தைத்தான்- அதுவே பொருள்முதல்வாதமாகும். 1844- 45 காலத்தில் ஏங்கல்ஸ் எழுதிய ஒரு கட்டுரையில் கூறியது போல

"சிந்தனைக்கும் பொருளுக்கும் இடையில் ஆன்மாவுக்கும் இயற்கைக்கும் இடையில் உள்ள உறவு என்ன? இதில் எது முதலில் தோன்றியது -இதுதான் தத்துவஞானத்தின்- குறிப்பாக நவீன தத்துவஞானத்தின்- முன்னால் உள்ள அடிப்படையான மிகப் பெரிய பிரச்சினை. இதற்கு விடை காண முயற்சித்த தத்துவஞானிகள் இரண்டு முகாம்களாகப் பிரிந்தனர். ஆத்மா தான் முதலில் தோன்றியது, இயற்கை அல்ல என்றும், பிரபஞ்சம் முழுதும் அதற்கப்பால் உள்ள ஏதோ ஒரு சக்தியின் படைப்புத்தான் என்றும் நம்பியவர்கள் ஆன்மீகவாத முகாமில் அணிதிரண்டனர். இயற்கைதான் முதலில் தோன்றியது என்று கருதுகிற மற்றவர்கள் ஏதாவது ஒரு விதமான பொருள் முதல்வாத அணியில் சேர்ந்தனர்."

இதில் ஆன்மீகவாத முகாமில் சேர்ந்தவர்களில் மிகப் பெரிய மேதையும் புரட்சிக்காரருமான தத்ததுவஞானிதான் ஹெகல். என்றாலும் அவரால் கூட சிந்தனையின் அல்லது கருத்தின் தோற்றுவாயைக் கண்டறிய முடியவில்லை. ஆனால் மார்க்ஸ் சிந்தனையுடையவும் கருத்தினுடையவும் இயக்க ரீதியான மாறுதல்களைக் குறித்து ஹெகல் உருவாக்கிய புரட்சிகரமான சித்தாந்தத்தை இயற்கைக்கும் கருத்துக்களுக்கும் சமூக வாழ்க்கைக்கும் எல்லாம் ஒன்று போலப் பொருந்தக்கூடிய ஒரு பொருள் முதல்வாதப் பிரபஞ்சக் கண்ணோட்டமாக மாற்றியமைத்தார்.

ஹெகல் விவரித்த மாறுதல் செயல்பாடுகள் எல்லாம் உண்மையில் நடைபெறுகின்றன. அதன் மூலம்தான் பிரபஞ்சம் இயங்குகிறது. ஆனால் இந்த செயல்பாட்டின் தொடக்கம் மனித மனதில் அல்ல, புற இயற்கையில் தான்; இந்தப் புற இயற்கை உண்மையானது, சிந்தனையின் படைப்பல்ல; நேர்மாறாக இயற்கையில் நிரந்தரமாக நடந்துவருகின்ற மாறுதல்களின் விளைவுதான். அந்த மாறுதல்களின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் வளர்ந்துவருகின்ற ஒரு

**"இது வரை தத்துவஞானிகள் உலகை வியாக்கியானம் செய்தே வந்தனர். எமது பணி உலகத்தை மாற்றி அமைப்பதே ஆகும்."**

குறிப்பிட்ட வடிவம் என்ற முறையில்தான் சிந்தனை அல்லது கருத்து உருவாகின்றது. இவ்வாறு சிந்தனையும் கருத்தும் உருவான பிறகு அது புற இயற்கையின் மீது செல்வாக்கு செலுத்துகிறது. இவ்வாறு சிந்தனை செலுத்துகிற செல்வாக்கு இயற்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு அது மீண்டும் சிந்தனையில் அல்லது கருத்தில் அதன் செல்வாக்கை செலுத்துகிறது. இவ்வாறு இயற்கைக்கு நிரந்தரமாக ஏற்பட்டு வருகிற புரட்சிகரமான மாறுதல்களிலிருந்து தோன்றிய சிந்தனை அல்லது கருத்து அது தோன்றுவதோடு கூட குறைந்த அளவிலானாலும் புற இயற்கையில் மாறுதல் ஏற்படச் செய்யவும் அவ்வாறு மாறுதல் ஏற்படுகின்ற புற இயற்கையினால் தன்னையும் மாற்றியமைத்துக் கொள்கிறது. இவ்வாறு எண்ணற்ற நூற்றாண்டுகளில் புற இயற்கையானது சிந்தனையையும் சிந்தனை புற இயற்கையையும் பரஸ்பரம் மாற்றிக்கொண்டிருப்பதன் விளைவாகத்தான் மனித சமுதாயம் முன்னேறுகிறது.

இதுதான் மார்க்சின் இயக்கவியல். அதற்கும் ஹெகலிய இயக்கவியலுக்கும் இடையில் ஒரு பொருளுக்குள் உள்ள இரண்டு முரண்பட்ட சக்திகளுக்கிடையிலான உறவுதான் உள்ளதுர் மார்க்சின் இயக்கவியல் ஹெகலின் இயக்கவியலின் தொடர்ச்சிதான். இருப்பினும் ஹெகலிய இயக்கவியலுக்கு நேர் எதிரானது. மார்க்சினுடைய வார்த்தைகளில் கூறுவதென்றால். "ஹெகலின் இயக்கவியல் தலைகீழாக இருந்தது. அதனுடைய தலையைப் பிடித்து நிமிர்த்தி நேராக நிற்க வைப்பதையே நான் செய்தேன்."

முதலில் தோன்றியது இயற்கைதான்; அதனுடைய சந்ததிதான் சிந்தனை; ஆனால் சிந்தனை பிறந்த பிறகு- மனிதன் சிந்திக்கத் தொடங்கிவிட்டால்- புற இயற்கையிலேயே மாறுதல்கள் ஏற்படுத்தக் கூடிய பல விதமான பணிகளுக்கு அது அத்திபாரமாகிவிடுகிறது; இப்பணிகளின் மூலமாக புற இயற்கையில் மாறுதல் ஏற்படுகிறது. இப்பணிகளின் விளைவாக மனிதரிலும் பல மாறுதல்களும் ஏற்படுகின்றன. இவ்வாறு சிந்தனையை உருவாக்கவும் அதில் உருவவேறுபாடு ஏற்படுத்தவும் புற இயற்கையிலும் உருவ மாறுபாடு ஏற்படுத்தவும் (புற இயற்கையை உண்டாக்குவதல்ல) சிந்தனைக்கு சாத்தியமாகிறது. - இதுதான் மார்க்சீய இயக்கவியல்.

**இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் எழுதிய கார்ல் மார்க்ஸ் புது யுகத்தின் வழிகாட்டி என்ற நூலின் ஒரு பகுதி.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவின் முதல் இளம் கம்யூனிஸ்ட் தியாகி பகத்சிங்

தனது வரலாற்றுக் கடமையை அடக்கத்துடன் புரிந்து வைத்திருந்த ஒரு அரசியல் போராளியாக ஆனால் தன்னை சமூகத்திற்கு மேல் நிறுத்திப் பார்த்துக்கொள்ளாத ஒரு வீரனாக, தனது தியாகத்தின் அரசியல் பயனைக்கூட ஆராய்ந்து புரிந்துகொள்ள முடிந்த அற்புதமாக பகத்சிங் இந்திய விடுதலைப் போராட்ட அரங்கினுள் நுழைகிறான்.

பகத்சிங்கை வெறுமனே நாட்டுக்காக தூக்குமேடையேறிய வீரராக மட்டும் சித்தரிப்பது அவரது வரலாற்றுப் பாத்திரத்தை மறுப்பதாகும். இளம் வயதில் மரணத்திற்கு அஞ்சாத உறுதி மட்டும் வரலாற்று நோக்கில் ஒருவருக்கு சிறப்பிடத்தை தந்து விடாது. ஏனெனில் காந்தியைச் சுட்டுக் கொன்று தூக்குமேடையேறிய கோட்சேயும் கூட மரணத்திற்கு அஞ்சாத இளைஞன்தான். உயிரை துறப்பதாலல்ல. உயிரைத் துறப்பதற்கான நோக்கத்திலேதான் வீரமும், தியாகமும் அடங்கியிருக்கிறது. பகத்சிங்கின் நோக்கமும் லட்சியமும் தான் அவரது மரணத்தை வரலாறாக்கியது. இளைஞர்களை புரட்சிகர அரசியலுக்கு கவர்ந்திழுத்தது. இன்றளவும் கவர்ந்திழுக்கிறது.

1919-ல் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை இந்திய மக்களிடத்தில் ஆறாத வடுவாகவும் சுதந்திரக் கனலை மூட்டி விடுவதாகவும் அமைந்தது. அப்போது சிறுவனாயிருந்த பகத்சிங்கின் உள்ளத்திலும் இப்படுகொலை ஆழமான காயத்தை உருவாக்கியிருந்தது. இதற்குப் பழிவாங்கும் விதத்தில் உத்தம் சிங் எனும் இளைஞன் 20 ஆண்டுகள் காத்திருந்து படுகொலைக்குப் பின்னணியிலிருந்த அப்போதைய பஞ்சாப் கவர்னர் ஜெனரல் ஓடயரைச் லண்டனில் வைத்துச் சுட்டுக் கொன்றார்.

1921ல் காந்தி 'ஓராண்டிற்குள் சுயாட்சி' என்ற முழக்கத்தோடு ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். அவ்வழைப்பை ஏற்று மாணவர்கள்- தொழிலாளர்கள்- அரசு ஊழியர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கான மக்கள் அணிதிரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

1922 பிப் 5 ஆம் தேதி உ. பி யில் உள்ள சௌரி சௌரா எனும் இடத்தில் அமைதியாகப் போராடிய மக்கள் மீது போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பலர் மடிந்தனர். வெகுண்டெழுந்த மக்கள் சௌரி சௌரா போலீசு நிலையத்தை தீயிட்டுக் கொளுத்தியதில் 22 போலீசுக்காரர்கள் கொல்லப்பட்டனர். உடனே ஒத்துழையாமை இயக்கம் காந்தியால் நிறுத்தப்பட்டது. காந்தியின் இந்த எதேச்சதிகாரமான முடிவுக்கு எதிராக காங்கிரசுக்குள்ளேயே கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. சமூகத்தின் அனைத்துத் தரப்பினர் மீதும் அரசின் பழிவாங்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. காங்கிரசு கை கட்டி வேடிக்கை பார்த்தது. ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு நம்பிக்கையின்மையும் சோர்வும் இந்திய அரசியல் வானை மூடின.

தேசப்பற்றுமிக்க இளைஞர்கள் புதிய நம்பிக்கைகளைத் தேடலாயினர். காந்தியத்தின் மீது துவக்கத்திலேயே விமரிசனம் கொண்டிருந்த பகத்சிங் சுகதேவ் போன்ற இளைஞர்கள் புரட்சிகர அமைப்புகளின் தொடர்பு கிடைக்கப் பெற்றனர். 1924-ன் இறுதியில் சச்சீந்திரநாத் சன்யால் என்பவரால் துவக்கப்பட்ட இந்துஸ்தான் குடியரசுக் கழகம் எனும் அமைப்பில் இணைந்தனர்.

இவ்வமைப்பின் அப்போதைய முன்னணியாளர்களான ராம்பிரசாத் பிஸ்மில் ராஜேந்திர நாத் லஹிரி அஷ்பகுல்லாகான், மன்மத் நாத் குப்தா, சந்திரசேகர ஆசாத் போன்றோர். 1925 ஆகஸ்டு 9-ந் திகதியன்று காக்கோரி எனும் இரயில் நிலையத்தில் ரயிலை நிறுத்தி அரசு கஜானாவிற்கான பணத்தைக் கொள்ளையடித்தனர். இதனை அரசுக்கு நேர்ந்த சவாலாக உணர்ந்த ஆங்கிலேய அரசு கடுமையான அடக்குமுறையை ஏவியது. 1926 இறுதியில் தலைமறைவான ஆசாத் தவிர மற்ற அனைவரும் கைது செய்யப்பட்டனர். இயக்கம் செயலற்று நின்றது.

இந்தத் தேக்க நிலையில் 1926- இல் லாகூரில் பகத்சிங், பகவதிசரண் வோரா, சுகதேவ், யஷ்பால் முதலானோர் 'நவஜவான் பாரத் சபா' எனும் இளைஞர் அமைப்பைத் தோற்றுவித்தனர். வெளிப்படையாக மக்கள் மத்தியில் சுதந்திர வேட்கையைத் தூண்டும் கூட்டங்கள் இவ்வமைப்பினரால் நிகழ்த்தப்பட்டன.

1927 இறுதியில் ராம்பிரசாத் பிஸ்மில் ராஜேந்திரநாத் லஹிரி அஷ்பகுல்லா கான் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர். பலர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு அந்தமான் சிறைக்கு அனுமதிக்கப்பட்டனர். இச்சூழ்நிலையில் தலைமறைவாயிருந்த ஆசாத்தோடு பகத்சிங் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். இயக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பொறுப்பு இந்த இளம் தோழர்களின் தோழ்களில் விழுந்தது.

1925-லிருந்து 1927க்கும் இடைப்பட்ட இக்காலத்தில் இயக்கப் பணிகளினூடாக 1917-ன் ரசியப் புரட்சியின் விளைவாக இந்தியாவில் பரவத் தொடங்கிய சோசலிசக் கருத்துக்களையும் இதர ஐரோப்பியக் கருத்துக்களையும் பகத்சிங்கும் அவரது தோழர்களும் கற்கத் துவங்கினர். பகத்சிங் சோசலிசக் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்வதில் முன்னணியில் இருந்தார். இந்தக் காலகட்டத்தில் உருப்பெற்ற அரசியல் கண்ணோட்டம்தான் அவருடைய வளர்ச்சி நிலைகளுக்கு அடிகோலியது. இச்சூழ்நிலையை 'நான் நாத்திகன்- ஏன்?' எனும் கட்டுரையில் அவர் விவரிக்கிறார்.

"அக்காலகட்டம் வரை நான் வெறுமனே ஒரு கற்பனாவாதப் புரட்சியாளனாகவே இருந்தேன். அது வரை நாங்கள் வெறுமனே பின்பற்றுபவர்களாக மட்டுமே இருந்தோம். இப்பொழுதோ முழுப்பொறுப்பையும் தோளில் சுமக்க வேண்டிய காலம் வந்தது. சில காலமாக ஏற்பட்ட தடுக்க முடியாத எதிர்ப்பால் கட்சி உயிரோடிருப்பதுகூட அசாத்தியமென்று தோன்றியது...... எங்களுடைய வேலைத்திட்டம் பிரயோசனமற்றென பிற்காலத்தில் உணரக் கூடிய ஒருநாள் வரக் கூடுமோ என சில சமயங்களில் நான் பயந்ததுண்டு. எனது புரட்சிகர வாழ்க்கையில் அது ஒரு திருப்புமுனையாகும். "கற்றுணர்" எனும் முழக்கமே என் மனத்தாழ்வாரங்களில் கணந்தோறும் எதிரொலித்தது...."

"நான் கற்றுணரத் துவங்கினேன். என்னுடைய பழைய நம்பிக்கைகள் மாறுதலுக்குள்ளாகத் துவங்கின. எமது முந்தைய புரட்சி புரட்சியாளர்களிடம் பிரதானமாக விளங்கிய நம்பிக்கையின் அடிப்படையிலான வழிமுறைகள். இப்பொழுது தெளிவான உறுதியான கருத்துக்களால் நிரப்பப்பட்டன. மாயாவாதமோ குருட்டு நம்பிக்கையோ அல்ல மாறாக யதார்த்தவாதமே எங்கள் வழியாயிற்று. அத்தியாவசியத் தேவையையொட்டிய பலாத்காரப் பிரயோகமே நியாயமானதாகும். அனைத்து மக்கள் இயக்கங்களுக்கும் சாத்வீகம் ஒரு விதி என்ற அடிப்படையில் இன்றியமையாததாகும். மிக முக்கியமாக எந்த லட்சியத்திற்காக நாம் போராடுகிறோம் என்பதைக் குறித்த தெளிவான புரிதலோடிருக்க வேண்டும்.'

அன்றைய சூழலில் தொழிற்சங்க இயக்கம் நாட்டில் முன்னேறிக் கொண்டிருந்தது. 1928- இல் வட மாநிலங்களில் பரவலாக தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் போர்க்குணத்தோடு நடைபெறலாயின. வளர்ந்து வரும் தொழிலாளர் இயக்கத்தைக் கடுமையாக ஒடுக்கும் முகமாக 'தொழிற்தகராறு மசோதா'வை டெல்லி மத்திய சபையில் ஆங்கில அரசு கொண்டு வந்தது.

தொழிற் தகராறு மசோதா நிறைவேற்றப்படும் நாளன்று டெல்லி மத்திய சபையில் உயிர்ச்சேதமின்றி வெடிகுண்டு வீசுவதென்றும் தானாகவே கைதை ஏற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் வழக்காடுவதன் மூலம் ஆங்கில அரசின் அடக்கு முறைகளை அம்பலப்படுத்துவதெனவுமான திட்டத்தை பகத்சிங் மத்தியக் கமிட்டியில் முன்வைத்தார். இவற்றை செய்து முடித்த பின்னால் ஒரு வேளை தப்ப முடியவில்லையென்றால். தூக்கு மேடை செல்லவும் தயாராக இருக்க வேண்டுமென்றார் பகத்சிங். அவர் முன் வைத்த திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திட்டமிட்டபடி 1929 ஏப்ரல் 8-ஆம் தேதியன்று கேள்வி நேரத்தில் எதிர்பார்த்தபடியே வைஸ்ராயின் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி 'தொழிற்தகராறு மசோதா' நிறைவேறியதை அறிவிக்க ஜெனரல் சூஸ்டர் எழுந்தார். உடனடியாக பார்வையாளர் அரங்கிலிருந்த பகத்சிங்கும் பி. கே. தத்துவம் வெடிகுண்டுகளை காலி இருக்கைகளின் மீது வீசினார்கள். 'செவிடர்களை கேட்கச்செய்வதற்கு வெடிகுண்டு முழக்கங்கள் அவசியமானவை' எனும் தலைப்பிலான சிவப்புத் துண்டறிக்கைகளை வீசியவாறு. 'புரட்சி நீடுழி வாழ்க' ஏகாதிபத்தியம் ஒழிக! உலகப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள்! ஆகிய முழக்கங்களை உத்வேகத் தோடு எழுப்பினார்கள். நெடுநேரம் அவர் களை நெருங்கத் தயங்கியவாறு போலீசார் நின்றனர். பின்னர் பகத்சிங் அவர்களை நோக்கி தாங்கள் கைதுக்குத் தயாராக இருப்பதாகவும் தங்களிடம் ஆயுதங்கள் இல்லையெனவும் உறுதியளித்த பின்னரே அந்த சூரப்புலிகள் அவர்களை நெருங்கி கைது செய்தனர்.

1929 ஜீன் 6- ஆம் தேதியன்று பகத்சிங்கும் பி. கே. தத்தும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கை வரலாற்றுப் புகழ் பெற்றதாகும். வெடிகுண்டு வீசியதை ஏற்றுக் கொண்ட தோழர்கள். அதன் நோக்கம் உயிர்ப் பலியல்லவென்றும் அதன் அரசியல் நோககம் குறித்தும் வாதாடினர்.

"எங்களது ஒரே நோக்கம் செவிடர்களைக் கேட்கச் செய்வதும், செவிமடுக்காதவர்களுக்குத் தக்க எச்சரிக்கை வழங்குவதுமேயாகும். மிகப்பலரும் எங்களைப் போன்றே செய்யவிரும்பினர். வெளித்தோற்றத்தில் அமைதியாகக் காட்சியளிக்கும் இந்திய மக்கட் கடலிலிருந்து ஒரு மாபெரும் சூறாவளி எழும்பவிருக்கிறது..... கற்பனாவாத சாத்வீகத்தின் காலம் முடிந்து விட்டதைத் துளியும் சந்தேகத்திற்கிடமின்றி இளைய தலைமுறை ஏற்றுக் கொண்டு விட்டதை நாங்கள் அடையாளப்படுத்த மட்டுமே செய்துள்ளோம்."

அன்று சர்வதேசப் பத்திரிகைகளிலும் தேசபக்த உணர்வுமிக்க இந்தியப் பத்திரிகைகளிலும் விரிவாக வெளியிடப்பட்ட பகத்சிங்கின் அறிக்கைகள் மக்களால் பேரார்வத்தோடு வரவேற்கப்பட்டன. வாழக்கை விரைந்து நடத்திய அரசு 1929 ஜீன்- 12 அன்று பகத்சிங் மற்றும் பி.கே.தத் இருவருக்கும் ஆயுள் தண்டனை விதித் தது.

சிறையிலடைக்கப்பட்ட தோழர்கள் அங்கேயும் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். அன்றைய சூழலில் அரசியல் கைதிகள் கிரிமினல் கைதிகளைப் போல நடத்தப்படுவதைக் கண்டித்தும் வெள்ளையர் அரசியல் கைதிகளுக்கு காட்டப்பட்ட பாரபட்சத்தைக் கண்டித்தும் பகத்சிங் லாகூர் சிறையிலிருந்தும் பி. கே. தத் மியான்வாலி சிறையிலிருந்தும் ஜூலை- 13ம் தேதியன்று உண்ணாவிரதத்தை துவங்கினார்கள். கைது செய்யப்பட்ட பிற புரட்சியாளர்களும் பகத்சிங் தத்துடன் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர். அவர்களுக்கு வலுக்கட்டாயமாக உணவு ஊட்ட முயன்ற முயற்சிகளைக் கடுமையாக எதிர்த்தனர். 63 நாட்கள் உண்ணாவிரத்திற்குப் பிறகு ஜதின்தாஸ் செப்டம்பர் 13- ஆம் தேசியன்று உயிர் நீத்தார். அவரது உடல் லாகூர் சிறையிலிருந்து கல்கத்தா எடுத்துச் செல்லப்பட்டது. அவரது இறுதி ஊர்வலத்தில் 6 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.





தியாகி ராஜகுரு



தியாகி சுகதேவ்

## 1931 மார்ச் 23ம் திகதி அன்று வெள்ளை ஏகாதிபத்திய வாதிகளால் லாகூர் மத்திய சிறையில் தூக்கிலடப்பட்ட மூன்று தியாகிகள்

சாண்டர்ஸ் கொலை வழக்கு இரண்டாம் லாகூர் சதி வழக்காக ஜீலை 10 முதல் துவங்கியது. பகத்சிங் இவ்வழக்கிலும் முக்கியக் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார். பகத்சிங்கும் தோழர்களும் வழக்கு மேடையின் நியாய வேடத்தைக் கேள்விக் குள்ளாககினர். லெனின் தினம் மற்றும் காக்கோரி தினம் நீதிமன்றத்திலேயே தோழர்களால் கொண்டாடப்பட்டது. பகத்சிங் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்திற்கு தங்களது வாழ்த்துத் தந்தியை அனுப்ப நீதிமன்றத்திற்கு வேண்டுகோள்விடுத்தார்.

ஒரு கட்டத்தில் இவ்வழக்கு விசாரணை மக்கள் மத்தியில் பீதியை உண்டாக்குவதற்குப் பதிலாக புரட்சியாள்களுக்குச் செல்வாக்கு உண்டாக்குவதை உணர்ந்த ஆங்கிலேய அரசு 1930 மே- 1 ஆம் தேதியன்று லாகூர் சதி வழக்கு சட்டவரைவின் மூலமாக வழக்கை விசேட நீதிமன்றத்திற்கு மாற்றியது. அதனடிப்படையில் அனைத்து நீதித்துறை விதிமுறைகளும் காற்றில் பறக்க விடப்பட்டு "குற்றம் சாட்டப்பட்டோர் இல்லாமலேயே விசாரணை நடைபெறலாம்" என அறிவித்தது. பிறகு 'தடங்கலின்றி' நடைபெற்ற விசாரணை நாடகம் அக்டோபர் 7-ஆம் தேதியன்று பகத்சிங், சுகதேவ், ராஜகுரு ஆகியோருக்குத் தூக்கு தண்டனை விதித்தது.

இந்தியச் சிறை வரலாற்றிலேயே முதல் முறையாக மக்கள் எதிர்ப்புக்கு அஞ்சி காலை நேரத்திற்குப் பதிலாக மார்ச்- 23. 1931 அன்று இரவோடிரவாக மாலை 7.33 மணியளவில் பகத்சிங் சுகதேவ் ராஜகுரு முதலானோர் தூக்கிலிடப்பட்டனர்.

தொடர்ச்சி 16ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

## நினைப்புத்தான் எதையோ கெடுக்கிறது!

"ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறினால் மத்திய கிழக்கில் அமைதி இல்லாமல் போய்விடும்" என்று சொல்லியிருக்கிறார் அமெரிக்கத் துணை அதிபர். ஏதோ மத்திய கிழக்கு ஈராக் போருக்கு முன்னர் அமைதி இழந்து இருந்தது போலவும் அமெரிக்கப் படைகளின் புனிதப் பாதங்கள் பட்ட பின்னர்தான் மத்திய கிழக்கில் அமைதி துளிர் விட்டது போலவும்......

இப்படி நினைத்து நினைத்துத்தான் உலகையே சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். 'இந்தத் தறுதலையள் தலையிட்டதால்தான் இருந்த நிம்மதியும் இல்லாமல் போனது' என்றொரு குரல் கேட்கிறது.

எந்தத் தேசத்திலிருந்து இந்தக் குரல் ஒலித்திருக்கும் என்று தேடுவதற்குப் பதிலாக எந்தத்தேசத்திலிருந்து வந்திருக்காது என்று யோசிக்கத் தொடங்கினேன்....... இலகுவானதைச் செய்யும் நோக்கில்.

## யாருடைய பிரச்சனை?

தமிழ்நாட்டின் காவிரி நதிநீர்ப் பிரச்சனையில் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக கர்நாடக நடிகர், நடிகைகள் உள்ளிட்ட கர்நாடக திரைத் துறையினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதைத்தொடர்ந்து இத்தீர்ப்பு மாற்றப்படக்கூடாது என்பதை வலியுறுத்தி நடிகர் ரஜனிகாந்த் சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என தமிழக பா.ஜ.கா கோரிக்கை விடுத்தது. மொத்தத்தில் விவசாயிகளின் நீர்ப்பிரச்சனை இரு மாநிலங்களின் நடிகர்களின் பிரச்சனையாக மாறிப்போவது பரிதாபம்.

இது இப்படி இருக்க ஈழப் போராட்டத்திற்கு தமிழகத்தில் ஆதரவு திரட்டப் புறப்பட்ட ஒரு கும்பல் (மக்களின் வரிப்பணத்தில்) தமிழகத் திரைத் துறையினரின் ஆதரவை வேண்டி நின்றது. இந்தக் கும்பல் தமிழக திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தால் கௌரவிக்கப்பட்ட கூத்து பத்திரிகைளில் முக்கிய செய்தி. குரங்கு, பாம்பு, வேதாளம் போன்றவற்றை வைத்துத் திரைப்படமெடுக்கும் இராம நாரயணணே இவர்களுக்கு மலர்மாலை அணிவித்தார் என்பது சிறப்புச் செய்தி.

## சும்மா இருப்பதென்பது.....

ஈரானை அதன் பாட்டுக்கு இருக்க நிற்க விடமாட்டார்கள் போல, உலக அமைதி மீது அக்கறை கொண்ட எல்லோரும். தற்பாதுகாப்புக் கருதி முற்கூட்டியே தாக்குதல் நடத்தியே தீருவது என்று கங்கணங் கட்டிக் கொண்டு இருக்கிறது இஸ்ரேல். உலக அமைதியின் மிகப்பெரும் அச்சுறுத்தலாக ஈரான் மாறி வருகிறது, யுத்தம் செய்தாவது ஈரானைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிறார் அமெரிக்க அதிபர். ஈரானது செயற்பாடுகள் கவலையளிக்கின்றன, ஈரானுக்கு எதிராக தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்கிறார் உலகின் மிகப் பெரும் நடுநிலைவாதியான ஐ.நாவின் செயலாளர் நாயகம்.

அமைதியின் காவலர்கள் ஈரானை மட்டுமல்ல அமைதியாக இருக்கும் நாடுகளையும், அமைதியாக இருக்க விரும்பும் நாடுகளையும் நிம்மதியாக இருக்க விடமாட்டார்கள்.

நிம்மதியாக இருக்க இயலாமல் இருக்க உபயம் புரிவது சர்வதேச சமூகம்.

## நினைத்ததும் நடப்பதும்

மக்காவில் 'ஹமாஸ் மற்றும் '.·.பத்தா' அமைப்புக்களுக்கிடையே பேச்சுவார்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததை முழு மேற்குலகமும் மிக உன்னிப்பாக அவதானித்து வந்தது. உடனே எமது பத்திரிகைகள் சர்வதேச சமூகம் பாலஸ்தீனத்தில் அமைதி நிலவ அயராது உழைக்கிறது என்றெல்லாம் புகழ்ந்து தள்ளின. மோதல் தவிர்ப்புக்கான ஒரு உடன்பாட்டுக்கு இரு குழுக்களும் இணங்குவதற்காக நடந்த பேச்சுவார்த்தையில் மேற்குலகம் ஆர்வம் காட்டியது ஏன்? பேச்சுவார்தையின் முடிவில் 'ஹமாஸ், இஸ்ரேலின் இருப்பை ஏற்றுக் கொள்ளும் என எதிர்பார்த்தது மேற்குலகம். முடிவில் அது நடக்காமல் போக பேச்சுவார்தைகள் பற்றிய கதையே அடங்கிப் போனது.

ஆக, எல்லாப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னாலும் வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்கள் ஒளிந்துள்ளன என்பதை இனியும் புரிந்து கொள்ளாமல் கண்ணை மூடிக் கொண்டிருக்க முடியுமா என்ன?

# ஈராக் யுத்தம் நான்கு ஆண்டுகள் முடிவில்

ஈராக் யுத்தம் தொடங்கப்பட்டு நான்கு ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில், கெவின் டில்மேன் என்ற அமெரிக்கச் சிப்பாயினால் எழுதப்பட்ட குறிப்பொன்றின் தமிழ்வடிவம் இது. களத்தில் நிற்கும் அமெரிக்கச் சிப்பாய் ஈராக் போரை எப்படிப் பார்க்கிறான் என்பதை விளங்கவும் நான்காண்டுகால போர் என்ன சாதித்தது என்பதை விளக்கவும் இக்குறிப்பே போதுமானது.

நவம்பர், 6ம் திகதி, "பட்டின்' பிறந்த நாள். அதற்கு அடுத்த நாள் அமெரிக்கத் தேர்தல் வருகிறது. நானும் 'பட்டினும்' இராணுவத்தில் சேருவதற்கு முன்பு பேசிக்கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. ஒப்புதல் கடிதத்தில் கையெழுத்து இடுவதில் உள்ள ஆபத்துகள் பற்றி அவன் பேசினான். நாம் ஒப்புக் கொண்டுவிட்டால் பின்னர் அமெரிக்கத் தலைமை மற்றும் அமெரிக்க மக்கள் தயவில் தான் கீழ்ப்படிந்து வாழ்ந்தாக வேண்டும். நம்து விருப்பத்துக்கு எதிரான திசை வழியில் நாம் துரத்தப்படுவோம். ஒரு சிப்பாயாகப் போராடும் காலத்தில் நமக்கென்று ஒரு குரல் இருக்கப் போவதில்லை. இராணுவத்திலிருந்து வெளியேறும் வரை இது சாத்தியமில்லை என்றெல்லாம் அவன் பேசினான்.

எங்களது குரலை ஒப்படைத்த பின்னர் எவ்வளவோ நடந்து விட்டது.

எப்படியோ ஒரு தேசத்தின் மீது படையெடுக்க அனுப்பப்பட்டோம்.

ஏனெனில் அந்தத் தேசம்

அமெரிக்க மக்களுக்கு நேரடி அச்சுறுத்தலாக இருந்தது

அல்லது உலக மக்களுக்கு நேரடி அச்சுறுத்தலாக இருந்தது

அல்லது பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தது

அல்லது செப்டம்பர், 11 தாக்குதலில் உடந்தையாக இருந்தது

அல்லது நைஜரிலிருந்து அணு ஆயுதம் தயாரிக்கவல்ல யுரேனியத்தை வரவழைத்தது

அல்லது நடமாடும் ஆயுத ஆய்வுக் கூடங்களை, பேரழிவு ஆயுதங்களை வைத்திருந்தது

அல்லது அந்தத் தேசத்தை விடுவிக்க வேண்டிய தேவை இருந்தது

அல்லது ஜனநாயகத்தை நிறுவ வேண்டிய தேவை இருந்தது

அல்லது ஒரு எழுச்சியை ஒடுக்க வேண்டி இருந்தது

அல்லது ஒரு உள்நாட்டு யுத்தத்தை நிறுத்த வேண்டி இருந்தது

நாமே அதை உருவாக்கி இருந்த போதிலும் கூட.

இப்படியான எதாவது ஒரு சாக்கு போக்கு இருக்கவே இருக்கிறது.

எப்படியோ தன்னிடம் இல்லாத ஒன்றைத் தூக்கிப் பிடிப்பதிலும்,

இருப்பதனைத்தையும் கண்டிப்பதிலும் ஈடு படும் ஒரு நாடு என அமெரிக்கா பெயரெடுத்து விட்டது.

எப்படியோ தேர்ந்தெடுக்கப்பட்ட நமது தலைவர்கள்

சர்வதேச சட்டங்களுக்கும் மானுடத்துக்கும்

குழி பறித்திருக்கின்றனர் .

இரகசிய சிறைக்கூடங்களை உலகெங்கிலும் நிறுவியதாலும்

இரகசியமாக மக்களைக் கடத்தியதாலும்

இரகசியமாகக் கடத்தப்பட்டவர்களை காலவரையறையின்றி அடைத்து வைத்ததாலும்

இரசியமாகக்கூட அவர்கள் மீது குற்றம் ஏதும் சுமத்தாததாலும்

இரசியமாக அவர்களைச் சித்திரவதைக்கு ஆளாக்கியதாலும்.

எப்படியோ இந்த வெளிப்படையான சித்திரவ தைக் கொள்கை

இராணுவத்தில் உள்ள சில வீணர்கள் செய்த தவறு என்றாகிவிட்டது. எப்படியோ உள்நாட்டுக்குள்

சிப்பாய்களுக்கு ஆதரவு என்பது ஐந்து வயது மழலைப் பள்ளிக் குழந்தைகளைக்கொண்டு வண்ண மெழுகுச் சித்திரங்களை வரையச்செய்வது அவற்றைக் கடல் கடந்து அனுப்பி வைப்பது

அல்லது கார்களின் மீது ஸ்டிக்கர்களை ஒட்டுவது

அல்லது போர் வீரர்களுக்கான தலைக் கவசத்திற்குள் மேலும்

கூடுதலாக ஒரு இரப்பர் உறைக்காக

காங்கிரஸ் அங்கத்தினர்களைக் கனிய வைப்பது

எனவாகி விட்டது.

ஒரு சிப்பாய் தனது நான்காவது

அல்லது ஐந்தாவது பயணத்தின் போது

தன்னுடன் போராடும் நண்பர்கள் மரணத்தைத் தழுவும் போது

ஒரு ஐந்து வயதுக் குழந்தை வரைந்த வண்ண மெழுகுச் சித்திரத்தையோ

அல்லது காரில் ஒட்டப்பட்டு மழுங்கிபோன ஸ்டிக்கரையோ

பொருட்படுத்துவான் என்றோ ....

தான் பயணிக்கும் ராணுவ வண்டி

ஒரு குண்டினால் ஐம்பது மீட்டர் உயரம் தூக்கி எறியப்பட்டு

காற்றில் மிதக்கையில் துண்டு துண்டாய் உடல் சிதறி,

தோல் உருகி இருக்கையில் ஒட்டும்போது

தலைக்கவசத்தில் ஒட்டப்பட்ட அதிகப்படியான இரப்பர் மெத்தை தன்னைக் காப்பாற்றும் என நம்புவான் எனவோ

நினைத்தாலே சிரிப்புத்தான் வருகிறது.

எது எப்படியோ அதிகம் அதிகமாக சிப்பாய்கள் மரணம் அடைய அடைய

சட்டவிரோதமான ஆக்கிரமிப்பு மேலும் மேலும் நியாயப்படுத்தப்படுகிறது.

தொடர்ச்சி 17ம் ப்க்கம்



ஈராக்கில் அமெரிக்கா இறங்கி நான்காவது வருடம் முடிலவடைலதை எதிர்த்து அமெரிக்க மக்கள் நடாத்திவரும் எதிர்ப்பியக்கத்தில் ஜனாதிபதி புஷ் நிர்வாணப்படுத்தப்பட்டு நிற்கும் கோட்டுப்படத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் எடுத்து செல்கிறார்கள்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# கிறிக்கெட் விளையாட்டில் பணம் பண்ணலும் ஊழலும்

9வது உலகக் கிண்ணத்திற்கான கிறிக்கெட் போட்டி மேற் கிந்திய தீவுகளில் நடைபெற்று வருகிறது, உலகம் பூராவும் கோடிக்கணக்கான மக்கள் இந்த கிறிக்கட் போட்டிக்காக தமது நேரங்காலத்தையும் பணத்தையும் செலவழித்து அதனுள் மூழ்கி வருகின்றார்கள். இந்த கிறிக்கட் வியாதி மேல் மட்டங்களில் இருந்து சாதாரணமானவர்கள் வரை பரவும் ஒன்றாகி விட்டது. தற்போது இரவிரவாக இப்போட்டிகளை தொலைக்காட்சி ஊடாகப்பார்த்து விட்டு மறு நாள் வேலைக்கே செல்ல முடியாது அல்லது ஒழுங்காக வேலை செய்ய முடியாத நிலையிலும் பலர் இருப்பதைக் காண முடிகின்றது. கனவான்களின் விளையாட்டு என வர்ணிக்கப்படும் கிறிக்கெட் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளின் பன்முக லாபங்களுக்காக நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதேவேளை இந்த விளையாட்டை எவ்வளவு தூரத்திற்கு மக்கள் மயப்படுத்த முடியுமோ அவ்வளவிற்கு விரிவுபடுத்தி ஒவ்வொரு நாடுகளிலும் கிறிக்கெட் அடிமைத்தனத்தை மக்களிடையே ஊட்டி வளர்த்தும் வருகின்றனர்.

விளையாட்டுக்கள் எப்பொழுதும் சமூக வளர்ச்சியில் முக்கியமானனவையாகும். மனிதர்களின் உடல் ஆரோக்கியத்திற்கும் மனவளர்ச்சிக்கும் ஆற்றல் வெளிப்படுத்தல்களுக்கும் பரஸ்பர புரிந்துணர்வுகளுக்கும் வெற்றி தோல்விகளுக்கு அப்பாலான மனித உறவுகளுக்கும் நாடுகள் மக்களுக்கிடையிலான நட்பிற்கும் ஆற்றல் அனுபவங்களைப் பெறவும் பகிர்ந்து கொள்ளவும் விளையாட்டுக்கள் அவசியமானவையாகும். அதனாலேயே உலகில் சோஷலிச அமைப்புகள் தோன்றிய கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து விளையாட்டுக்களுக்கு அந் நாடுகளில் மேற் கூறிய அடிப்படைகளில் முக்



கியத்துவம் வழங்கப்பட்டு வந்தன. அதன் காரணமாக சோஷலிச நாடுகளில் விளையாட்டுக்கள் பாரிய அபிவிருத்தி கண்டதுடன் தனித்துவமும் கொண்டவையாகவும் மிளிர்ந்தன.

"நட்பிற்கு முதலிடம் போட்டிக்கு இரண்டாம் இடம்" "ஆற்றல்களுக்கு முன்னால் பாகுபாடுகள் கிடையாது{ "தனிநபர் தன்முனைப்புக்குப் பதிலாக கூட்டுழைப்பை முதன்மைப்படுத்தல்" "வெற்றியை வென்றெடுக்க கூட்டுழைப்பும் தனிநபர் பொறுப்பும்" போன்றவை சோஷலிசத்தின் கீழான விளையாட்டுத்துறையின் அடிப்படைப் போக்குகளாக இருந்தன. இதன் காரணமாக முதலாளித்துவத்துடன் ஒவ்வொரு துறைகளிலும் போட்டியிட்டு தனது சோஷலிச தனித்துவத்தை வெளிப்படுத்தி வந்த சோஷலிச அமைப்பு விளையாட்டுகளிலும் தனது தனித்துவ முத்திரையைப் பதித்துக் கொண்டது. அத்தகைய சோஷலிச நாடுகளில் முதலாளித்துவ கனவான்களின் விளையாட்டான கிறிக்கெட்டை ஒரு விளை யாட்டாக உள்வாங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனை இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் தற்போது இடம் பெற்று வரும் 9வது உலகக் கிண்ணத்திற்கான "சுப்பர்8" கிறிக்கெட் போட்டி என்பதன் பின்னால் உள்ள முதலாளித்துவ வக்கிரங்களை சுட்டிக் காட்டுவதற்கேயாகும். இப் போட்டியில் முன்னெழுந்து நிற்பது பணம் பண்ணுவதேயாகும். விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் சன்மானங்கள் பிறவருமானங்கள் முதல் கிறிக்கெட்ட சூதாட்டங்கள் கையூட்டுகள் வரை பணக்குலியலையே மையப்படுத்தப்படுகின்றன. மேலும் உலக பல்தேசிய நிறுவனங்களான கொக்காகோலா பெப்சி போன்றனவும் ஏனைய பெரும் உலக வணிக நிறுவனங்களும் கிறிக்கெட் மூலம் கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்கின்றன. அதேவேளை மக்களை விளையாட்டின் பெயரால் திசைதிருப்பி கிறிக்கெட்டு

தொடர்ச்சி 17ம் பக்கம்

# போத்தல் நீர் பாவனை நவ நாகரிகமாகிறது.

# அசுத்த நீர் வியாபாரத்தில் கம்பனிகள்




இலங்கை நாடு போதியளவுக்கு நீர்வளம் மிக்க தொருநாடாகும். ஆறுகள் வாவிகள் குளங்கள் மூலம் நன்னீர் கிடைக்கிறது. மேலும் ஆற்று நீர் இல்லாத பிரதேசங்களில் நிலத்தடி நீர் கிடைக் கிறது. சுத்தமாகக் கிடைக்கும் மேற்படி நீர் செயற்கையான சூழல்களினால் மாசடைவது அதிகரி த்து வருகின்றமை மறுப்பதற்கு இல்லை. எவ்வாறாயினும் இலங்கையின் மக்களுக்கும் அவர்களது தேவைகளுக்குமுரிய நீர் முன்பிருந்து கிடைத்து வந்தி ருக்கிறது. நீர் கிடையாத வனாந்தரப் பிரதேசம் என்ற ஒன்று இந் நாட்டில் இல்லை. சில பிரதேசங்களில் வரட்சி நீர் பற்றாக்குறை நிலவு கின்றதென்றால் அதற்கு சூழலை நாசப்படுத்தி வந்தமையே காரணமாகின்றது.

ஆனால் இலங்கையின் நீர்வளத்தை உரியவாறு பயன்படுத்தி விவசாய உற்பத்திக்கும் ஏனைய தேவைகளுக்கும் பயன் படுத்துவதில் ஆளும் வர்க்க அரசாங்கங்கள் அக்கறையற்றும் உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தாதும் இருந்து வந்துள்ளன. இந் நிலையைப் பயன்படுத்தி தற்போதைய தனியார்மய உலகமயமாதல் சூழலில் உலக வங்கியானது தண்ணீரை முகாமைத்துவம் செய்ய வேண்டும் எனக் கூறி தனியார் மயப்படுத்தும் சதித்திட்டத்தை வற்புறுத்தி வருகின்றது, அதனை ஆளும் அரசாங்கம் ஏற்கனவே ஏற்று தண்ணீரைத் தனியார் மயப் படுத்தும் திட்டத்திற்கான சட்ட வரைபையும் தயார்படுத்தி வைத்திருக்கிறது, இதனை எதிர்த்து மக்கள் சார்பாக எழுந்த எதிர்க் குரல்களால் தண்ணீரைத் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகள் தள்ளி வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் தருணம் வாய்க்கும் போது "தேசிய பாதுகாப்பின்" அல்ல "பயங்கரவாதத்தின்" பெயரால் தண்ணீர் தனியார் மயமாக்கப்படும் அபாயம் இருந்தே வருகின்றது, இதுவரையான தாராளமயம் தனியார்மயம் யுத்தத்தின் மறைவில் செய்யப்பட்டமை போன்று இதுவும் நடைபெறவே செய்யும்.

இது இவ்வாறிருக்க இயற்கையாகக் கிடைக்கும் இலங்கையின் நீர் வளத்தைக் கொண்டு பெரிய அளவில் வியாபாரம் அதிகரித்து வருவதை அண்மைக்காலத்தில் காண முடிகின்றது, பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட சுத்தமான குடி நீர் என்ற பெயரில் போத்தல் தண்ணீர் வியாபாரம் ஓகோ என இடம் பெற்று வருகின்றது, இந்தப் போத்தல் நீர் பருகுவது ஒரு நவ நாகரீகமாகவும் மக்கள் மத்தியில் பழக்கப்பட்டு வருகின்றது, இப் போத்தலில் அடைக்கப்பட்ட "இயற்கை நீர்" வியாபாரத்தில் தனியார் கம்பனிகள் போட்டி போ ட்டு நிற்கின்றன. இதில் சில வெளி நாட்டுக் கம்பனிகளும் கூட்டுச் சேர்ந்தும் கொண்டுள்ளன.

இலங்கையில் முன்னூறு வகையான போத்தல் நீர் சந்தைப்படுத்தப்படுகின்றது, ஆனால் இவற்றில் 45 போத்தல் வகைகள் மட்டுமே தரக்கட்டுப்பாட்டு (SLSI) நிறுவனத்தாலும் உணவுக் கட்டுப்பாட்டு பிரிவாலும் (FCU) பரிசோதிக்கப்பட்டு தரமுடையவை என அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மிகுதியான 255 போத்தல் நீர் வகைகள் தத்தமது விருப்பின்படி அழகாக அச்சிடப்பட்ட விளம்பரங்களுடன் நாட்டின் நகரங்கள் முதல் கிராமங்கள் வரை விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் "சுத்தமான நீர்" என்ற ஏமாற்றுதல்களுடன் இப் போத்தல் நீர் வியாபாரம் தனியார் துறைக் கம்பனிகளால் முன்னெடுக்கப்பட்டு கொள்ளை லாபம் பெறப்படுகின்றது, மக்கள் ஏமாற்றப்படுவதுடன் படித்தவர் முதல் பாமரர் வரை ஏமாறுகின்ற அவல நிலையே விரிந்து செல்கிறது. எத்தகைய அசுத்த நீரையும் அழகான பிளாஸ்ரிக் போத்தலில் அடைத்து விட்டால் அது சுத்தமான நீராகி விடும் வித்தையை கம்பனிகள் செய்து வருகின்றன. கவர்ச்சிக்கும் இலகுவான வழிமுறைக்கும் நவநாகரீகத்திற்கும் ஆட்பட்டு மக்கள் போத்தல் நீர் பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர்.



**Cost of producing 1 litre branded bottled drinking water***

| | |
|---|---|
| Cap cost | Rs. 0.25 |
| Bottle cost | Rs. 1.50 - 2.50 |
| Treatment cost | Rs. 0.10 - 0.25 |
| Label cost | Rs. 0.15 - 0.25 |
| Carton cost | Rs. 0.50 |
| Transportation cost | Rs. 0.10 - 0.25 |
| Others (tape and case) | Rs. 0.25 |
| **Total cost (excluding labour, marketing and tax)** | **Rs. 2.85 - 4.25** |
| **Selling cost** | **Rs. 10.0 - 12.0** |

நீரை கொதிக்க வைத்து ஆறிய பின் அருந்துவது அல்லது இளநீர் பருகுவது போன்ற செலவு குறைந்த சுத்தமான நீர் பருகுவதற்குப் பதிலாக போத்தல் நீர் பாவனை ஒரு நவநாகரீகமாகப் பரவி வருகின்றமை மிகவும் பாரதூரமான நோய்கள் பரவும் சுகாதாரப் பிரச்சனையாகி வருகிறது.

தொடர்ச்சி 17ம் பக்கம்

## இந்தியாவின் முதல் இளம் கம்யூனிஸ்ட் தியாகி

14ம் பக்க தொடர்ச்சி......

சிறையிலிருந்த நேரடி சாட்சியங்களின் படி பகத்சிங்கை தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்ல போலீசார் வந்த பொழுது அவர் லெனின் எழுதிய ஒரு நூலைப் படித்துக் கொண்டிருந்தார். 'சிறிது நேரம் காத்திருங்கள்' ஒரு புரட்சியாளன் இன்னெரு புரட்சியாளனிடம் பேசிக்கொண்டிருக்கிறான் என்றார். அவர் குரலில் இருந்த ஏதோ ஒன்றினால் தடுக்கப்பட்ட அதிகாரிகளும் காத்திருந்தனர். சில நிமிடங்கள் கழித்து புத்தகத்தை உயர வீசிய அவர் 'வாருங்கள்' போகலாம் எனக் கிளம்பினார். பின்னர் அவர் சுகதேவ் ராஜகுரு மூவரும் புரட்சிகரப் பாடல் வரிகளைப் பாடியவாறு தூக்குமேடைக்குச் சென்றனர். அங்கிருந்த மாஜிஸ்திரேட்டை நோக்கி 'இந்தியப் புரட்சியாளர்கள் எவ்வாறு மரணத்தை நோக்கி வீரநடை போட்டார்களென்பதைக் காணும் வாய்ப்பு பெற்ற நீங்கள் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள்' எனக் கூறினார். அவர்களது பிணங்களை மக்களிடம் அளிப்பது கூட பேரபாயமாக உணர்ந்த அரசு அவசர அவசரமாக அவர்களது உடல்களை சட்லெஜ் நதிக்கரையோரம் எரித்துப் போட்டது,

ஆங்கிலேயர்களும், காந்தியும், ஓரணியில் நின்று பகத் சிங்கைப் பல வகைகளில் இருட்டடிப்பு செய்ய முயன்ற போதும் உண்மையான தேசபக்தர்களும் மக்களும் அதனை ஏற்க மறுத்து பகத்சிங்கை ஆதரித்தார்கள் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு ஆகிய மூவரும் 1931 கராச்சி காங்கிரஸ் மாநாடு துவங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக தூக்கிலிடப்பட்டவுடன் நாடே கொந்தளித்தது.

கராச்சி காங்கிரஸ் மாநாட்டிற்கு வந்த காந்திக்கு இளைஞர்கள் வழியெங்கும் கறுப்புக் கொடி காட்டினர். காங்கிரசின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டிற்கு மாறாக. வங்காள காங்கிரஸ் கமிட்டி புரட்சியாளர்களை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியது "அந்த நேரத்தில் பகத்சிங்கின் பெயர் இந்தியா முழுவதும் பரவலாக தெரிந்திருந்ததுடன் காந்தியின் அளவிற்குச் செல்வாக்குடனும் இருந்தது என்று கூறுவது மிகையாகாது." எனக் குறிப்பிடுகிறார் காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை எழுதிய பட்டாபி சீத்தாராமையா.

'புரட்சி என்றாலே பகத்சிங் என்று தான் பொருள்' என்றார் சுபாஷ் சந்திரபோஸ் உண்மைதான். நமது நாட்டின் அரசியல் வரலாற்றுப் பொருளில் பகத்சிங்தான் புரட்சியின் அடையாளம். இரண்டு நூற்றாண்டுக்காலமாக விடுதலை வீரர்கள் வென்றெடுக்க முயன்ற விடுதலையை எதிரிகளிடம் யாசித்துப் பெற வேண்டிய பிச்சையாக மாற்றினார் காந்தி. அந்த விடுதலை வீரர்களின் மரபில் வந்த பகத்சிங்கோ கம்யூனிசக் கருத்துக்கள் அளித்த ஒளியில் காந்தியக் காரிருளைக் கிழித்து புரட்சியை மீண்டும் நிகழ்ச்சி நிரலுக்குக் கொண்டு வந்தார்.

கனவில் எழும்பும் தொடர்பற்ற காட்சிப் படிமங்கள் போல் முந்நூறு ஆண்டு வரலாற்றின் துரோகிகளும் எதிரிகளும் ஒரே நேரத்தில் பேசுகிறார்கள். கனவுப் பிம்பங்களின் அடையாளக் குழப்பம் ஏதுமின்றி தெளிவாகத் தெரிகிறது அந்த முகம். மீசை அரும்பாத அந்த இளைஞனின் முகம். இந்தப் பேரிரைச்சலைக் கிழித்துக் கொண்டு தீர்மானமானமாக ஒலிக்கிறது அந்தக் குரல்: "இந்தப் போர் எங்களோடு தொடங்கவும் இல்லை எங்கள் வாழ்நாளோடு முடியப் போவதுமில்லை......"

நன்றி : புதிய கலாச்சாரம் 2006 நவம்பர் இதழ்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை - அமெரிக்க ஒப்பந்தத்தின் அபாயம்!

அமெரிக்க யுத்தக்கப்பல்களிலிருந்து இலங்கை இராணுவத் தேவைகளை பெற்றுக் கொள்ளவும் அமெரிக்க யுத்தக்கப்பல்களுக்கான தேவைகளை இலங்கை வழங்கவும் ஏற்பாடு செய்யும் ஒப்பந்தமென்று கடந்த மாதம் (மார்ச் 5 திகதி) கைச்சாத்திடப்பட்டுள்ளது. அமெரிக்காவுடன் அவ்வாறான ஒப்பந்தங்களை பல நாடுகள் செய்துகொண்டுள் என. அவ்வொப்பந்தங்களை செய்து கொண்ட 90வது நாடு இலங்கை ஆகும். இவ்வொப்பந்தங்களை செய்து கொண்ட பல நாடுகளில் அமெரிக்க இராணுவத்தளங்கள் இருக்கின்றன. அதனால் இலங்கையிலும் அமெரிக்க இராணுவத்தளம் அமையுமா? என்ற விவாதங்கள் நடத்தப்படுகின்றன.

2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதுடன் இலங்கையை சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலுடன் இணைக்கும் நடவடிக்கைகளின் ஒரு அம்சமாக அமெரிக்காவுடன் அமெரிக்க யுத்தக்கப்பல்களுக்கு தேவையானவற்றை இலங்கை வழங்குவதற்கும் இலங்கைக்கு தேவையான இராணுவத் தேவைகளை அமெரிக்க யுத்தக்கப்பல்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்குமான உடன்படிக்கை கைச்சாத்திட ஏற்பாடாகியிருந்தது. அதனை ரணில் விக்கிரமசிங்ஹவால் செய்ய முடியவில்லை. தேசிய இறைமை பற்றிப் பெரிதாகக் கூறும் "மகிந்த சிந்தனைகளை"யின் கீழேயே அவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அவ்வுடன்படிக்கையின் விபரங்களை வெளியிடும்படி வற்புறுத்தியும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஜே. வி. பி கருத்துக்களை வெளியிட்டுள்ளது. ஆனால் வெளிநாட்டுத்தலையீட்டிற்கு வழிவகுக்கும் யுத்தத்திற்கு ஆதரவாக இருந்து கொண்டு ஜே.வி.பி எப்படி அமெரிக்காவை எதிர்ப்பது என்பது தான் புரியாத புதிராக இருக்கிறது, அமெரிக்க எதிர்ப்பு என்பது சொல்லிலும் செயலிலும் இருக்க வேண்டும். சொல்லில் எதிர்ப்பும் செயலில் ஆதரவும் இருக்கும்போது எதிர்ப்பு என்பது போலியானதும் பிழையான உள்நோக்கங்களையும் கொண்டதாகவே இருக்கும்.

வடக்கு கிழக்கில் இடம் பெற்று வரும் யுத்தசூழ்நிலையும் அங்கு இடம் பெறும் மனிதப்பேரவலமும் நாட்டில் தலைவிரித்தாடும் மனித உரிமைகள் மீறல்களும் இலங்கை அரசை மிரட்டி அவ்வுடன்படிக்கையை செய்து கொள்ள அமெரிக்காவிற்கு வாய்ப்பை கொடுத்துள்ளது.

இந்த உடன்படிக்கையின் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இலங்கையின் ஆளும் வர்க்கம் இரட்சகராகக் கொண்டுள்ளது. அவ்வுடன்படிக்கை கைச்சாத்திடும் போது அமெரிக்காவை எதிர்ப்பதாக கூறும்ஜே. வி. பி பேசாமல் இருந்தது. அரசாங்கத்தில் இருக்கும் இடதுசாரிகள் எனப்படும் லங்கா சமாஜகட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் அமைதிக்காக்கின்றனர். தமிழ்த் தரப்பி இருந்து எதுவித எதிர் ப்போ கண்டனமோ எழவில்லை. இங்கே தான் விடயங்கள் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியுள்ளது.

1980 களில் இலங்கையின் ஆளும் வர்க்கம் அமெரிக்காவுடனும் ஐரோப்பிய நாடுகளுடனும் இஸ்ரேலுடன் கொண்டிருந்த உறவு குறித்து கண்டனம் தெரிவித்த இந்திய ஆளும் வர்க்கம் இலங்கையின் இனப்பிரச்சினையில் இனிமேலும் தலையிடாமல் இருக்க முடியாது எனத் தெரிவித்துக் களத்தில் இறங்கியது. ஆனால் அதே இந்தியா இன்று இலங்கை அமெரிக்காவுடன் செய்து கொண்ட இராணுவ உடன்படிக்கை குறித்து மௌனமாக இருப்பது மட்டுமன்றி இஸ்ரேலிடமிருந்து அதிகமான ஆயுதங்களையும் கொள்வனவு செய்கிறது. இந்திய ஆளும் வர்க்கம் இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வாடிக்கையாளராக்கியுள்ளது. இன்று இலங்கையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிகவும் கீழ்ப்படியான வாடிக்கையாளராகியுள்ளது,

பயங்கரவாத எதிர்ப்பு என்ற காரணத்தைக்காட்டி பேரினவாதிகளுக்கு மகிழ்ச்சியூட்டி இலங்கை அரசாங்கத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் அணைத்தும் மிரட்டியும் காரியங்களை சாதித்துக் கொள்கிறது. இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு தீர்வாக அமைய வேண்டுமெனவும் மனித உரிமைகள் மீறப்படக்கூடாது எனவும் உச்சரித்துக் கொண்டு தமிழ்த்தரப்பை திருப்திப்படுதுவதாக அமெரிக்கா நடந்துகொள்கிறது.

அமெரிக்காவிற்கு தென் அமெரிக்காவிலும் மத்திய ஆசியாவிலும் பாரிய எதிர்ப்புகள் கிளம்பியுள்ள வேளையில் தென்னாசியாவில் தன்னுடைய நிலைகளைப் பலப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு நடவடிக்கையே இலங்கையில் அதன் கட்டுப்பாட்டை இறுக்குவதாகும். இதனைச் சாத்தியமாக்கிக் கொள்ள அமெரிக்கா இந்தியாவுடனான காதல் சல்லாபத்தை நன்கு பயன்படுத்தி வருகின்றது. இந்தியாவோ இவ் ஒப்பந்தம் பற்றி விழுங்கவும் முடியாது கக்கவும் முடியாது திண்டாடி வருகிறது. ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் படியே அமெரிக்கா இலங்கையுடன் தொடர்பை கொண்டுள்ளது, உலகமேலாதிக்கம் அதன்குறிக்கோள். இத்தகை தூரநோக்குடைய மூலோபாயத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோ நாட்டின் இறைமைக்கோ இடமில்லை. இதனை சிங்கள ஆளும் வர்க்கமா யினும் தமிழர் தலைமைகளாயினும் எந்தளவிற்கு புரிந்துள்ளார்கள் என் பது பிரதானமாகும்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக கூறிக்கொண்டு இங்கு மனித உரிமைகளை கண்காணிக்க ஒரு அமெரிக்க பிரதிநிதியை நியமிக்கப் போவதாக அண்மையில் அமெரிக்கா கோரியது, இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக அமெரிக்காவின் விஷேட பிரதிநிதியை நியமிக்க விருப்பதாகவும் தெரிவித்தது, ஐ. நா சபையில் இலங்கையின் மனிதஉரிமை மீறல்கள் பற்றி பிரஸ்தாபிக்கப்படவிருப்பதாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தெரிவித்தன. இலங்கைக்கு எதிராக இந் நடவடிக்கைகள் எடுக்கப்படவிருப்பதாக உரத்துக் கூறப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அமெரிக்கா இலங்கையுடன் மேற்படி ராணுவ உடன்படிக்கையை செய்து கொண்டது.

அமெரிக்காவின் சந்தையாக மட்டுமன்றி இராணுவ

தொடர்ச்சி 19ம் பக்கம்

16ம் பக்க தொடர்ச்சி

## போத்தல் பாவனை நீர்

அமெரிக்க பல்தேசிய நிறுவனங்க ளின் கொக்காகோலா, பெப்சி மென்பானங்கள் ஒரு புறத்தால் மக்களது ஆரோக்கிய வாழ்வைப் பாழ்படுத்தி பணத்தை சுளை சுளையாக வாரிச் செல் கின்றன. மறுபுறத்தில் போத்தல்களில் முறையற்ற விதத்தில் அடைக்கப் பட்ட அசுத்த நீர் மூலம் பல்வேறு வகையான நோய்கள் உருவாக்க ப்படுகின்றன. இத்தகைய சீரழிவு நிலையில் உலக வங்கியின் கட்டளைப்படி தண்ணீர் தனியார் மயமாக்கப்பட்டால் மேலும் மிகப் பயங்கர விளைவுகளே உருவாகும். எனவே கேடுகளும் நாசங்களும் வந்த பின் வருந்துவதை விட நோயுமுன் காப்போம் என்ற நிலைப்பாட்டில் மக்கள் விழிப்புடன் செயல் பட வேண்டும். ஒவ்வொன்றைப் பற்றியும் கேள்விகளுடனும் முன் உணர்வுடனும் எச்சரிக்கையுடனும் மக்கள் செயல்பட வேண்டிய ஒரு கால கட்டத்திலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம். எதிலும் பணம் பண்ணுவதே முன்னெழுந்து நிற்கிறது, மக்கள் எக் கேடுகெட்டாலும் பரவாயில்லை. யார் உயிரைக் குடித்தாயினும் கத்தை கத்தையாகப் பணம் கிடைத்தால் போதும் என்ற சமூகச் சூழலையே உலகமயமாதல் என்பது நிலைநிறு த்தி வருகின்றது, இந் நிலையில் தண்ணீரை மோசடி செய்து "சுத்தமான போத்தல் நீர்" எனக் கூறி பணம் பண்ணுவலாவம் பழி எதற்கும் அஞ்சாத மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் கேடுகெட்ட முதலாளித்துவம் தமது வியாபாரத்தை செய்து வருகின்றது, இதற்கு மக்கள் தான் உரிய பதில் கூற வேண்டும்.

16ம் பக்க தொடர்ச்சி

## கிறிக்கெட் விளையாட்டின்

க்கு அடிமையாக்கி இன மொழி மத பிரதேச வக்கிரங்களை வளர்த்தும் விடுகின்றன. இவற்றை இலங்கை இந்திய பாகிஸ்தான் மற்றும் ஆபிரிக்க அணிகள் விளையாடும் தருணங்களில் அவதானிக்க முடிகின்றது.

இவற்றுக்கும் மேலாக இந்த முதலாளித்துவ விளையாட்டானது தமது சுரண்டும் வர்க்க இயல்புக்கு ஏற்றவாறு ஊழல் மோசடி மட்டுமன்றி நேரடி மறைமுகக் கொலைகளிலும் ஈடுபட வைக்கின்றது. அதற்கு அண்மைய உதாரணம் தான் பாக்கிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் பொப் வூல்மரின் படுகொலையாகும். போட்டி நடந்து கொண்டிருக்கும் நேரத்திலேயே அங்குள்ள தங்குவிடுதியில் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டமையானது கெறிக்கெட் விளையாட்டின் பணம் பண்ணும் வக்கிரத்தை அப்பட்டமாக வெளிக்காட்டி நிற்கின்றது. அக்கொலையின் முழு விசாரணைகளும் வெளிவரும் போது கிறிக்கெட் விளையாட்டின் பின்னால் உள்ள அசிங்கங்கள் மேலும் நாற்றமெடுக்கவே செய்யும்.

கிறிக்கெட் விளையாட்டைப் பற்றி ஒருமுறை அறிஞர் பேனார்ட் ஷோ நகைச்சுவையாக கூறுகையில் "பதினொரு முட்டாள்கள் விளையாட பதினோராயிரம் முட்டாள்கள் பார்த்து ரசிக்கின்றனர்" என்றார். ஆனால் இன்று அந்த பதினோராயிரம் முட்டாள்கள் உலகம் பூராகவும் கோடிக்கணக்காகி உள்ளனர். அது மட்டுமன்றி பல்லாயிரம் கோடி போய்களை மக்களிடமிருந்து இந்த கேடு கெட்ட கிறிக்கெட் விளையாட்டு வாரிச் சுருட்டிக் கொள்கிறது, அதனால் லாபம் பெறுவோர் முதலாளித்துவ சுரண்டலாளர்களேயாவர்.

உலக கிறிக்கெட் சபை முதல் உள்நாட்டு கிறிக்கெட் சபைகளில் அங்கம் பெறவும் தலைமைப்பதவியில் அமர்ந்து கொளளவும் பெரும் பெரும் பணமுதலைகள் போட்டியிடுவது ஏதோ நாட்டிற்கும் விளையாட்டிற்கும் சேவை செய்வத ற்கல்ல என்பதைப் புரிந்து கொள்ள அதிகம் விவேகம் தேவை இல்லை. கடந்த சில வருடங்களில் இலங்கை கிறிக்கட் கட்டுப்பாட்டுச் சபைக்கு இடம் பெற்ற தலைவர் பதவிப் போட்டியில் கோடீஸ்வர முதலைகள் முன்னின்று நடாத்திய தகடுதத்தங்கள் அடாவடித்தனங்கள் அரசியல் தலையீடுகள் பற்றி எல்லோரும் அறிவர். ஏன் அவ்வாறான பதவிக்கு இவ்வளவு போட்டி இடம் பெற்றது என்பதை அப்பாவித்தனமான கிறிக்கெட் ரசிகர்கள் கூட்டம் சிந்தித்ததில்லை என்பது தான் சோகம். அந்தளவிற்கு கிறிக்கெட் மோகம் மயக்கம் கொள்ள வைத்துள்ளது.

இன்று ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு ஏற்றவாறு மக்களை மேன்மேலும் கிறிக்கெட்டிற்குள் ஈர்த்து அதன் மீளா அடிமைகளாக்குவதில் பல்தேசிய நிறுவனங்களும் உலக ராட்சத ஊடகங்களும் முன் நிற்கின்றன. இதனை ஒவ்வொரு நாடுகளினதும் முதலாளித்துவ பணம் கறக்கும் நிறுவனங்கள் ஊடகங்கள் மூலமாக மக்கள் மயப்படுத்தும் கைங்கரியத்தில் இறங்கி நிற்கின்றன.

சமூக வாழ்வின் சீரழிவுகளுக்கு பல்வேறு துறைகளின் ஊடாக நச்சுத்தனங்கள் பரப்பப்படுவது போன்று கிறிக்கெட் என்பதும் விளையாட்டுத்துறையில் முதலாளித்துவ லாப நோக்கின் அடிப்படையில் கவர்ச்சிகளுடன் மக்களினயே திணிக்கப்படுகிறது.

## ஈராக் யுத்தம்

15ம் பக்க தொடர்ச்சி ...

தன்னாட்டு மக்களிடம் பொய் பேசுவதும்,
சட்டவிரோதமாக ஒரு தேசத்தை ஆக்கிரமிப்பதும்
மட்டுமே தகுதியாகக் கொண்ட அமெரிக்கத் தலைமை
களத்தில் போராடும் சிப்பாய்களின்
தீரம், ஒழுக்கம், கௌரவம் ஆகியவற்றைக்
களவாட அனுமதிக்கிறது.

எப்படியோ பத்தாண்டுகளுக்கு முன்
சட்ட விரோத ஆக்கிரமிப்பில் பங்குகொள்ளப் பயந்தவர்கள்
தாங்கள் தொடங்கிய சட்டவிரோத ஆக்கிரமிப்பில் போராட
சிப்பாய்களை அனுப்பி வைக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

எப்படியோ போலியான பாத்திரங்களும், விழுமியங்களும்,
தினமும், சகித்துக் கொள்ளப்படுகின்றன.

எப்படியோ அவலத்திலிருந்தும் அச்சத்திலிருந்தும்
ஆதாயமடைவது அனுமதிக்கப்படுகிறது.

எப்படியோ நூறு ஆயிரம் என்றில்லாமல் பத்துப் பதினைந்தாக
சகித்துக் கொள்ளப்படுகிறது சாவு.

எப்படியோ உரிமைச் சாசனமும், அரசமைப்பு சட்டமும்
மீறப்படுவதும் கவிழ்க்கப்படுவதும் சகித்துக் கொள்ளப்
படுகிறது.

எப்படியோ ஆட்கொணர்வுச் சட்டம் ஒத்தி வைக்கப்படுவது
நாட்டின் பாதுகாப்புக்கு உகந்ததெனக் கருதப்படுகிறது.

எப்படியோ சித்திரவதை சகித்துக் கொள்ளப்படுகிறது.

எப்படியோ பொய்கள் சகித்துக் கொள்ளப்படுகின்றன.

எப்படியோ பக்தி, வரட்டு கௌரவம், முட்டாள்தனம் எனப்
பகுத்தறிவு தூக்கி எறியப்படுகிறது.

எப்படியோ அமெரிக்கத் தலைமை மேலும் ஆபத்தான
உலகை உருவாக்க அனுமதிக்கப்பட்டுவிட்டது.

எப்படியோ புனைவு என்பது யதார்த்தத்தை விட முக்கியமான
தாகிவிட்டது.

எப்படியோ தான் எதுவாக இல்லையோ அதனை உயர்த்திப்
பிடிப்பதும் தான் எதுவாக இருக்கிறதோ அதனைக் கண்டி
ப்பதுமான ஒரு தேசமாகி விட்டது அமெரிக்கா.

எப்படியோ உலகில் மிகவும் நியாயமான மிகவும்
நம்பிக்கைக்குரிய மிகவும் மதிக்கத்தக்க ஒரு நாடு -
இப்போது மிகவும் ஏறுமாறான மிகவும் முரட்டுத்தனமான
மிகவும் அஞ்சத்தக்க மிகவும் நம்பத்தகாத நாடுகளில்
ஒன்றாகிவிட்டது.

எப்படியோ அரசியல் தெளிவுள்ள கவனமான எதையும் எளி
தில் நம்பாத நாடு துரிதமான அறியாமை மூலம் பகைமை
யால் நிரப்பப்பட்டு விட்டது.

எப்படியோ அதே திறமையற்ற தன்னைத்தான் வியக்கின்ற
ஒழுக்கமற்ற உள்ளீடற்ற கெடுமதி படைத்த கயவர்கள்
இன்னும் பதவியில் இருக்கிறார்கள்.

எப்படியோ இது சகித்துக் கொள்ளப்படுகிறது. யாருமே இத
ற்குப் பொறுப்பேற்கத் தயாரில்லை.

ஒரு ஜனநாயகத்தில் மக்களின் கொள்கையே தலைவர்களின்
கொள்கையாய் இருக்க வேண்டும்.

எனவே நமது பேரக்குழந்தைகள் இந்தத் தலைமுறையின்
பெரும்பகுதியை தேசத்துக்கும் உலகத்துக்கும் மானுடத்து
க்கும் துரோகமிழைத்தவர்கள் எனப் புதைத்தால் அதிர்ச்சி
அடையாதீர்கள். எப்படியோ அச்சத்தாலும் பாதுகாப்பின்மை
யாலும்

அசட்டையாலும் நாட்டினை தடுக்கப்படாத கேள்வி
முறையற்ற ஒட்டுண்ணிகளுக்குப் பலி கொடுத்து விட்டோம்
என்பதை அவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

அதிர்ஷ்ட வசமாக இன்னும் இந்த நாடு ஜனநாயக நாடாக
இருக்கிறது.

மக்களுக்கு இன்னும் வாக்கு வலிமை இருக்கிறது.

மக்கள் இன்னும் கூட நடவடிக்கையில் இறங்க முடியும்.

அது 'பட்டின் பிறந்த நாளுக்குப் பிறகாவது தொடங்கட்டும்.

**கெவின் ரில்மேன் (Kevin Tillman) தனது சகோதரர் பட்டில் மேனுடன் இராணுவத்தில் 2002 இல் சேர்ந்தார். இருவரும் ஈராக்கிலும் ஆப்கானிஸ் தானிதலும் இணைந்து பணி புரிந்தனர். ஏப்ரல் 22,2004 இல் பேட்ல் கொல்லப்பட்டார். கெவின் 2005 இல் ராணுவத்தி லிருந்து விடுவிக்கப்பட்டார்.**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# அந்நியத் தலையீட்டை கூவி அழைக்கும் அபாயம் !

தேசிய இனப் பிரச்சனையில இலங்கை அரசாங்கத்தின் நோக்கம் என்னவாக இருந்தாலும் நிச்சயமாக அது நியாயமான நிலையான தீர்வைப் பெற்றுத் தருவதல்ல என்று மட்டுஞ் சொல்லலாம். போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று இருதரப்பினராலும் மறுதலிக்கப்படாத ஒரு நிலையில் இரண்டு வாரங்களுள் இரண்டு லட்சம் பேரை அகதிகளாக்கிய ஒரு ராணுவ நடவடிக்கை இந்த மண்ணின் அற்புதங்களுள் ஒன்று.

போர் நிறுத்த உடன்படிக்கையினைக் கிழித்தெறி என்று கோருகிற ஜாதிக ஹெல உறுமயவும் ஜனதா விமுத்தி பெரமுனையும் அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள 'தேசபக்த' 'பயங்கரவாத விரோத' அமைப்புக்களும் போர் நிறுத்த உடன்படிக்கை செயற்பாட்டிலுள்ள போதே இவ்வளவு அட்டூழியங்களையும் நடத்த இயலுமாக இருக்க ஏன் உடன்படிக்கையைக் கிழித்தெறிய வேண்டும் என்று தீவிரமாயுள்ளனர் என்றால் அவர்கள் அமைதி மீளுகிற ஒரு அற்ப வாய்ப்பையும் விரும்பவில்லை என்பது தான்.

அமைதி பற்றியும் போர் நிறுத்தம் பற்றியும் ஒவ்வொருவர் ஒவ்வொன்றைச் சொல்லி வந்தாலும் எல்லாருடைய சொற்களும் செயல்களும் நாட்டை ஒரே திசையில் கொண்டு போகின்றன.

இந் நாட்டிற்குள்ளிருந்து அமைதியை உருவாக்கக் கூடிய ஒரு அரசியல் நிறுவனத்தை உருவாக்குவது பற்றிய அக்கறை எந்தப் பாராளுமன்ற அரசியற் கட்சிக்கும் இல்லை. இது வரை அயலார் குறுக்கீட்டில் அல்லது அயலாரின் தூண்டுதலின் பேரில் எடுக்கப்பட்ட அத்தனை சமாதான நடவ்டிக்கைகளும் பரஸ்பர அவநம்பிக்கையின் மீதும் முடிந்ததால் ஏமாற்றுகிற நோக்கங் களுடனுமே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவநம்பிக்கையானது பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுகிறவர்களிடையிலும் அவர்கள் சார்ந்த அரசியல் நிறுவனங்களுக்கும் இடையில் மட்டுமன்றி நாட்டின் சகல தேசிய இனங்கட்கு மிடையிலான பரஸ்பர சந்தேகமாகவும் அவநம்பிக்கையாகவும் வளர்ச்சி பெற்று வருகிறது. அதைத் தடுக்கிற தேவையோ அக்கறையோ பிரதான அரசியற்கட்சி எதற்கும் இல்லை. ஏனெனில் அது பாராளுமன்ற அரசியலில் இலாபகரமானதல்ல. இந்த இக் கட்டான நிலைமைகட்குள்ளிருந்து. ஒவ்வொரு சமூகத்தையும் மீட்டெடுக்காமல் இந்த நாட்டைப் போரிலிருந்தும் இனப்பிரச்சினையின் விளைவான பூசல்களிலு மிருந்து காக்கவும் உறுதியான முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்லவும் இயலாது. ஆனால் அரசாங்கமும் பிரதான எதிர்க்கட்சியும் ஜே.வி.பியும் தமிழ்த் தலைமைகளும் செய்வதென்ன?



## இன்று ஈராக்கில் நாளை இலங்கையில்



செப்றெம்பர் 11 ஐக் காரணம் காட்டிய அமெரிக்கா உலகமெல்லாம் தனது ஆக்கிரமிப்பு வலையை அகல விரித்துக் கொண்டே போகிறது. ஆ:ப்கானிஸ்தான், ஈராக், சோமாலியா சூடான் என்று விரிந்து கொண்டு போகிற இந்தப் அமெரிக்கப் போர் முயற்சியின் வடிவம் மாறினாலும் அதன் நோக்கமோ அதன் போர் முனைப்போ மாறப் போவதில்லை. சோவியத் யூனியனின் உடைவின் பின்பு அமெரிக்காவிற்குத் தனது ராணுவ விஸ்தரிப்பு வேலைகளைத் தொடருவதற்கு வசதியான ஒரு கருவியாகவே பயங்கரவாதம் இருந்து வருகிறது. அது போலவே இந்தியாவும் தனது மேலாதிக்க விஸ்தரிப்பு நோக்கங்கட்கு வசதியாக உள்நாட்டுப் போர்களையும் இன முரண்பாடுகளையும் பயன்படத்தி வந்துள்ளது.

நமது நாட்டின் பாராளுமன்ற அரசியல் தலைவர்கள் இவற்றையெல்லாம் அறியாதவர்களல்ல. அறிந்து கொண்டே நாட்டை அந்நியர்களிடம் அடகு வைக்கிற வேலை நடக்கிறது, அந்நியக் குறுக்கீடு வேண்டாம் என்றும் நோர்வேயின் சமாதான முயற்சிகள் வேண்டாமென்றும் பிடிவாதம் பிடிக்கிற ஜே.வி.பி. நாட்டின் போர்ச் சூழலை மோசமாக்குவதன் மூலம் அந்நியக் குறுக்கீட்டிற்கு வழி செய்கிறது போக அமெரிக்கா இங்கு குறுக்கிட்டு விடுதலைப் புலிகளை அழித்து விட்டுப் போனால் நல்லது என்ற தோரணையிலும் பேசி வந்துள்ளது. அந்நியப் படைகள் நாம் வா எனும் போது வரவும் திரும்பிப் போ எனும் போது போகவும் அலாவுதீனின் அற்புத விளக்கின் கட்டுப்பாட்டிலுள்ள பூதம் அல்ல. 1977 முதல் இதுவரையிலான இலங்கை அரசாங்கங்கள் எதுவுமே உலகமயமாதலுக்கு எதிரானவையல்ல. அவற்றில் எதுவுமே அமெரிக்காவுடனான இராணுவ உடன்படிக்கைகளை விரும்பாதவையல்ல. இதுவரையும் அமெரிக்காவுடன் ஒரு பூரண இராணுவ உடன்படிக்கை ஏற்படவில்லை என்றால் அது இலங்கை அரசாங்களதோ அமெரிக்காவினதோ தயக்கத்தால் அல்ல. இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்கு அது பகைமையானதாகக் காணப்படும் என்பதாலேயே இன்னமும் அப்படி நடக்கவில்லை. அண்மைக்காலமாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கத்தின் பின்னணியிலேயே இலங்கை- அமெரிக்க இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் இயலுமாகின. ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையிலிருந்து இந்த நாடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்பது பற்றி இப்போதைக்குச் சொல்லிக் கொள்ளக் கூடிய விடயமலாக இல்லை.

இந்தியா குறுக்கிட வேண்டும் என்ற பிரார்த்தனை பேரினவாததரப்பிலிருந்தும் தமிழ்த் தரப்பிலிருந்தும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதையும் தமிழக அரசு யாருடைய நண்பன் என்பது பற்றிய மதிப்பீடுகள் சூதாட்ட விடுதிகளில் உள்ள சக்கரங்களின் சூழற்றி போல மாறி மாறிக் கொண்டுள்ளன. இந்தியா எவரது தரப்பிலும் குறுக்கிடுகிற வாய்ப்பு இப்போதைக்கு இல்லை. என்றாலும் இந்தியக் குறுக்கீடு சமாதானம் என்ற பேரில் நிகழுமாயினும் அது இந்தியாவின் அரசியல் வணிக

தொடர்ச்சி 19ம் பக்கம்

# சேது சமுத்திரத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் வாய்திறக்க மறுக்கும் இலங்கை அரசு !

இந்தியாவினால் முன்னெடுக்கப்படும சர்ச்சைக்குரிய சேது சமுத்திரத்திட்டத்தினால் இலங்கை எதிர் கொள்ளும் பாதிப்புக்கள் தொடர்பாக இலங்கை அரசு தொடர்ந்தும் செயலற்றிருக்கிறது. இத்திட்டம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் அரசியல் திறன் அற்றிருக்கிறார்கள் என்ற முடிவிற்கு வரவேண்டியுள் ளது.

இலங்கையின் அரசியற் தலைவர்கள் அவ்வப்போது இந்தியா சென்று "மரியாதை" செலுத்தத் தவறுவதில்லை. இந்த வகையில் எமது தமிழர் தலைமைகளும் இதற்கு விதி விலக்கல்ல. அவர்களைப் பொறுத்தமட்டில் இருநாடுகளுக்கு மிடையில் தொப்பிள் கொடி உறவுண்டு என்று கூறிக் கொள்வார்கள். ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் சனீஸ்வரனை வணங்குவது போல இந்தியா என்று வணங்கி வருகிறார்கள். தென்னாசியப் பிராந்தியத்தின் 'பெரிய அண்ணனான" இந்தியா தனது நலனுக்கு ஏற்றாற் போல நிபந்தனைகளையும் திட்டங்களையும் திணித்துவந்துள்ளது.

சென்ற வருட இறுதியில் இலங்கை அரசு சேது சமுத்திரக் கால்வாய் தோண்டுவதை மேற்பார்வை செய்வதற்கு கூட்டு சுற்றாடல் முகாமைத்துவ திட்டம் என்ற யோசனையை முன் வைத்தது, இந்த ஆலோசனை தொடர்பாக இந்திய அரசு "மயான அமைதி" காப்பதாக இலங்கை அதிகாரியொருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற வெளிவிவகார அமைச்சர் றோகித்த போகல்லாகம தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்தை புதுடில்லியில் இருந்து ஆரம்பித்தார். அவரது நிகழ்ச்சி நிரலில் சேது சமுத்திரத்திட்டதின் இரண்டாம் கட்டம் பற்றிய பேச்சு எதுவும் உள்ளடக்கப்படவில்லை.

காலஞ்சென்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமரின் காலத்திலேயே சில முன் முயற்சியை மேற்கொள்ள இலங்கையால் முடிந்தது. அவரது காலத்திலேயே 2004 செப்டம்பரில் அமைச்சுக்களுக்கிடையிலான குழுவொன்றை அமைச்சரவை நியமித்தது. இந்தத்திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கங்களை ஆராய்ந்து இந்திய அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடாயிருந்தது, 2005 ஜனவரி, ஓகஸ்ட், 2006 ஏப்பிரல் இரு நாட்டு அதிகாரிகளுக்கு மிடையில் மூன்று சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இந்தப் பேச்சுவார்த்தையென்பது பக்க சார்பாகவே இருந்தது. முன்வைக்கப்பட்ட ஆட்சேபங்களை இந்திய அதிகாரிகள் நிராகரித்தனர். அதுமட்டுமல்ல இலங்கை அதிகாரிகள் தங்கியிருந்த ஹோட்டல் அறைகளில் ஒட்டுக்கேட்கும் கருவிகள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது,

மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் இது தொடர்பாக வினவிய போது எதுவித பதிலும் கிடைக்கவில்லை. புதுடில்லியில் நடைபெறவுள்ள நான்காம் சுற்றுப் பேச்சவார்த்தை தொடர்பாக இந்தியா எதுவித ஏற்பாட்டையும் இதுவரை செய்யவில்லை. வெளிவிவகாரச் செயலாளர் பாலித்த கோகனவிடம் இது பற்றி வினவிய போது "நாங்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் 'என பட்டும் படாமலும் பதிலளித்துள்ளார்.

இதற்கிடையில் சேது சமுத்திரக்கால்வாய்த் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் சென்றவருடம் டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டது, இராமர் அணை எனப்படும் பகுதியை உலக அரிய பொக்கிசமாக ஐ. நா ஏற்கனவே பிரகடனப் படுத்தியுள்ளது, மன்னார் வளைகுடாவுக்கு அப்பால் உள்ள இந்தப்பகுதியில் அரிய கடல் உயிரினங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான கடல் வாழ் உயிரினங்கள் பூமியில் வேறு எந்தப் பகுதியிலும் காணப்படவில்லை என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது. ஆனால் இந்த இராமர் ஆணை எனப்படும் பவளப் பாறைகள் அகற்றப்பட்டால் மேற் கூறிய அரிய உயிரினங்கள் அழிந்து கொள்ளவே செய்யும். மேற்படி கால்வாய் வெட்டி முடிக்கப்பட்ட பின் இந்து சமுத்திரத்தில் மீண்டும் ஒரு சுனாமி ஏற்படும் பட்சத்தில் பெரும் அழிவு ஏற்பட இடமுண்டு. அத்தகைய பாரிய அழிவ க்கு இலங்கை குறிப்பாக வடக்கு கிழக்கே இரையாகும் வாய்ப்பே உண்டு. கால நிலை மாற்றமும் ஏற்பட வாய்ப்புண்டென இந்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுமட்டுமல்ல இந்திய மத்திய அரசு தூத் துக்குடியிலிருந்து 150 கி. மீ தொலைவில் கூடங்குளம் பகுதியில் அணு எரிபொருளுக்கான செறிவூட் டும் வசதியை நிர்மாணித்து வருகின்றது, அச் செறிவுட்டப் பட்ட எரிபொருளை இந்தக் கால்வாய் ஊடாக இந்தியாவின் கிழக்கு கரைக்கு கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளனர். அவ்வாறு ஒவ்வொரு தடவையும் எரிபொருளைக் கொண்டு செல்லும் போது இந்தியா இலங்கையின் அனுமதியைப் பெறவேண்டும். அப்படிச் செய்வார்களா? இந்தக் கால்வாயில் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்ட தளமொன்றை ஏற்படுத்தவும் இந்தியா திட்டமி ட்டுள்ளது. என்றும் அறிய முடிகின்றது.

இலங்கை அரசு இந்த விடயத்தை சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்லவேண்டும் அல்லது இருநாடுகளுக்கு மிடையே பேச்சு வார்த்தை மூலமான தீர்வை எட்டவேண்டும். இலங்கையில் நிலவும் இன அழிப்பு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்கமானது இந்தியாவுக்கும் பணிந்து போய் கொண்டிருக்கிறதையே நாம் காண்கிறோம்.

2006 டிசம்பர் 18ம் திகதி இராமர் அணை எனப்படும் பகுதியைப் ஆழப்படுத்தும் வேலைமை இந்தியா ஆரம்பித்தது. இந்தப் பகுதியானது 30 கி. மீ நிளமும் மூன்று கி. மீ அகலமும் கொண்டது இப் பகுமி 17 ஆயிரத்திலிருந்து 25000 வருட நீண்ட ஸ்ரீஸ்ரீவயது டையதென அமெரிக்க நிறுவனமான நாசா (NASA) தெரி விக்கிறது.

இதுவரை இந்தப் பகுதியில் கால்வாய் தோண்டும் முன்னேற்றம் 1.28 வீதம் மட்டுமே. பெப்ரவரி 26 வரை மூன்று பகுதிகளை ஆழப்படுத்தும் பணியில் ஒரு பகுதியில் மட்டுமே

தொடர்ச்சி 19ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மாக்சிசம் காட்டிய வர்க்கப் போராட்டக் கண்ணோட்டமே எனது எழுத்துக்களை வழி நடாத்திச் செல்கிறது

## மூத்த எழுத்தாளர் செ.கணேசலிங்கன்

நான் பகுத்தறிவு சீர்திருத்தம் என்பனவற்றின் மீது ஆர்வம் கொள்ள நேர்ந்த இளவயதுச் சூழலிலேயே மாக்சிசத்தையும் அதன் வர்க்கப் போராட்டக் கண்ணோட்டத்தையும் உள்வாங்கிக் கொண்டேன். அத்தகைய தளத்திலிருந்தே ஐம்பதுகளின் ஆரம்பம் முதல் இலக்கியத்தைக் கற்றும் எழுதியும் வந்துள்ளேன். இன்றைய முதுமையடைந்த நிலையிலும் மாக்சிசம்– வர்க்கப் போராட்டம்– விஞ்ஞான சோஷலிசம் மீதான நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் எவ்வகையிலும் குறைவடையவில்லை. எத்தகைய நவீன தத்துவங்கள் கோட்பாடுகள் என்று முன்வைக்கப்பட்டாலும் அவை மாக்சிசம் காட்டும் தெளிவான சமூகப் பார்வைக்கு இணையாகவோ பிரச்சினைகளின் தீர்வுக்கோ வழி காட்டமுடியாது.

அந்த அடிப்படையில் எனது இலக்கிய சமூக எழுத்துக்கள் வழிநடந்து வந்துள்ளன. இது வரை 45 நாவல்கள் 150 சிறுகதைகள் உட்பட 300க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளேன். அவற்றில் எல்லாம் நமது சமூகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றியும் அவற்றின் முர ண்பாடுகள் பற்றியும் தீர்வுக்கான திசை காட்டல் சம்மந்தமாகவும் எழுதி வந்துள்ளேன். அவற்றை ஏற்றுக் கொண்டவர்கள் எதிர்த்த வர்கள் விமர்சனம் செய்தவர்கள் அன்றும் இருந்தார்கள்இ இன் றும் இருக்கிறார்கள். அத்தகைய கருத்துகளில் இருந்து நான் நிறையப் படித்திருக்கிறேன். ஆனால் எனது அடிப்படை நிலைப்பாடான மாக்சிசத்திலிருந்து வழி விலகிச் செல்லவில்லை. எமது எழுத்துக்கள் யதன்தத்தை அடி நாதமாகக் கொண்டன.

இத்தகைய சமூக இலக்கியத் தளத்திற்கு பேராசிரியர் கைலாசபதி வழங்கிய பங்களிப்பு பாரியதாகும். அவரது ஆக்கங்கள் அனைத்தும் இன்றைய இலக்கிய சூழலுக்கு படிக்கப்பட வேண்டியவை. கைலாசபதியின் எழுத்துக்களையும் இலக்கியக் கோட்பாடுகளையும் தமிழகத்தில் அறிமுகப்படுத்தி அதன் மூலமான தாக்கங்கள் அங்கு உருவாக்குவதற்கு அவரோடு இணைந்து என்னாலான முயற்சிகளை அன்றிலிருந்து செய்து வந்தேன் என்பது எனது எழுத்துலக வாழ்வுக்கு திருப்தி தருகின்றது.

மேற்கண்டவாறான சாராம்சத்தை உள்ளடக்கிய முக்கால் மணி நேர உரை ஒன்றினை மூத்த இடதுசாரி எழுத்தாளரான செ. கணேசலிங்கன் அண்மையில் கொழும்புத் தமிழ் சங்கம் நடாத்தி வரும் “அற்றைத் திங்கள்” இலக்கிய நிகழ்வில் கலந்து கொண்டு வழங்கினார். கலாநிதி வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் இலக்கிய நிகள்வில் இலஙகையின் மூத்த முற்போக்கு இடதுசாரி எழுத்தாளரான கணேசலிங்கனது அன்றைய உரை பலருக்கு உற்சாகத்தையும் சிலருக்கு ஆச்சரியத்தையும் பின்நவீனத்துவ குழப்ப இலக்கியகாரருக்கு கோபம் கலந்த எரிச்சலையும் கொடு த்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

பின் நவீனத்துவக் குழப்பங்களுக்கு ஆளாகி மார்க்சிசத்தையும் அதன் இலக்கியக் கோட்பாட்டையும் கண்டனம் விமர்சனம் செய்து வருபவர்களில் ஒருவரான க. சண்முகலிங்கம் மேற்படி கணேசலிங்கனது உரைக்குப் பின்னான கலந்துரையாடலில் தனக்கே உரிய குழப்பக் கருத்தை முன்வைத்தார். கணேசலிங்கனது இலக்கியப் படைப்புலிகளில் வரும் வர்க்கக் கண்ணோட்டம் என்பது எண்பதுகளுக்கு முன்பு பொருந்தக்கூடியதாக இருநதிருக்கலாம். ஆனால் எண்பதுகளுக்குப் பின் வர்க்கப் போராட்டம் காலாவதியாவிட்ட சூழலில் அந்த இலக்கியத்தால் பயன் இல்லை என்றும் தனது “அறிவுப் பெருக்கத்தை” அவிழ்த்துவிட்டார். வர்க்கப் போராட்டம் முடிவடைந்து விட்டது என்ற கண்டு பிடிப்பு சண்முகலிங்கம் போன்ற முன்னாள் மாக்சிச சார்பு இடதுசாரி வேடம் தாங்கிய சில புத்திஜீவிகளின் கண்டு பிடிப்பல்ல. மேற்கிலிருந்து மாக்சிசத்திற்கு விரோதமாகவும் ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்வதற்காகவும் தோற்றுவிக்கப்பட்ட பின் நவீனத்துவத்தின் கண்டு பிடிப்புகளில் ஒன்றேயாகும்.அதனைப் பழக்கப்பட்ட கிளிப்பிள்ளைகள் போன்று ஒப்புவித்து வர்க்கப் போராட்டம் காலாவதி யாகி விட்டது. என்று கூற முற்படுவது புத்திஜீவித மேதாவித்தன மாகும். ஈழவேந்தன் போன்ற பழமைவாதப் பித்தாளர்கள் கூறினால் அது அவர்களுக்கு விளங்காத ஒன்று என விட்டு விட லாம். ஆனால் பேராசிரியர் கைலாசபதி உயிரோடு இருக்கும் வரை தம்மை மார்க்சிச இடதுசாரி பொதுவுடமை சார்பானவர் களாக நிலை நிறுத்திய சண்முகலிங்கம் போன்றோர் தத்தமது வர்க்க வளர்ச்சிக்கு ஏற்ப உயர்வு பெற்று வர்க்கப் போராட்ட த்தை மறுப்பது எதுவும் புதினமாகக் இருக்கமுடியாது. அதே வேளை மார்க்சிசம் காட்டும் வர்க்கம் போராட்டம் என்பதன் தத் துவார்த்த அரசியல் நடைமுறைகளின் அடிப்படைகளை என் றுமே இவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதையே அவரது கூற்று வெளிப்படுத்தியது.

மேலும் ஈழவேந்தன், கூறுகையில் சாதி, வர்க்கம் என்பதெல்லாம் எப்போதோ தமிழர்களிடமிருந்து அற்றுப்போய் விட்டது என்ற சிரிப்புக்கிடமான கருத்தைக் கூறினார். அத்துடன் கைலாசபதி இன்றிருந்தால் சிவத்தம்பியைப் போல தங்களுடன் தான் இணைந்திருப்பார் என்ற இரட்டைச் சிரிப்பை வரவழைக்கும் கோமாளித்தனக் கருத்தைக் கூறினார்.

மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் நீர்வைப் பொன்னையன், மேமன்கவி, தேவராஜா ஆகியோர் க. சண்முகலிங்கம் கூறிய வர்க்கப் போராட்டம் காலாவதியாகிவிட்டது என்ற கருத்தை வன்மையாக மறுத்துரைத்ததுடன் ஈழவேந்தனின் புலம்பலையையும் புறம் தள்ளிக் கொள்ளும் அபிப்பிராயம் கூறினர். டெமினிக் ஜீவா, கே.எஸ். சிவகுமாரன் உட்பட கருத்துக்களை பகிந்து கொண்டனர்.

மூத்த இடதுசாரி எழுத்தாளர் கணேசலிங்கனின் எழுத்துக்களில் அவ்வப்போது முரண்பாடு கண்டவர்கள் கூட அன்றைய அவரது உரை இடதுசாரி இலக்கியத்திற்கு வலுவூட்டும் அம்சங்களைக் கொண்டிருந்ததை சுட்டிக் காட்டவும் வரவேற்கவும் செய்தனர்.

அவதானி ஆர். எஸ்

18ம் பக்க தொடர்ச்சி

சேது சமுத்திரத்திட்டத்தின்

ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சேது சமுத்திரம் கோப்பறேசன் வெளியிட்ட தகவலின்படி மொத்தம் எட்டு கோடி இருபது இலட்சம் கியூபிக் மீட்டர் ஆழப்படுத்த வேண்டிய இடத்தில் ஒரு கோடி பதின் நான்கு இலட்சத்து முப்பதாயிரம் கி. யூபிக் மீட்டர் பகுதியே ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மன்னார் குடாவில் தற்போது நிலவும் மிதச் சூடான நீரானது மீன் இனங்கள் ஜீவிப்பதற்கு உகந்த சூழலாகும். திட்டமுடிவில் வங்காளவிரிகுடாவிலிருந்து வரவுள்ள குளிர் நீரால் மீன் உற்பத்தி பாதிப்புக்குள்ளாகும். கடல்வளச் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக இலங்கை அரசு மௌனம் காத்து வருகின்றது, வடக்கு கிழக்குத்தானே பாதிக்கப்படப் போகின்றது என்ற பேரினவாத உள்நோக்கமும் ஒரு காரணமாக இருக்கலாம். அத்துடன் இந்தியாவைத் தட்டிக் கேட்கும் துணிவு இல்லாமலும் இருக்கலாம். ஆனால் இலங்கை மக்கள் அனைவரும் இதனைத் தட்டிக் கேட்காது மௌனமாக இருக்க முடியாது.

இச் சேது சமுத்திரத்திட்டம் பற்றி நாம் புதிய பூமியில் தொடர்ச்சியான கட்டுரைகளைப் பிரசுத்து அதன் அபாயம் பற்றி எடுத்துக் கூறி வந்துள்ளோம். அதேவேளை சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தை முன்னெடுப்பதிலும் நமது பங்களிப்பை வழங்கியும் வந்துள்ளோம். ஆதலால் இப்போது இரண்டாம் கட்டத்திற்குள்புகும் இச் சேது சமுத்திரத்திட்டத்தின் பாதிப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி இலங்கை அரசைப் பேச வைப்பது அவசியமானதாகும். இல்லையெனில் எதிர்கால அழிவுகளுக்கு வடக்கு கிழக்கு மக்கள் மட்டுமன்றி முழு இலங்கை மக்களுமே பாரியவிலை கொடுக்க வேண்டியே வரும்.

–சிறீ–



வெளிவந்து விட்டது
தாயகம்
இதழ் 58
விலை 50/=




விற்பனையாகிறது
பின்நவீனத்துவம்
(கட்டுரைகள்)
விலை 180/=

இலங்கையில்
17ம் பக்க தொடர்ச்சி .

நடவடிக்கைகளுக்காகவும் இலங்கை மண் பயன்படுத்தப்படவிருக்கிறது, அதற்கான அடித்தளங்களை அமெரிக்கா இட்டுவருகிறது.

பெயர் போன இடதுசாரிகள் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு மௌனம் சாதிக்கின்றனர். எதிர்ப்பை தெரிவிக்கக்கூடிய இடதுசாரிகள் ‘இடதுசாரிப் புலிகளாக’ ‘பயங்கரவாதிகளாக’ ‘தேசத்துரோகிகளாக’ காட்டப்படுகின்றனர். அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவருகிறது.

இந்நிலையில் இலங்கையில் அமெரிக்காவின் படைத்தளம் அமைக்கப்படலாம். டியாகோ கார்ஷியத் தீவிலிருந்து அமெரிக்கத் துருப்பினர் வெளியேறும் போது மற்றொரு தளமாக இலங்கை அமையப் போகின்ற ஆபத்து வலுவடைகிறது. இப்போதே இலங்கை மக்கள் எதிர்வரப் போகும் ஆபத்தைதடுக்க தயாராகாது விட்டால் இலங்கை அமெரிக்கக் கொலனியாகி விடுவதை தடுக்க முடியாது.

## அரசியல் சாரா புத்திஜீவிகள்

ஒட்டோ ரெனே கஸ்ட்டில்லோ [1936-1967]

ஒருநாள்
என் நாட்டு
அரசியல் சாரா புத்திஜீவிகளை
எம் எளிமையான மக்கள்
குறுக்கு விசாரணை செய்வர்.
தன்னைச் சிறுகச் சிறுக இழந்துகொண்டிருந்த
நெருப்பென மெதுமெதுவாக
தமது தேசம் சாகையில்
அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்
என்று கேட்கப்படுவர்.

அவர்களின் உடைகளைப் பற்றியோ
மதிய உணவையடுத்த
நீண்ட உறக்கத்தைப் பற்றியோ
யாரும் அவர்களிடம் கேட்கமாட்டார்.
அவர்களின் சர்வதேசக் கருத்துக்களைக் கொண்ட
மலட்டுச் சிந்தனைகளைப் பற்றிக் கூட
அறிய எவரும் ஆவலாக இரார்.
அவர்களது உயர் வருமானங்கள் பற்றி
யாருக்கும் அக்கறையில்லை.

தங்களில் ஒருவர்
கோழைத்தனமாகச் சாகத் தொடங்கையில்
கிரேக்கப் புராணங்களைப் பற்றியோ
அவர்களின் சுய வெறுப்பைப் பற்றியோ
அவர்களிடம் எதுவுங் கேட்கப்படமாட்டாது.

முழுப் பொய்யின் நிழலிலே பிறந்த
அவர்களின் அபத்தமான
நியாயப்படுத்தல்களை பற்றி
எதுவுமே கேட்கப்படமாட்டாது.

அன்று
அரசியல் சாராப் புத்திஜீவிகளின்
புத்தகங்களிலோ கவிதைகளிலோ இடம்
பெற்றிராராயினும்
அவர்களுக்கு பாணும் பாலும் முட்டையும்
தினமும் வழங்கி
அவர்களின் வாகனங்களை ஓட்டித் திரிந்து
அவர்களின் நாய்களையும்
தோட்டங்களையும் பராமரித்து
அவர்களுக்காகவே வேலை செய்த
அந்த எளிமையான மனிதர்கள்
வருவார்கள்
வந்து கேட்பார்கள்.

ஏழைகள் துன்பப்படுகையில்
அவர்களின் இளமையும் வாழ்க்கையும்
எரிக்கப்படுகையில்
நீங்கள் என்ன செய்தீர்கள்?

என் இனிய நாட்டின்
அரசியல் சாரா புத்திஜீவிகளே
அப்போது உங்களால்
விடையளிக்க இயலாது.
உங்கள் குடலை
மௌனக் கழுகு தின்னும்.
உங்களது இழிநிலை
உங்களது ஆன்மாவை கொத்தும்.
உங்கள் அவமானத்தில்
நீங்கள் ஊமையாகிப் போவீர்கள்.

குவாட்டமாலாவில் பிறந்த இவர் ஒரு புரட்சியாளனாகவும் கெரில்லாப் போராளியாகவும் கவிஞராகவும் திகழ்ந்தவர். 1954இல் ஜேக்கபோ ஆர்பென்சின் (Jacobo Arbenz) ஜனநாயக அரசை சி. ஐ. ஏ சதிப்புரட்சி மூலம் ஆட்சி கவிழ்ப்பு செய்த வேளை எல் சால்வடோருக்குத் தப்பியோடினார். 1957 இல் சர்வாதிகாரி ஆர்மாஸ்சின் மரணத்தின் பின் சொந்த நாட்டுக்குத் திரும்பி உழைப்பாளர் கட்சியின் தீவிர செயற்பாட்டாளரானார். பரிசோதனை அரங்கு? (Experimental Theater) என்ற புதிய அரங்கு முறையொன்றைத் தோற்றுவித்தார். 1967 இல்
இவர் கைது செய்யப்பட்ட போதும் அங்கிருந்து தப்பி ஐரோப்பாவிற்கு தப்பிச் சென்றார். ஒரு வருடம் கழித்து குவாட்டமாலாவின் புரட்சிகர கெரில்லாஇயக்கங்களுடன் இரகசியமாக இணைந்து கொண்டு சகப்பா மலைகளில் (Zacapa mountains) இருந்து நாட்டை விடுவிப்பதற்காக போராடிய இவர் 1967 இல் படையினரால் கைது செய்யப்பட்டார். கொடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் உயிருடன் எரிக்கப்பட்டார்.

நன்றி - தாயகம்

தமிழில் -நிலங்கே

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

மார்ச்சி - ஏப்ரல் 2007

# புதிய பூமி

இணையத் தளம் : website: www.ndpsl.org.

புரட்சி என்பது இரத்த வெறி கொண்ட மோதலாகத் தான் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. தனி மனிதர்கள் வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்கும் அதில் இடமில்லை. அது வெடிகுண்டுகள் துப்பாக்கிகள் மீதான வழிபாடல்ல. புரட்சி என்பதன் மூலம் வெளிப்படையான அநீதியை அடிப்படையாகக் கொண்ட இந்த சமூக அமைப்பு மாற்றப்பட வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம்.

பகத்சிங்




# ஏகாதிபத்தியச் சுரண்டலின் விளைவான ஏற்றத்தாழ்வுகள்

உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் செல்வத்தை மேற்குலகிற்கும் வறுமையை ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் தந்து கொண்டிருக்கின்றது.



















வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரிண்ட் சிஸ்ரம், HL. 1/2 டயஸ், கொழும்பு 12.